கல்கி



ALKI ஜனவரி 11, 1953 4 அணா



அவளுடைய
அழகான பற்களை
ஒரு காலத்தில்
எல்லோரும்
போற்றிவந்தார்கள்


...ஆனால் இப்பொழுது
அவளுக்கு

சிரிக்கவே அச்சமாயிருக்கிறது!

ஈறுகளை அசட்டைசெய்தால் பேராபத்து ஏற்படலாம். இன்று உங்கள் பற்கள் எவ்வளவு கவர்ச்சியுடையதாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தாலும் நாளடைவில் ஈறு வியாதிகள் அவைகளை அழித்துவிடும். ஆரோக்கியமான பற்களை ஆரோக்கியமான ஈறுகளில் இருக்கச்செய்ய ஒரு வழிதான் உண்டு—அதுதான் தினமும் எஸ். ஆர். டூத் பேஸ்ட் உபயோகிப்பது. உலகெங்கும் பல் வைத்தியர்கள் ஈறு வியாதிகளை சிகிச்சைசெய்ய உபயோகிக்கும் ஸோடியம் ரிஸினோலியேட்* இந்த டூத் பேஸ்ட் ஒன்றில்தான் இருக்கிறது. எஸ். ஆர். டூத் பேஸ்ட் உங்களுக்கு இரட்டிப்பு பாதுகாப்பளிக்கிறது—உறுதியுள்ள ஆரோக்கியமான ஈறுகளில் பற்களை ஒழுங்காகவும் வெண்மையாகவும் இருக்கச்செய்கிறது. உங்களுடையவும் உங்கள் குடும்பத்தினருடையவும் க்ஷேமத்தைக்கோரி இன்றே எஸ். ஆர். டூத் பேஸ்ட் உபயோகிக்க ஆரம்பியுங்கள்



எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகித்து உங்கள் சிரிப்பை கவர்ச்சியுடையதாகச்செய்யுங்கள்



பெரிய சைஸில் இப்பொழுது கிடைக்கிறது

* ஸோடியம் ரிஸினோலியேட் பாக்டீரியாவை எதிர்ப்பதோடு பாக்டீரியாவினால் ஏற்படும் வியாதிகளைத் தடுக்கும் சக்தியையும் அளிக்கிறது.

டி. அண்டு டபிளியு. கிப்ஸ் லிமிடெட், லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தவை GSR. 94-50 TM

கல்கி

பொருளடக்கம்

மலர் 12 | **1953 ஜனவரி 11** | நந்தன ஆண்டு மார்கழி 28

இதழ் 24

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார். | இதழ் 24

எங்கும் சமாதானம் என்பதே பேச்சு!

ஜெனரல் ஐஸன்ஹோவர் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் படாததுமாகக் கொரியாவுக்குப் பறந்து ஓடினார். பிறகு மின்னல் வேகத்தில் போன வழியே திரும்பி வந்து விட்டார்.

கொரியா யுத்தத்தை மேற்கொண்டு மும்முரமாக நடத்தி ஒரு முடிவு காண்பதற்காக அவர் அந்த நாட்டுக்குச் சென்றாரா? அல்லது மேற்படி யுத்தம் நின்று சமாதானம் ஏற்படுவதற்கான வழியைக் கண்டு பிடிப்பதற்காகச் சென்றாரா?—இவ்விரண்டில் அவரது நோக்கம் என்ன என்பது இதுவரையில் மர்மமாகவே இருந்து வருகிறது.

இச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து விலகப் போகும் ட்ரூமனும், சீன பிரதம மந்திரி சௌ என் லாயும் ஏக காலத்தில் கொரியா போரைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். கொரியா யுத்தம் மேற்கொண்டு தீவிரமான கட்டத்தை அடையும் பட்சத்தில், மூன்றாவது உலக மகா யுத்தம் மூண்டு விடுவது நிச்சயம் என்று அவர்கள் கூறி யிருக்கிறார்கள்.

அதே சமயத்தில் பல திசைகளிலிருந்தும் சமாதான முழக்கங்கள் செவியைத் துளைத்து வருகின்றன.

சில தினங்களுக்கு முன் சீனாவின் தலைநகரான பீகிங் மாநகரில் பதினோரு நாட்கள் வரையில் ஆசியா, பசிபிக் பிரதேச சமாதான மகாநாடு நடந்தது. அந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளில் சிலருக்கு ருஷ்யா உலக சமாதானப் பரிசுகள் வழங்கி யிருக்கிறது. உலக சமாதானத்தில் இவ்வளவு அக்கறை கொண்டிருக்கும் சீனா, ருஷ்யா இவ்விரண்டு நாடுகளும், கொரியா போரை முடித்து, உலக மகா யுத்தத்தைத் தவிர்க்கும் நோக்கத்துடன் இந்தியா ஐக்கிய நாடுகள் மகாசபையில் கொண்டு வந்த தீர்மானத்தை ஏன் அடியோடு நிராகரித்து விட்டன என்பதுதான் தெரியவில்லை!

*　　　　*　　　　*　　　　*

மற்றொரு மகா யுத்தம் மூண்டால் உலகம் என்ன பாடு படும் என்பதைக் குறித்துத் திகில் அடையாதவர்கள் இல்லை.

எனவே, அத்தகைய யுத்தங்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்குப் பாரத நாட்டின் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு அரிய யோசனை கூறி யிருக்கிறார்.

"உலக நாடுகள் காந்திய வழியைப் பின்பற்ற முயற்சிக்க வேண்டும்; அதாவது பரஸ்பரம் நிலவி வரும் துவேஷத்தையும் குரோதத்தையும் ஒழிக்க வேண்டும். துவேஷமும் குரோதமும்தான் யுத்தத்தின் விதைகளாகும். உலக நாடுகளின் தலைவர்கள் அவற்றை அறவே ஒழித்துவிட்டுப் பிரச்னைகளை ஆராய முற்படுவார்களாயின் உலக அமைதி உண்டாவதற்கு வழி ஏற்படும்."

சென்ற திங்கட்கிழமை புது டில்லியில் உலக அரங்க மகாநாட்டை ஆரம்பித்து வைத்த ஜவாஹர்லால்ஜி மேற்கூறிய விதம் குறிப்பிட்டார்.

பாரத நாட்டின் அருமைத் தலைவர் அவ்வாறு கூறி யிருப்பது வெறும் வாசா கைங்கர்யம் அல்ல; காந்தி மகானின் தலைமையில் பாரத நாடு அனுஷ்டான பூர்வமாகக் காட்டிய வெற்றிகரமான முறையைத்தான் உலக நாடுகள் பின்பற்ற வேண்டும் என்று அவர் கூறி யிருக்கிறார்.

இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமான காலத்தில் ஜெர்மனி உள்பட வல்லரசுகளின் தலைவர்களுக்கு மகாத்மா காந்தி அவ்விதமே யோசனை கூறி யிருந்தார். அந்த யோசனைக்கு வல்லரசுகள் செவி மடுத்திருந்தால், இன்றைய உலகில் பஞ்சமும் பாதகமும் மறைந்து, பாலும் தேனும் வழிந்தோடிக் கொண்டிருக்கும்.

ஆனால் ஹைட்ரஜன் குண்டு உற்பத்தியிலும் துவேஷப் பிரசாரத்திலும் தீவிரமாக ஈடுபட்டுள்ள வல்லரசுகளின் செவிகளில் நம் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவின் அரிய யோசனை விழுவதற்கு இடம் உண்டா என்பது சந்தேகம்தான்.

குட்டை குழம்புகிறது!



ஆந்திர ராஜ்யம் ஆரம்பமாகும் சமயத்தில் ஆந்திரத் தலைவர்கள் தங்கள் வேற்றுமைகளைக் கைவிட்டு ஒற்றுமையடைய வேண்டுமென்று டாக்டர் ராதாகிருஷ்ணன் வேண்டிக் கொண்டார். அவருடைய வேண்டுகோள் நிறைவேறுவதாக!

சங்கீத 'சதஸ்'

"பூ என்றும் சொல்லலாம், புய்ப்பம் என்றும் சொல்லலாம், ஐயா சொல்லுகிற மாதிரியும் சொல்லலாம்" என்று தோட்டக்காரன் கூறியதாக ஒரு கதை உண்டு. அவன் கூறியது முழு உண்மை. பெயரை எப்படிச் சொன்னால் என்ன! பொருள் என்ன என்பது அவனுக்குத் தெரியும். அவன் நட்டு வளர்த்த செடியில் அரும்பு விட்டு மலரும் பொருள்தானே! அதைப் 'புஷ்பம்' என்று சம்ஸ்கிருதத்தில் சொல்ல முடியாததால் தோட்டக்காரனுக்கு ஒரு குறைவுமில்லை.

சங்கீத வித்வத் சபை விழாவின் கடைசிநாள் கூட்டத்தை 'ஸதஸ்' என்று அச்சபை நிர்வாகிகள் குறிப்பிடுகிறார்கள். அன்று சபைத் தலைவருக்குச் 'சங்கீத கலாநிதி' பட்டம் வழங்குகிறார்கள். பழைய பாரத நாட்டில் இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த பெயர் அது. பெயர் கம்பீரமாகத் தொனிக்கிறது. 'ஸதஸ்' என்று சொல்லுவதற்குக் கஷ்டமாயிருந்தால், 'சதசு' என்று தமிழகராதியில் உள்ளதைப் போல் சொல்லலாம். அதுவும் பிடிக்காவிட்டால், 'சபை' என்று சொல்லுவதில் குற்றம் இல்லை. ஏனெனில் இடம் அதே இடம், மேடை அதே மேடை, விஜயம் செய்தவர்களும் அதே மனிதர்கள்தான். நிகழ்ச்சி நிரலில் மட்டும் சிறிது வித்தியாசம் உண்டு. பாட்டுக் கச்சேரிக்குப் பதில் பேச்சுக் கச்சேரிகள்!

* ☼ *

சங்கீத வித்வத் சபையின் வெள்ளி விழா எல்லாரும் எதிர் பார்த்தது போல் அமோகமாக நடைபெற்று முடிந்தது. சிறப்பாக நடந்த விழாவுக்குச் சிகரம்போல் அமைந்தது கடைசி நாள் நடந்த சதஸ். முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் 'சதஸ்' இவ்வாண்டில் சிறப்புப் பெற்றிருந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமான காரணம், இந்த வருஷத்தில் விழாவுக்குத் தலைமை வகித்தவர் ஸ்ரீ சாம்பசிவய்யர் என்பதுதான். சதஸில் முக்கியமான நிகழ்ச்சி, விழாத் தலைவருக்குச் 'சங்கீத கலா நிதி' பட்டம் வழங்குவதாகும். ஸ்ரீ சாம்பசிவய்யர் அவர்களுக்கு இந்தப் பட்டம் மிகப் பொருத்தமாக அமைந்தது. வேறு நிதி எதையும் மனதினால் கூட என்றும் விரும்பாமல் சங்கீதக் கலையையே சங்க நிதிக்கும் பதும நிதிக்கும் மேலான நிதியாகக் கருதிப் போற்றி வந்தவர் அவர். ஏழு தலைமுறையாக அவருடைய முன்னோர்கள் போற்றி வளர்த்து அவரிடம் ஒப்புவித்து விட்டுச் சென்ற சங்கீதக் கலையாகிய அரும்பெரும் நிதியைத் தினம் தினம் தேவியின் சந்நிதியில் அர்ப்பணம் செய்து வந்தவர். ஸ்ரீ சாம்பசிவய்யரின் வாழ்க்கைத் தூய்மை, அவருடைய பக்தியின் பெருமை, நாதோபாசனையின் மகிமை ஆகியவற்றை, இம் முறை அகாடமியின் வெள்ளி விழாவை முன்னிட்டு வெள்ளி வர்ண அட்டையுடன் திகழும் நிகழ்ச்சி நிரல் புத்தகத்தில் விவரமாகப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். அவருடைய வாழ்க்கை சங்கீதத் துறையில் பிரவேசிக்கும் இளம் வித்வான்களுக்கெல்லாம் ஆதர்சமானது என்பதை அறியலாம்.

ஆகையால், முன்னமே சங்கீதக் கலை நிதியைப் பூரணமாகப் பெற்றிருந்தவருக்கு அகாடமியினர் 'சங்கீத கலா நிதி' பட்டத்தை அளித்து அப்பட்டத்தின் சிறப்பையே உயர்த்திக் கொண்டார்கள். இதனால், முன்னமேயே அந்தப் பட்டத்தைப் பெற்றிருந்த வித்வான்கள் அனைவரும் தாங்கள் பட்டம் பெற்ற தினத்தைக் காட்டிலும் அதிகமாகப் பூரித்து மகிழ்ந்தார்கள்.

☼ ☼ *

விழாத் தலைவரைத் தவிரச் சங்கீத உலகில் சிறப்படைந்த இன்னும் நால்வரையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வெள்ளித் தட்டுச் சன்மானம் வழங்கிக் கௌரவித்தபடியால் 'சதஸ்' மேலும் முக்கியத்துவம் அடைந்தது. அவ்விதம் வெள்ளி விழாவில் கௌரவிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஸ்ரீமதி ஜயம்மாள், ஸ்ரீ பரதம் நாராயணசாமி ஐயர், ஸ்ரீ ரமணய்ய செட்டியார், ஸ்ரீ பாபநாசம் சிவன் ஆகியவர்கள்.

இவர்களில் ஸ்ரீமதி ஜயம்மாள் வீணை தனம்மாளின் புதல்வி. வீணை தனம்மாள் கலை உலகில் பல வகையிலும் பாக்கியசாலி யாவார். அவர் ஜீவித்திருந்தபோது அவருடைய சங்கீதம் பிரபல வித்வான்களாலும் ரஸிகர்களாலும் அமோகமாகப் பாராட்டப்பட்டது. அவருக்குப் பிற்காலத்தில் அவருடைய சந்ததியில் வந்தவர்கள் அவரது சங்கீத பாணியை நன்கு பேணிப் பாதுகாத்து வருகிறார்கள். ஸ்ரீமதிகள் பிருந்தா - முக்தாவும், ஸ்ரீமதிகள் ஜயம்மாள், பால சரஸ்வதியும் வீணை தனம்மாளின் சங்கீதத்தை வாரிஸு பாத்தியதையுடன் பெற்றுப் பாதுகாத்து வருகிறார்கள். சங்கீத வித்தையின் உயிர் நிலையை உணர்ந்து கேட்போரின் செவிகளை மட்டும் அன்றி, இதயத்தையும் கவரும் பாவ சங்கீதத்தை ஸ்ரீமதி ஜயம்மாள் பொழியும் முறை இணையற்றது. இதைப் பல காலமாக ரஸிகமணி டி. கே. சி. முதலியோர் வற்புறுத்திச் சொல்லி வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் அது உண்மையாகவே இருந்து வருகிறது. ஸ்ரீமதி ஜயம்மாளின் புதல்வி ஸ்ரீமதி பாலசரஸ்வதி நடன அபிநயக் கலையில் இணையற்று விளங்குவதோடு 'பாவ சங்கீதத்'தையும் அன்னையைப் போலவே இன்று அற்புதமாகக் கையாளுகிறார் என்பது மகிழ்ச்சி தரும் விஷயம்.

ஸ்ரீ ரமணய்ய செட்டியார் பழைய காலத்து வித்வத் கோஷ்டியைச் சேர்ந்தவர். ஜலதரங்கம் என்னும் அபூர்வ வாத்தியத்தை நன்கு கையாண்டு வந்தவர். இன்றைக்கு அவர் வாத்தியம் வாசிப்பதில்லை. பழங்காலத்துச் சங்கீத ரஸிகர்களின் பிரதிநிதியாக விளங்கி வருகிறார். முற்காலத்தில் சங்கீத சபைகளில் அதிகமாகப் பணம் கொடுத்தவர்களை முன்னணியில் கொண்டுவந்து உட்கார வைப்பதில்லை; அவர்கள் சளசள வென்று பேசிக் கச்சேரியைக் கெடுப்பதுமில்லை. நல்ல ரஸிகர்களாகப் பார்த்து முன்னால் வித்வானுக்குப் பக்கத்தில் அழைத்துச் சென்று உட்கார வைப்பார்கள். அவ்வாறு கச்சேரியைச் சோபிதமாகச் செய்யக் கூடிய ரஸிக சிரோமணியாக இன்றைக்கு ஸ்ரீ ரமணய்ய செட்டியார் விளங்கி வருகிறார். சங்கீத வித்வான்களுக்குச் சன்மானம் கொடுப்பதோடு கூடக் கச்சேரியைச் சோபிக்கச் செய்வதற்காக ஸ்ரீ ரமணய்ய செட்டியாருக்கும் சன்மானம் கொடுத்து முன்னணியில் வீற்றிருக்கச் செய்யலாம். அத்தகைய ஒருவரை இந்த வெள்ளி விழாவில் கௌரவித்தது முற்றிலும் தகும்.

இந்த நாளில் சங்கீத உலகிலும் ஸினிமா உலகிலும் பாபநாசம் சிவனை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. நல்ல காலமாக ஸினிமா உலகில்

அவருடைய பிராபல்யம் வரவரக் குறைந்து வருகிறது. அவ்வளவுக்குச் சங்கீத உலகில் அவருடைய பெருமை அதிகமாகி வருகிறது. பழைய காலத்து மகா சாஹித்ய கர்த்தர்களின் கீர்த்தனைகளோடு ஒப்பிடக்கூடிய பல கீர்த்தனைகளை அவர் இயற்றிக் கர்நாடக சங்கீதத்துக்கு நம் நாளில் ஒப்பற்ற சேவை புரிந்திருக்கிறார். சம்பிரதாயமான கர்நாடக சங்கீதக் கலையின் எல்லா நுட்பங்களையும் பரிபூரணமாக அறிந்து சுவானுபவத்தில் கொண்டு வந்தவர். உடைந்த தொண்டையில் பாடினாலும் "இராகங்களின் அற்புத வடிவங்களை ரஸிகர்களின் மனக்கண் முன்னால் கொண்டு வரக் கூடியவர். இவருடைய சாஹித்தியங்கள் அடங்கிய முதல் புத்தகம் பல ஆண்டுகளுக்கு முன்னால் வெளி வந்தபோது ரஸிகர்கள் சிலர் சேர்ந்து ஜகந்நாத பக்த சபையில் விழா நடத்திப் பண முடிப்பும் அளித்தார்கள். இன்று சங்கீத வித்வத் சபை அவரைக் கௌரவித்திருப்பது மேற்கூறிய ரஸிகர்களுக்கு மிக்க திருப்தியை அளிக்கும்.

கடைசியாக, ஸ்ரீ பரதம் நாராயணசாமி ஐயருக்கு வருகிறோம். அவரைக் கடைசியிலே கவனிப்பதுதான் பொருத்தம். முதலிலே அவரை எடுத்துக் கொண்டால் மற்றவர்களுக்கு இடம் கிடைப்பது சிரமமாகி விடும். அவ்வளவு 'பொல்லாத' மனிதர். சங்கீதக் கலை சம்பந்தமான விவாதம் எங்கே என்று காத்திருப்பார். விவாதத்தில் இறங்கினால் இலேசில் விட்டுக் கொடுக்க மாட்டார். பரத சாஸ்திரத்தில் அவருடைய நிபுணத்துவம் காரணமாக ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளினால் 'தாண்டவ பண்டிதர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டவர். ஆனந்தத் தாண்டவமும் ஆடுவார்; அகோர தாண்டவமும் ஆடுவார். வெள்ளி விழா சதஸில் வெள்ளித் தட்டுப் பரிசு பெற்றுக்கொண்டு அவர் பேச ஆரம்பித்தபோது எல்லாருக்கும் கொஞ்சம் கதி கலக்கமாகவே இருந்தது. ஆரம்பத்திலேயே ஒரு பெரிய போடு போட்டார். "இப்போதுள்ள சங்கீத வித்வான்களுக்குள்ளே நான்தான் பெரியவன். எண்பது வயதைப் பூர்த்தி செய்து எண்பத்தோராம் வயதை அடைந்திருக்கிறேன். எண்பது வயதான சங்கீத வித்வான் இங்கு யாராவது உண்டா!" என்று கேட்டபோது, மற்ற வித்வான்கள் எல்லாம் மௌனம் சாதிக்க வேண்டியதாயிற்று.

அகாடமியின் ஆரம்ப காலத்தில் தம்முடைய அனுபவங்களைப் பற்றி அவர் கூறினார். "நான் வந்த முதல் வருஷத்தில் எனக்கு அழைப்பு இல்லை; பாஸ் இல்லை; சாப்பாடு இல்லை; ரயில் டிக்கெட் இல்லை. 'நீர் யார்!' என்று கேட்டார்கள். அடுத்த வருஷமும் வந்தேன். பரத சாஸ்திரத்தைப் பற்றி ஒரு மணி நேரம் பேசினேன். அகாடமி நிர்வாகி ஒருவர் வந்து 'நீர் பேசி முடித்தது மிக நன்றாயிருந்தது!' என்றார். நான் பேசியதைக் காட்டிலும் முடித்தது நன்று என்பது அவருடைய அபிப்பிராயம். ஏனெனில், நான் பேசிய விஷயம் அவருக்கு ஒன்றும் பிடிபடவில்லை. எப்படியாவது இந்த மனுஷன் இந்தப் பட்டணத்தை விட்டுப் போனால் போதும் என்று அந்த வருஷம் போகிறதற்கு ரயில் டிக்கெட் வாங்கிக் கொடுத்தார்கள். அப்புறம் நான் விடுவேனா! அடுத்த வருஷம் போக வர டிக்கட், பாஸ், எல்லாம் வாங்கியே விட்டேன்!" என்றார். பேச்சு முழுதும் இப்படி ஒரே 'இடக்கரடக்கல்' ஹாஸ்யமாக இருந்தது. கடைசியில் ஸ்ரீ பரதம் நாராயணசாமி ஐயர், "சங்கீதத்துக்கு இந்த அகாடமி செய்திருக்கும் சேவையைப் பரத சாஸ்திரத்துக்கும் செய்ய வேண்டுமென்பது என் கோரிக்கை. அப்படி ஏதாவது செய்கிறதாயிருந்தால் சீக்கிரமாக நான் உயிரோடிருக்கும் போதே செய்து விடுங்கள்!" என்று கூறிப் பேச்சை முடிக்க விருப்பமின்றி முடித்தார். இன்றைக்கும் அவர் பேசியதைக் காட்டிலும் பேச்சை முடித்ததை அகாடமி நிர்வாகிகள் பாராட்டினார்கள். ஆனால் சபையில் இருந்த பிரசங்க ரஸிகர்கள் அவருடைய பேச்சை மிகவும் ரஸித்துக் குதூகலப்பட்டார்கள்.

தமிழ்நாட்டு அரசியல் உலகத்தில் ஸ்ரீ பரதம் நாராயணசாமி ஐயரைப் போன்ற ஒரு வாதக்காரரும் பிடிவாதக்காரரும் இருந்தால், தற்சமயம் எழுந்திருக்கும் சென்னை நகரம் சம்பந்தமான வாதப் போரை நடத்துவதற்கு எவ்வளவு சௌகரியமாயிருக்கும் என்று தோன்றியது.

* * *

வெள்ளி விழா சதஸுக்கு அக்கிராசனம் வகித்தவர் "ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்கள். சம்பிரதாயமான, கர்நாடக சுத்தமான சங்கீதத்தை அனுபவித்து மகிழும் ரஸிகர்களில் தலை சிறந்த ரஸிகர். ஆனால் இம்மாதிரியான விழாக்களுக்கும் சபைகள் — சதஸ்களுக்கும் முன்னால் வருவதில்லை. இதற்கு முக்கிய காரணம், தற்காலத்தில் கர்நாடக சங்கீதம் வர வரத் தரம் குறைந்து வருகிறதென்று அவர் அபிப்பிராயப் படுவதுதான். அகாடமி வெள்ளி விழாவுக்கு ஸ்ரீ சாம்பசிவய்யர் தலைமை வகிக்க இசைந்த காரணத்தினால் ஸ்ரீ சீனிவாசனும் சதஸுக்குத் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டார். விழாவின் முடிவில் அவர் ஆங்கிலத்தில் செய்த பிரசங்கத்தைத் தமிழில் செய்திருந்தால், அங்கே கூடியிருந்த வித்வான்கள் பிரசங்கத்தைக் காட்டிலும் அதை அவர் முடித்தது பற்றித் திருப்தி அடைந்திருப்பார்கள். ஸ்ரீ கே. சீனிவாசன் அத்தகைய சில கசப்பான விஷயங்களைத் தம் பிரசங்கத்தில் எடுத்துக் காட்டினார். "பழைய காலத்துக் கச்சேரி பத்ததிகளைச் சரியாகக் கடைப்பிடித்து இந்த நாள் வித்வான்கள் பாடுகிறார்களா! அதற்கு வேண்டிய தகுதிகளைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்களா!" என்று "ஹிந்து" ஆசிரியர் பட்டவர்த்தனமாகக் கேட்டார். "இல்லை" என்ற பதிலை அவர் வாயினால் சொல்ல மனமின்றி, சபையிலிருந்த வித்வான்களையும் நிபுணர்களையும் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். வட நாட்டு வித்வான்களைப் போல் நம் வித்வான்களும் குரல் பயிற்சியில் ஈடுபட்டு மூன்று ஸ்தாயிகளிலும் அநாயாசமாகச் சஞ்சரிக்கும் ஆற்றலைப் பெற வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆதார சுருதியை மிகக் குறைவாக வைத்துக் கொண்டு இக் காலத்தில் வித்வான்கள் பாடுவதையும் அதனால் பக்க வாத்தியங்கள் சோபிக்க முடியாமற் போவதையும் எடுத்துக் காட்டினார்.

ரஸிக மகா ஜனங்களையும் ஸ்ரீ கே. சீனிவாசன் சும்மா விட்டுவிடவில்லை. "வித்வான்கள் சங்கீதத்தின் தரத்தைக் குறைப்பதற்கு இந்த நாள் ரஸிகர்களும் காரணமாயிருக்கிறார்கள். இந்தக் காலத்துச் சங்கீத ரஸிகர்கள் பழைய காலத்து மகா வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை. அதனாலேதான் அப்படிச் சங்கீதத்தின் தரம் குறைவதற்கு அவர்கள் இடம் கொடுக்கிறார்கள்!" என்றார்.

இந்தக் குற்றச் சாட்டை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. நம்மில் மிகப் பெரும்பாலோர் அரியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்களுக்குப் பிற்பட்ட கச்சேரி பத்ததியைத் தான் அறிந்திருக்கிறோம். இப்போது அரியக்குடி, செம்பை, செம்மங்குடி முதலியவர்கள் கையாளும் பத்ததியைக் கொண்டு தான் தராதரங்களை நிர்ணயிக்கிறோம். மகா வைத்திநாதய்யர், ராமநாதபுரம் சீனிவாசய்யங்கார், திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் முதலிய மகான்களின் கச்சேரிகளைக்

கேட்கக் கொடுத்து வைக்க வில்லை. இவர்களுடைய கச்சேரிகளைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீ கே. சீனிவாசன் போன்றவர்கள் தான் கச்சேரி பத்ததிகளைப் பழைய பாணிக்குக் கொண்டு போய்த் தரம் கெடாமல் பாதுகாப்பதற்கு வழிகாட்ட வேண்டும். அத்தகைய முயற்சியை "ஹிந்து" ஆசிரியர் போன்றவர்கள் நடத்தினால் அவருடன் ஒத்துழைக்க இந்த நாள் ரஸிகர்களில் பெரும்பாலோர் சித்தமா யிருக்கிறார்கள்.

✿ ✿ ✿

சதஸின் பட்டமும் சன்மானமும் பெற்றவர்களுக்கும், தலைமை வகித்த ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்களுக்கும் பலர் வந்தனம் கூறினார்கள். சங்கீத மண்டலத்தின் சார்பாக ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யரும், ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையும் நன்றி சொன்னார்கள். சதஸுக்கு முன்னால் நடந்த ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயரின் படத்திறப்பு வைபவத்திலும் இவர்கள் பேசும்படி நேர்ந்தது. இந்த இரு சங்கீத வித்வான்களும் சங்கீதக் கலையில் தேர்ந்திருப்பது போலவே பேச்சுக் கலையிலும் தேர்ந்தவர்கள் என்பது நன்கு வெளியாயிற்று. சங்கீத வித்வான்களுக்கு 'லௌகிகம்' தெரியாது என்றும், ஒத்துழைத்துக் காரிய நிர்வாகம் செய்ய முடியாது என்றும் ஒரு தவறான நம்பிக்கை இருந்து வருகிறது. மேற்கூறிய இரு வித்வான்களும் கூட அதைக் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த நம்பிக்கை தவறானது என்பதை ஏற்கெனவே ஸ்ரீ முசிரி சுப்பிரமணிய ஐயர் நிரூபித்து விட்டார். திருவையாற்றில் ஸ்ரீ தியாகப்பிரம்ம உற்சவம் நடத்தும் பொறுப்பை முசிரி ஏற்றுக் கொண்டது முதல் மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார். வருங்காலத்தில் சங்கீத வித்வத் சபையின் முழு நிர்வாகப் பொறுப்பையும் சங்கீத வித்வான்களே ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் நடத்துவார்கள் என்று பலருக்கும் இப்போது நம்பிக்கை ஏற்பட்டு வருகிறது. அந்த நாள் விரைவிலேயே வரக்கூடும் என்பது ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யரும், ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையும் பேசியதைக் கேட்ட பிறகு தெளிவாயிற்று. — "கர்நாடகம்"

வாழ்க வித்வத் சபை!

சங்கீத வித்வத் சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு ஏறக்குறைய ஐம்பது கச்சேரிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இரண்டொருவரைத் தவிர குறிப்பிட்ட வித்வான்கள் அனைவரும் வந்திருந்து கச்சேரி செய்து வெள்ளி விழாவைச் சிறப்பித்தார்கள். அவர்களில் மிகப் பிரபலமானவர்களைத் தவிர மற்ற வித்வான்கள், பக்க வாத்தியக்காரர்கள் அனைவருடைய படங்களையும் சென்ற இரண்டு "கல்கி" இதழ்களிலும் இந்தக் "கல்கி" இதழிலும் மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம். எல்லா வித்வான்களையும் சேர்ந்தாற்போலப் பார்க்கும்போது, நமது புண்ணியம் செய்த தென்னாட்டில் நாதோபாசனை செய்கிறவர்கள் இவ்வளவு பேர் இருக்கிறார்களே என்று உள்ளம் பூரிக்கிறோம்.

கோலாகலமான வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கச்சேரிகளை விமரிசனம் செய்து தராதரங்களைச் சரியானபடி நிர்ணயிப்பது இயலாத காரியம். இரண்டாவது அணியில் வரக்கூடிய வித்வான்கள் 4-15 மணிக்கு ஆரம்பித்து நடத்திய கச்சேரிகள் எத்தகைய சூழ்நிலையில் நடைபெற்றன என்பதைப் பற்றி ரஸிகர்கள் இருவர் இந்தக் "கல்கி" இதழில் எழுதியிருக்கிறார்கள். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கச்சேரி செய்த வித்வான் எவரும் தம்முடைய பூரண ஆற்றலும் வெளியாகுமாறு கச்சேரி செய்திருக்க முடியாது. சங்கீதம் மிக மென்மையான கலை. (ஆங்கிலத்தில் அதை 'Fine Art' என்று சொல்லுகிறார்கள்.) 'தொட்டாற் சுருங்கும்' தாவர வர்க்கங்களின் மிருதுவான இயல்பை உடையது.

வாழ்நாள் முழுதும் பிரசங்கம் செய்து பழக்கப்பட்டவர்கள், கூட்டத்தில் நாலு பேர் எழுந்து செல்வதைப் பார்த்தால், மேலே பேசுவதற்குத் தடுமாறுவார்கள். பிரசங்கிகளின் பாடு அதுவென்றால், பாடகர்களின் நிலை எப்படியிருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. சபையில் பாதிக்கு மேலே காலி நாற்காலிகளாயும், வருவோரும் போவோரும் தங்கள் தங்கள் இடம் எது என்று விசாரிப்போருமா யிருக்கும் சூழ்நிலையில், இளம் வித்வான்கள் பாடிச் சமாளித்தார்களே, அதற்காகவே அவர்களைப் பாராட்ட வேண்டும். ஏதோ வெள்ளி விழாவில் கலந்து கொண்டு கைங்கரியம் செய்தோம் என்பதுடன் அவர்கள் திருப்தி அடைந்தது போல் ரஸிகர்களும் திருப்தி அடைவதுதான் முறை. 'அதை இப்படிப் பாடியிருக்கலாம்,' 'இதை இப்படிப் பாடியிருக்கலாம்' என்று சொல்வதிலெல்லாம் பொருள் இல்லை.

இந்தக் கச்சேரி நிகழ்ச்சிகளை வேறு விதமாக இதைவிட நல்ல முறையில் ஏற்பாடு செய்வதும் அவ்வளவு சுலபமான காரியம் அன்று. ஐம்பது கச்சேரிகளை ஏற்படுத்தி, அவ்வளவு பாட்டு வித்வான்களையும் பக்க வாத்திய வித்வான்களையும் சமாளித்து, அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து அனுப்பிய வித்வத்சபை நிர்வாகிகள் எவ்வளவு நாள் எப்படியெல்லாம் உழைத்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தால், அவர்கள் மீது குறை எதுவும் சொல்லத் தோன்றாது. "இவ்வளவு பிரதமாதமான விழாவை இத்தனை சிறப்பாக நடத்தினார்களே!" என்று அவர்களைப் பாராட்டத்தான் தோன்றும்.

✿ ✿ ✿

வெள்ளி விழாவில் நடந்த சுமார் ஐம்பது கச்சேரிகளுக்குள் இரண்டு கச்சேரிகள் மிகப் பிரசித்தி அடைந்தன. ஒன்று, ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்களின் கச்சேரி. விழாவில் நடந்த அத்தனை கச்சேரிகளிலும் அய்யங்காரின் கச்சேரி மேன்மையாக அமைந்தது. அதுமட்டுமல்ல; அய்யங்கார் அவர்களின் சொந்தக் கச்சேரிகளையே எடுத்துக் கொண்டு பார்த்தாலும், இந்த வருஷத்து வெள்ளி விழாக் கச்சேரி மிகச் சிறந்து விளங்கிற்று. இப்படி நம் காலத்துச் சங்கீத வித்வான் ஒருவர் நீடித்த புகழை நிலைநாட்டிக் கொண்டு வருவது சங்கீத உலகம் செய்த பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்.

இன்னொரு பிரசித்தி அடைந்த கச்சேரி மதுரை மணி ஐயரின் கச்சேரி. இது வேறொரு விதத்தில் பிரபலம் அடைந்தது. மறுநாள் சென்னை நகரில் சங்கீதம் தெரிந்தவர்கள் சந்தித்த இடங்களிலெல்லாம் மணி ஐயருடைய கச்சேரியைப் பற்றிப் பேசி வாதப் பிரதிவாதம் செய்யும் அளவுக்கு அது பிரபலம் அடைந்து விட்டது.

அகாடமியில் கச்சேரி செய்யும் வித்வான்கள் அவர்களே மனமுவந்து இரண்டு நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டுக் கச்சேரி செய்கிறார்கள். ஒன்று நிகழ்ச்சி நிரல். இரண்டாவது கால நிர்ணயம்.

நிகழ்ச்சி நிரல் எழுதிக் கொடுக்கும் போது ஏதோ சில ராகங்களையும் உருப்படிகளையும்

குறிப்பிட்டு விடுகிறார்கள். ஆனால் கச்சேரி செய்யும்போது ஒரு ராகம் அல்லது கீர்த்தனம் சோபிக்காது என்ற எண்ணம் உண்டாகி விடுகிறது. பெரிய வித்வான்களுக்கே இத்தகைய சந்தேகம் உண்டாகிச் சில சமயம் நிகழ்ச்சி நிரலில் மாறுதல் செய்து கொள்கிறார்கள். இம் முறை ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்காரும் ஸ்ரீ ஜி. என். பி.யும் அவ்விதம் உருப்படிகளை மாற்றிக் கொண்டார்கள். சங்கீத உலகில் பழந்தின்று கொட்டை போட்டவர்களுக்கே இந்தக் கஷ்டம் என்றால், இளம் வித்வான்களைப் பற்றி என்ன சொல்லுவது!—அவர்கள் நிகழ்ச்சி நிரலை மாற்றுவதற்கும் தைரியம் இல்லாமல் எப்படியோ காமா சோமா என்று பாடி முடிக்க வேண்டியதுதான்.

மதுரை மணி ஐயரை நிகழ்ச்சி நிரல் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆனால் கால நிர்ணயக் கட்டுப்பாடு அவரை ரொம்பவும் கஷ்டப்படுத்தி விடுகிறது. கற்பனை நிறைந்த சங்கீத பாணியாதலால் மனம் போனபடி விஸ்தாரமாக ஸ்வரப்ரஸ்தாரம் செய்வதில் இறங்கி விடுகிறார். கடிகாரத்தின் முள்களுக்குச் சங்கீத ஞானம் இல்லையாதலால், அவை பாட்டுக்கு ஓடிக் கொண்டேயிருக்கின்றன. கச்சேரியை முடிக்க வேண்டிய எட்டரை மணி நெருங்கிக் கொண்டிருந்தும், மணி ஐயர் கிருதிகளைக் கூட முடித்தபாடில்லை. அகாடமி நிர்வாகிகள் செய்த சமிக்ஞைகள் எல்லாம் பயனற்றுப் போயின. கடைசியாக, மணி ஐயர் பாடிக் கொண்டிருக்கும் போதே அகாடமி நிர்வாகிகளில் ஒருவர் அடுத்த நிகழ்ச்சியைப் பற்றி ஒலி பெருக்கியில் அறிவிப்புச் செய்ய முன்வந்தார்.

இந்தக் காரியந்தான், மறுநாள் சங்கீதம் தெரிந்தவர்கள் இரண்டு பேர் சந்தித்த இடங்களிலெல்லாம் சர்ச்சைக்கு இடமாயிற்று. ''கால நிர்ணயத்தைக் கவனியாமல் இவர் பாட்டுக்குப் பாடிக் கொண்டே போனால், நிர்வாகிகள் என்னதான் செய்வார்கள்!'' என்பது ஒரு கட்சி. ''அதற்காகப் பாடும்போதே ஒலி பெருக்கியில் அறிவிப்புச் செய்வதா! ஒரு பாட்டுக்கும் இன்னொரு பாட்டுக்கும் நடுவில் செய்யக்கூடாதா! 8-30 வரையில் பார்த்து விட்டு, அப்புறம் கடையைக் கட்டச் சொல்வதுதானே! அகாடமி நிர்வாகிகள் சங்கீதக் கலையையே அவமதித்து விட்டார்கள்!'' என்பது இன்னொரு கட்சி.

இம்மாதிரி சர்ச்சை ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சியை அகாடமி நிர்வாகிகளும் அவ்வளவாக விரும்பவில்லையென்பது மறு நாள் முதல் தெரிய வந்தது. ஒலிபெருக்கியில் அறிவிப்புச் செய்வதையே நிறுத்தித் தொலைத்து விட்டார்கள்.

இந்தக் காரியத்தில் சிறிய பிழை நேர்ந்து விட்டது என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளா விட்டாலும், காரியத்தில் ஒப்புக் கொண்டு ரம்யமாக நடந்து கொண்டதற்காக வித்வத் சபை நிர்வாகிகளைச் சங்கீத ரஸிகர்கள் பாராட்ட வேண்டும். தாம் செய்ததே சரி என்று மரம்போல் வளைந்து கொடுக்காமல் நிற்பவர்கள் இந்த உலகில் எந்தப் பெரிய காரியத்தையும் சாதித்தது கிடையாது. இந்த விஷயத்தில் வித்வத் சபை நிர்வாகிகள் நடந்துகொண்டது வருங் காலத்திலும் அந்த சபை மேன்மை பெற்று விளங்கப் போகிறதென்பதற்கு அத்தாட்சியாயிருந்தது.

வாழ்க சங்கீத வித்வத் சபை!

சங்கீதத் தலைநகர் எது?

புதிய ஆந்திர ராஜ்யத்தின் தலைநகரத்தைப் பற்றிக் காரசாரமான விவாதங்கள் நடந்து வருகின்றன. இச்சமயத்தில் கர்நாடக சங்கீதத்தின் தலைநகரம் எது என்ற பிரச்னை ஒன்று எழுந்திருக்கிறது. டிசம்பர் மாதக் கடைசியில் சென்னைமா நகரந்தான் சங்கீதத்தின் தலைநகரம் என்று தோன்றியது. இங்கே நடைபெற்ற சங்கீத விழாக்கள் அத்தகைய அபிப்பிராயத்தை உண்டு பண்ணின. ஆனால் ஜனவரி முதல் வாரத்தில் காவேரி தீரத்திலுள்ள திருவையாறுதான் சங்கீதத்தின் உண்மையான தலைநகரம் என்று எண்ணுவதற்கு ஏதுக்கள் ஏற்பட்டன.

இவ்வாண்டில் திருவையாற்றில் நடந்த ஸ்ரீ தியாகராஜ உற்சவ நிகழ்ச்சிகளை வழக்கம்போல வானொலி நிலையத்தார் ஒலி பரப்பினார்கள். ஆனால் இந்த ஆண்டு ஆராதனை உற்சவமும் சரி, சங்கீதக் கச்சேரிகளும் சரி, முந்தைய வருஷங்களைக் காட்டிலும் வானொலியில் கேட்கும்போது அதிகமாகச் சோபித்தன. ஆராதனை உற்சவத்தன்று காலையில் தமிழ் நாட்டுப் பிரபல சங்கீத வித்வான்கள் பலரும் மகான் தியாகராஜரின் பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகளைக் கோஷ்டி கானமாகப் பாடினார்கள். முன் வருஷங்களைப்போல் இந்த கோஷ்டி கானம் குரலோடு குரல் சேராமலும் சுருதியோடு ஸ்வரம் சேராமலும் சாஹித்ய வார்த்தைகள் குளறியும் சங்கடப் படுத்தவில்லை. இது மட்டுமல்ல. இந்த ஆண்டில் புதிய ஏற்பாடாக, பஞ்ச ரத்தினக் கீர்த்தனைகள் முடிந்தவுடனே, நம் பிரபல வித்வான்கள் நாமாவளி பஜனை செய்தார்கள். ஸ்ரீ அண்ணாசாமி பாகவதர் அவர்கள் முன்னால் வழிகாட்டிப் பாட, பின்னர் அனைவரும் சேர்ந்து ஸ்ரீ ராமநாம பஜனை செய்தார்கள். ''ஹரே ராம ஹரே ராம'' ''ரகுபதி ராகவ ராஜாராம்'' முதலிய நாமாவளிகளை வித்வான்கள் கோஷ்டியாகச் சேர்ந்து பாடியது செவிகளுக்கு இனிமையாயும் இதயத்துக்கு அமுதமாயும் வானொலியில் வந்தது. ''பிரார்த்தனையினால் என்ன பயன்!'' என்று கேட்கிற புத்திசாலிகளைக் குறித்து அச்சமயம் பரிதாபமும் உண்டாயிற்று! பிரார்த்தனையினால் வேறு என்ன பயன் வேண்டும்! பகவானுடைய திருநாமத்தை இம்மாதிரி இசையுடன் சேர்ந்து பாடுவதில் மனத்துக்கு உண்டாகும் ஆனந்தத்தைக் காட்டிலும் வேறு என்ன வரம் நமக்குக் கடவுள் அருள வேண்டும்! பிரார்த்தனையின் பலன் பிரார்த்தனைதான்! நாம பஜனையின் பலன் அதில் நாம் அடையும் ஆனந்தமே.

வித்வான்களுடைய கச்சேரிகளும் பெரும்பாலும் முந்தைய வருஷங்களைக் காட்டிலும் சிறப்பாகக் கேட்டன. முக்கியமாக செம்மங்குடி சீனிவாசய்யர், மதுரை மணி ஐயர் கச்சேரிகள் வானொலியில் மிகச் சிறப்பாயிருந்தன. சபையோரின் கரகோஷ ஆரவாரமும் அடிக்கடி வானொலியில் கேட்டபடியால் திருவையாற்றில் எத்தகைய குதூகலம் பொங்கிப் பெருகியிருக்க வேண்டுமென்பதை ஊகிக்கக் கூடியதாயிருந்தது.

இந்த ஆண்டில் ஒரு சிறிய தகராறு காரணமாகக் காலை வேளை ஆராதனை உற்சவம் மட்டும் மகான் தியாகராஜரின் சமாதிக்கு முன்னால் நடந்ததாகவும், கச்சேரிகள் கல்யாண மகால் மண்டபத்தில் நடந்ததாகவும் அறிகிறோம். இப்படி நடப்பதினால் பிரமாத விபத்து ஒன்றுமில்லை. திருவையாறு முழுவதுமே ஸ்ரீ தியாகராஜரின் பாதம் பட்டுப் புனிதமான ஸ்தலந்தான் அல்லவா!

வெள்ளி விழா நிகழ்ச்சிகள்

பேராசிரியர் ஆர். சீனிவாசன்

வழக்கம் போல் இந்த வருஷமும் டிசம்பர் மாதத்தில் பல இசை விழாக்கள் நடந்தன. ஆனால் மாம்பலம் தியாகப்பிரம்ம கான சபையும் தமிழ் இசைச் சங்கமும் தங்கள் விழாக்களை நடத்தவில்லை. பிறகு விமரிசையாக நடத்துவார்கள் என்று நினைக்கிறேன். கூட்டத்தோடு கோவிந்தா என்று கூப்பிடப் பிரியமில்லை போலும். அது நல்ல காரியம் தான். எல்லா விழாக்களும் ஒரே சமயத்தில் நடக்கும்போது நமக்கும் எதற்குப் போகிறது என்று தெரியாமல் திண்டாட நேருகிறது.

இசை விழாக்களை ஒரே சமயத்தில் நடத்தாமல் ஆண்டில் பற்பல கட்டங்களில் நடத்துவதிலே பல சௌகரியங்களுண்டு. கிறிஸ்துமஸ் பண்டிகையின்போதுதான் இசை விழாக்களை நடத்த வேண்டுமென்கிற நிர்ப்பந்தம் என்னவோ! ஆங்கிலேயர் நம்மை ஆண்டு வந்த காலத்தில் அவர்களுக்குக் கிறிஸ்துமஸ் பண்டிகை முக்கியமானபடியால் அதையொட்டிப் பல நாட்கள் விடுமுறையாக்கப் பட்டு வந்தன. இப்போதோ அந்த வழக்கமில்லை. இன்னும் ஏன் அந்தப் பழைய வழக்கத்தையே கைப்பற்றி நிற்க வேண்டும்!

கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலம் பலவிதங்களில் அசௌகரியமான காலம். நல்ல குளிரும் பனியும் சில சமயங்களில் சிறு துளி மழையும் உள்ள காலம். நல்ல சாரீமுள்ளவர்கள் கூடத் தொண்டையைக் கனைத்துக் கொள்ளும் காலம். வேறு பற்பல (சங்கீத சம்பந்த மில்லாத) விழாக்கள் நடை பெறும் காலம். சங்கீத விழாக்களை ஏன் மற்ற சமயங்களில் (ஸ்ரீராம நவமி, கோகுலாஷ்டமி, நவராத்திரி போன்ற உற்சவ சமயங்களில்) ஏற்பாடு செய்யக் கூடாது! இதைக் குறித்துக் கொஞ்சம் ஆலோசனை செய்வது நலம்.

கொஞ்ச நாட்களாக நடந்து வரும் பழக்கத்தை மாற்றுவதானால் தலை போய் விடும் என்று சிலர் எண்ணக் கூடும். தமிழிசைச் சங்கமும் தியாகப் பிரம்ம கான சபையும் இந்த விஷயத்தில் வழக்கத்திற்கு அடிமையாகாமல் நடந்து கொண்டது பாராட்டத் தக்கது!

விழாக்களின் எண்ணிக்கை குறைந்தாலும், அகாடமியின் வெள்ளி விழாவில் அந்தக் குறையைச் சரிக்கட்ட வழக்கத்திற்கு அதிகமாகக் கச்சேரிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். சங்கீத அகாடமியின் நிகழ்ச்சிக் குறிப்பைப் பார்த்தவுடன் தலை சுழல ஆரம்பித்ததென்றே கூறலாம். மாலையில் 2-45 முதல் இரவு 11-30 வரை கச்சேரிகள் நாலு. இவைகளைத் தவிர காலையிலும் கச்சேரிகள்.

காலையில் வருஷம் தோறும் நடந்து வந்த ராக லக்ஷண சர்ச்சைகள் இந்த வருஷத்தில் நடை பெறவில்லை.

இந்த ராக லக்ஷண சர்ச்சைகள் எவ்வளவு தூரம் உபகாரமா யிருந்தன, சர்ச்சைகளில் தீர்மானம் பண்ணியபடி எவ்வளவு வித்துவான்கள் நடக்கிறார்கள், அந்தத் தீர்மானங்களுக்கு என்ன மதிப்புக் கொடுத்தார்கள் என்கிற விஷயத்தில் என்றுமே சந்தேகமிருந்து வந்திருக்கிறது. வீண் வாதங்களும், சில சமயங்களில் உக்ரமான பேச்சுக்களும், வாய்ச் சண்டைகளும் பிரமாதமாக இருந்தனவே அன்றிக் காரியத்தில் ஏட்டுச் சுரைக்காய் மாதிரிதான் பொதுவாக இருந்து வந்தன. எந்தக் காரணம் பற்றியோ அந்த வாய்ப் பந்தலை இந்த வருஷம் நிறுத்தியது நலம்தான்.

ஆனால் அதற்குப் பதிலாக, திருஷ்டாந்தக் கச்சேரிகள் என்று சொல்லப்பட்ட பல கச்சேரிகள் காலையில் நடந்தன. ஆனால் இந்தக் கச்சேரிகளில் எத்தனை உண்மையான திருஷ்டாந்தக் கச்சேரிகள் என்பதைத் திட்டமாகச் சொல்வதிற்கில்லை.

துவாரம் வெங்கடசாமி நாயுடுவின் பிடில் கச்சேரி, பி. ராஜம் அய்யரின் திருப்பாவைக் கச்சேரி, மாளவிகா ராயின் இந்துஸ்தானி சங்கீதம் முதலியவைகள் முதல் தரக் கச்சேரிகளாக இருந்தன. "திருஷ்டாந்தக் கச்சேரிகள்" என்று கூறக் கூடியவைகள் முடிகொண்டான் வெங்கட்ராமய்யரின் பல்லவி, தின்னியம் வெங்கட்ராமய்யரின் "த்விதான அவதான"க் கச்சேரி, குழந்தை ராஜேச்வரியின் கச்சேரி, ஸ்ரீமதி முதத்கரின் உதாரணக் கச்சேரி இவைதான்.

ஒரு விஷயத்தின் நுட்பத்தை நிரூபிக்கும் கச்சேரிகளைத்தான் "திருஷ்டாந்தக் கச்சேரிகள்" என்று கூறுவது பொருத்தமா யிருக்கும். குழந்தை ராஜேச்வரி நாலு காலத் தாளங்களையும் கையில் போட்டுக் காட்டிப் பாடியதும், வீணையில் வாசித்ததும் மிக ஆச்சரியமாக இருந்தன. சபையிலுள்ள பல வித்துவான்கள் பிரமித்தார்கள். **த்விதான அவதானம்** மிகவும் கடினமான காரியம். அதிகப் பிரயாசை யெடுத்துக் கொண்டு சாதகம் பண்ணினால்தான் சாத்தியமாகும். தின்னியம் வெங்கட்ராமய்யர் இந்த விஷயத்தை விளக்கிக் காட்டியது தான விஷயம் தெரிந்தவர்களைப் பெரிதும் பிரமிக்கச் செய்தது.

மாலைக் கச்சேரிகளைப் பற்றி ஒன்றிரண்டு விஷயங்கள் கூறவேண்டியிருக்கிறது. 2-45க்குக் கச்சேரி பண்ணிய சில "இளம்" வித்துவான்கள் 4-15, 9-30 க்குக் கச்சேரி பண்ணியவர்களை விடக் குறைந்தவர்களாகத் தோன்றவில்லை. 4-15 க்குக் கச்சேரிகள் நடத்திய வித்துவான்களைக் குறித்து நாம் பரிதாபப் படத்தான் வேண்டும்! காலி நாற்காலிகளுக்கு எதிரில் கச்சேரிகள் பண்ண நேர்ந்த அவர்கள் நிலையை என்னவென்று சொல்வது! கச்சேரி முடிவில் அடுத்த கச்சேரிக்குத் தடபுடலாக வரும் ஜனங்களுடைய ஆரவாரத்தை எப்படியோ சகித்து மங்களம் பாடி முடித்தார்களே! அவர்களைப் போற்ற வேண்டியதுதான்!

* * *

மத்தியானம் நடந்த இசைப் போட்டிகளைக் குறித்துச் சில விஷயங்கள் நம் கவனத்திற்கு வருகின்றன. இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் சிறுவர்கள் சிறுமிகள் இவர்களை நாம் மிகவும் பாராட்டத்தான் வேண்டும். போட்டியின் உத்தேசம் இவர்களுடைய இசைத் திறமையைக் கண்டறிவதற்கா, அல்லது கூட்டத்தில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் நிறைந்திருக்க, நடுவில் பலவித சத்தங்கள் ஏற்பட, அவைகளைப் பொருட்படுத்தாமல், சபைக் கோழையில்லாமல், மேடையிலேறி உட்கார்ந்து வாயைத் திறக்கத் தைரியம் இருக்கிறதா என்பதைப் பரீக்ஷிப்பதற்கா என்றும் சந்தேகம் ஏற்படுகிறது.

அவர்களுடைய சங்கீதத் திறமையைப் பரீட்சிக்க நீதிபதிகள் இருக்கிறார்களே, அவர்கள் மட்டும் கேட்டுத் தீர்மானித்தால் போதாதோ! பொதுக் கூட்டத்துக்கு நடுவில் அவர்களையும் பரீட்சை அதிகாரிகளையும் உட்கார வைத்துப் பரீட்சை நடத்துவதின் உத்தேசமென்ன! இப்படிக் கூட்டத்துக்கு நடுவில் பரீட்சை நடத்துவது போட்டியில் கலந்து கொள்ளும் சிறுமிகளுக்கு எவ்வளவு அசௌகரியம் என்பதைப் போட்டி நடத்தும் அதிகாரிகள் உணர்வதுண்டா! போட்டி ஒரு பகிரங்க தமாஷா! வேடிக்கை பார்க்க வரும் ஜனங்களுக்குப் பொழுது போக்கச் செய்யும் நிகழ்ச்சியா! இந்த முறை ஒரு விதத்திலும் அங்கீகரிக்க முடியாதது.

தனியாக ஒரு இடத்தில் போட்டியில் சேர்ந்திருக்கும் குழந்தைகளும், நீதிபதிகளும், மற்றும் குழந்தைகளோடு வந்திருக்கும் பெரியோர்களும், அவசியமுள்ள அகாடமி உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் மட்டுமிருந்து போட்டி நடத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அப்படி இல்லாமல் அதை ஒரு தெருக் கூத்துக்குச் சமானமாகச் செய்ய வேண்டாம் அல்லவா!

மாலைக் கச்சேரிகளைக் குறித்து விசேஷமாக ஒன்றும் கூறுவதற்கில்லை. மொத்தத்தில் "இளம்" வித்வான்களும் விதுஷிகளும் நன்றாகப் பாடினார்கள். அதிலும் சிலர் முதல் தர வித்துவான்கள் போலவே தங்கள் திறத்தைக் காட்டினார்கள். 5-45 மணிக் கச்சேரிகளில் சில நாம் எதிர்பார்த்தபடி நன்றாக இல்லாமல் போனது கொஞ்சம் மனத் தாங்கலைக் கொடுத்தது. ஆனால் ஒரு பெரிய விழாவில் நடக்கும் பல கச்சேரிகளில் சில நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக இருப்பது இயற்கை தான். அதை ஒரு பெரிய குறையாக எடுத்துக் கூற முடியாது.

மொத்தத்தில் வெள்ளி விழா வெகு விமரிசையாக நடந்தது. ஏற்பாடுகள், திட்டங்கள் எல்லாம் ரொம்பக் கனிசமாக இருந்தன. நிகழ்ச்சிகள் உயர்தரமாகவும் உபயோக முள்ளவைகளாயும் இருந்தன. தென்னிந்தியாவில் இவ்வளவு விமரிசையாக நடத்தப்படும் விழாக்கள் வேறு இல்லை என்றே கூறலாம்.

நான் மேலே சில குற்றங் குறைகளை எடுத்துக் காட்டியதின் உத்தேசம் குறை கூறுவதற்கல்ல; இவ்வளவு பெரிய தொண்டு செய்துவரும் அகாடமி எந்த விதத்திலும் குறைகூற முடியாமல் காரியங்களை நிர்வகிக்க வேண்டும் என்கிற ஆவல் தான் அதற்குக் காரணம்.

இந்த உலகத்தில் பரிபூர்ணம் என்பது துர்லபமானது. ஆனாலும் நாம் அந்தப் பூர்ண நிலையை நோக்கமாகக் கொண்டு உழைக்க மிகவும் கடமைப்பட் டிருக்கிறோம்.

இந்த வருஷ ஸதஸ் மிகவும் விமரிசையாகவே நடந்தது. பேசியவர்கள் நன்றாகவும் ருசிகரமாகவும் பேசினார்கள். இந்த வருஷ விழாத் தலைவர் காரைக்குடி சாம்பசிவய்யரவர்களைப் பற்றி வித்துவான்களும், ரசிகர்களும் பலவிதங்களில் புகழ்ந்து பேசினார்கள். ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் மிகவும் அழகாக சில விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். ஒரு சங்கீதக் கச்சேரி சரியானபடி பிரயோசனமுள்ளதாக அமைய வேண்டுமானால் வித்துவான்கள் மேடையிலமர்ந்து பாடினால் மட்டும் போதாது. சபையோர்களும் சிரத்தையுடன் ரசித்துக் கேட்க வேண்டும். இந்த விஷயத்

வால் தெரிகிறது!



பிரஜா - சோஷலிஸ்டுகள் வகுப்புவாதிகள் பக்கம் சார்ந்து துணை புரியக் கூடாது என்று நேருஜி ஸ்ரீ ஜயப்பிரகாஷுக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

தில் தற்காலத்தில் சபையோர்கள் நடந்து கொள்ளும் முறை சிலாக்கியமானதல்ல என்று அவர்கள் கூறியது ஒரு முக்கியமான விஷயம். கச்சேரி நடக்கும்போது சபையோர்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டு மென்கிற விஷயத்தில் நமக்குச் சிரத்தை வேண்டும்.

ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாஸன் அவர்கள் தம்முடைய முடிவுரையில் முக்கியமான பல விஷயங்களைப் பிரஸ்தாபித்தார். சங்கீதத்திற்கு இனிமை என்பது ஒரு முக்கியமான அம்சம். பாடுகிறவர்கள் தங்கள் சாரீரத்தைச் சிரமப் பயிற்சி செய்து பக்குவப்படுத்த வேண்டும். இந்த விஷயத்தில் நமது தென்னிந்தியப் பாடகர்கள் எடுத்துக் கொள்கிற சிரத்தை போதவே போதாது என்று எடுத்துக் காட்டினார். மேலும் நமது கச்சேரிகளில் இப்போது தாள வாத்தியங்களுக்கு அளவுக்கு அதிகமான பிரதானம் கொடுக்கப்படுவதையும் குறிப்பிட்டார். பாடகர்கள் ஆதார சுருதியை மிகவும் குறைத்துக் கொண்டு பக்க வாத்தியங்களைச் சிரமப்படுத்துவதையும் கண்டித்தார். இந்த விஷயங்களை நமது வித்துவான்கள் கவனித்து நடப்பது சங்கீத முன்னேற்றத்துக்கு உகந்ததாகும்.

★ ★ ★

பிற்பகல் கச்சேரிகள்

வசுமதி ராமசுவாமி

கூட்டின வீட்டுக்குப் பழுது சொல்வதென்று ஒரு வழக்கம் உண்டு. நமக்கு ஆப்தர்களிடம் பல மேன்மைகளுக்கிடையில் ஒரு சிறு குற்றம் இருந்தால் நாம் அதைச் சகிக்க மாட்டோம். நமக்கு வேண்டாதவர்கள் தங்கள் செயல்களைப் பற்றி அபிப்பிராயம் கேட்டாலும், பேஷாக இருக்கிறதென்று உதட்டிற்கு மேல் சொல்வோம். இது மனித இயல்பு. ரொம்ப நன்றாகப் பாடக் கூடியவர்கள் அபூர்வமாக ஒரு சமயம் சிறிது மட்டமாகப் பாடினால்கூட நம் மனம் படாத பாடுபடும். இது ஆத்மார்த்தத்தைக் காட்டும் பாவம்.

இன்று மயிலாப்பூர் வித்வத் சபை சங்கப் பலகையைப் போல் ஒரு கௌரவ தசையை அடைந்திருக்கிறது. அதில் தங்கள் கச்சேரிகளை வைத்துக் கௌரவிக்க வேணுமென எல்லா வித்வான்களும் விரும்புகிறார்கள். அது தங்களுக்கு ஒரு இணையற்ற வாய்ப்பு எனக் கருதுகிறார்கள். அப்படி மகோன்னதமாக விளங்கும் ஒரு ஸ்தாபனத்தில் சிறிது குறை இருந்தால்கூட கண்ணில் ஒரு சின்ன தூசி விழுந்தால் உறுத்திக் கலங்குவதுபோல் கலக்கி வருத்துகிறது.

பிற்பகல் 2-45 முதல் 3-45 வரை சில வித்வான்கள் பாடினார்கள். அந்தக் கச்சேரிகளுக்கு டிக்கட் இல்லாதபடியால் நல்ல கூட்டம். மாலை 5-45 முதல் 8-30 மணி வரை சில கச்சேரிகள் நடந்தன. அவற்றுக்கும் நிறையக் கூட்டம். ஆனால் மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை பாடுபவர்களைப் பற்றி நாம் வருந்தாமல் இருக்க முடியாது. அவர்களும் 5-30 மணி கச்சேரிகளுக்குத் தகுதி உடையவர்களாக இருக்கலாம். அது வேறு விஷயம். தற்காலம் வாழ்க்கையில் நடுவாந்தரக் காரர்களுக்குத் தான் பொல்லாத காலம். அது சங்கீத உலகிலும் இருக்கிறதே யென்று ராமச்சந்திர சாஸ்திரி புல்லாங்குழல் கச்சேரி அன்று தோன்றியது. மாயவரம் ராஜமய்யர் முதலிய சில வித்வான்கள் கர்ம வீரர்களைப் போல் காலி நாற்காலிகளைப் பார்த்துக் கொண்டு உற்சாகம் குன்றாமல் பாடினது மிகமிக பாராட்டத் தக்கது. அங்கொன்று இங்கொன்றாகப் பத்துப் பேர் உட்காருவதை விட எல்லா நாற்காலிகளுமே காலியாக இருந்தால் அவர்கள் ரேடியோவில் பாடுவதாக நினைத்துச் சந்தோஷமாகப் பாடிவிடலாம். அல்லது தியாகய்யர், தீக்ஷிதர் முதலிய மகான்களின் திரு உருவப் படங்களைப் பாடகர்கள் முன்னால் வைத்தாலாவது அவர்களுக்குப் பூஜை அறையில் அமர்ந்து தங்களை மறந்து பாடும் பாவம் ஏற்படும்.

வித்வத் சபை 4-30 மணி வித்வான்களுக்கு மனத்தாங்கல் ஏற்படாமல் செய்ய வேண்டிய கடமை ஒன்று உண்டு. அதே சமயம் ரசிக மகா ஜனங்களுக்கும் ஒரு கடமை உண்டு. பாடின வித்வான்களுக்கு மட்டும் பட்டங்கள் உபசாரம் வழங்கவில்லை. ஆங்கில சகோதரர் அலென் டேனலூ என்பவர் முக்கியமாக ரசிக மகா ஜனங்களாகிய நம்மைத்தான் போற்றிப் பட்டம் வழங்கி இருக்கிறார். நாமின்றிக் கச்சேரி சோபித்து விடாது. பூரணத்துவம் ஏற்படாது. "கட்டுப்பாடாக பதிமூன்று நாட்களும் சளைக்காமல் வந்து கேட்கும் இந்தச் சபையோர்களைப் போல் நான், உலகிலே வேறு எங்குமே கண்டதில்லை" என்று ஆங்கில சகோதரர் பிரமாத ஏற்றம் கொடுத்தார். அதற்கு நாம் தகுதி உடையவர்களாக இருந்தாலும் சிறிது குற்றம் நாம் இழைப்பானேன்! 4-30 மணி கச்சேரிகளுக்கு ரஸிகர்கள் கூடிய மட்டும் வந்து வித்வான்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும்.

வித்வத் சபை வித்வான்களுக்குத் தாய்மை ஸ்தானம் வகிக்கிறது. டிக்கெட் விற்றுப் பொருள் சேர்க்கும் வகையில் அது இல்லை. வித்வான்களுக்கு உற்சாகம் ஊட்டிக் கௌரவிக்கக் கூட்டம் அவசியம். ஆகையால் 2-45 கச்சேரிக்கு எப்படி டிக்கெட் இன்றி எல்லாரையும் அனுமதிக்கிறார்களோ அப்படி 4-30 மணி கச்சேரிகளுக்கும் எல்லாரையும் அனுமதிக்க வேண்டும். அப்படி எல்லோரையும் அனுமதித்தால் கூட்டத்திற்குக் குறைவிராது. சங்கீத வித்வான்களும் உற்சாகம் குன்றாமல் பாடுவார்கள்.

வித்வத் சபை வெள்ளி விழா நடத்தி வெற்றி கண்டது. நிர்வாகிகளும், மற்றோரும் தங்கள் பெண், பிள்ளைகளின் விவாகம்மாதிரி சலிப்பின்றிப் பாடுபட்டார்கள். அவ்வப்பொழுது கச்சேரிகள் காலதாமதமின்றி ஒழுங்காகவும், ஏற்பாடாகவும் நடந்ததைப் பாராட்டிச் சாத்தியமேயில்லை. தெய்வ சக்தி மக்கள் மூலம் பரிணமித்தது. இன்னும் பொன் விழா, வைர விழா எல்லாம் நடந்தேறக் காத்திருக்கிறது. இதையெல்லாம் நினைக்கும் பொழுது சந்திரன், சூரியன், கர்நாடக சங்கீதம் இவை மூன்றும் இருக்கும் பொழுது நமக்கென்ன குறையென்று பூரிக்கிறோம்.



தாய்லந்தில் திருப்பாவை

ஜெயமணி

கிரீஸ் சர்க்காரில் மந்திரி பதவி வகித்த ஸ்ரீ எம். பி. கௌதாஸ் என்ற கிரேக்கப் பிரமுகர் தற்போது பாரத நாட்டில் யாத்திரை செய்து வருகிறார். கிரேக்க பாஷை இந்திய பாஷையிலிருந்தே உண்டாயிற்று என்று அவர் ஆராய்ச்சி பூர்வமாகக் கூறுகிறார். மற்றும் இந்திய கலாச்சாரங்களை அடிப்படையாகக் கொண்டே கிரேக்கர்களின் நாகரிகம் உருவாகி யிருக்கிறது என்பதும் அவரது கருத்து.

இவ்வாறாக, மேற்கே மத்தியதரைக் கடல் பிரதேசத்திலிருந்து கிழக்கே பசிபிக் மகா சமுத்திரம் வரையில் சுமார் எண்ணாயிரம் மைல் தூரம் பரந்து கிடக்கும் பிரதேசங்களில் பாரதத்தின் பண்பாடும் நாகரிகமும் பரவி யிருந்தது என்பதற்குப் புதிய புதிய ஆதாரங்கள் வெளியாகி வருகின்றன.

* * *

தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவாஞ்சியம் என்ற திவ்ய க்ஷேத்திரத்திலே இந்த மார்கழி மாதம் முதல் வாரத்தில் திருவெம்பாவை-திருப்பாவை-திருமறை ஆறங்க மகாநாடு வெகு விமரிசையாக நடைபெற்றது. மேற்படி வைபவ சம்பந்தமான விவரங்கள் சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளியாகி யிருந்தன.

அந்த மகாநாட்டுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஆசிச் செய்தி அனுப்பி யிருந்தார்கள். அந்தச் செய்தியில் சயாம் அல்லது தாய்லந்து, இந்தோசீனா முதலிய தேசங்களில் திருவெம்பாவை — திருப்பாவை உற்சவம் தொன்று தொட்டு விமரிசையாக நடந்து வருவதாய்க் குறிப்பிட்டிருந்தார்கள்.

அந்த நாடுகளில் பல நூற்றாண்டுகளாகத் திருவெம்பாவை - திருப்பாவை விழா நடந்து வருகிறது என்பது மேற்படி பிரதேசங்களின் சம்பிரதாயங்கள், சரித்திர ஆராய்ச்சி நூல்கள், கல்வெட்டுகள் முதலியவற்றிலிருந்து ஆதார பூர்வமாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் பேராசிரியரான எச். ஜி. குவாரிட்ச் வேல்ஸ் (H. G. Quaritch Wales, M. A., Ph. D.) 1931-ம் ஆண்டில் எழுதிய சயாம் சரித்திர ஆராய்ச்சி நூலில், அந்த நாட்டில் ஆண்டுதோறும் நடக்கும் சில விழாக்களைப் பற்றி விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார். அத்தகைய விழாக்களில் திருவெம்பாவை - திருப்பாவை விழா மிகவும் முக்கியமானது என்று அவர் தமது நூலில் கூறி யிருக்கிறார்.

"The important ceremony of Triyambavay Tripavay popularly known as Lo Jin Ja (Pulling the Swing) is one of the most interesting of all Siamese State Ceremonies."

அதாவது, "ஊஞ்சல் உற்சவம் எனப் பிரசித்தமாக வழங்கும் திருவெம்பாவை-திருப்பாவை என்ற முக்கியமான விழா சயாம் அரசாங்க விழாக்களிலேயே மிகவும் சுவாரஸ்யமான தொன்று" என்று குவாரிட்ச் வேல்ஸ் தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்படி விழா சயாம் தேசத்தின் இன்றையத் தலைநகரான பாங்காக்கில் மாத்திரமல்ல, பழைய தலைநகரங்களான அயோத்தியா, சுகோதயா நகரங்களிலும் மற்ற முக்கியப் பட்டணங்களிலும் கூடக் கொண்டாடப் பட்டு வந்திருக்கிறது. பண்டைய காலத்தில் ஸ்ரீ தர்மராஜ நகரம் என வழங்கி வந்த இன்றைய நாகான் ஸிதார் நகரில், அக்காலத்திலே திருவெம்பாவை—திருப்பாவை விழாவுக்காக அமைக்கப்பட்ட ஊஞ்சல் இன்றும் அப்படியே இருப்பதைக் காணலாம்.

* * *

பிரதி வருஷமும் மார்கழி மாதத்தில் சிவபெருமான் கைலாசத்திலிருந்து பூமிக்கு எழுந்தருளுகிறார் என்பது சயாமியர்களின் நம்பிக்கை. சிவபெருமான் பூமிக்கு வந்து

இங்கு பத்து நாட்கள் தங்கி யிருக்கிறாராம். சிவபெருமான் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றபின் ஸ்ரீ மகாவிஷ்ணு பூமிக்கு எழுந்தருளி ஐந்து நாட்கள் வரையில் தங்கியிருக்கிறாராம்.

மேற்படி பதினைந்து நாட்களைத்தான் சயாமியர்கள் மிகுந்த ஆடம்பரத்துடன் திருவெம்பாவை — திருப்பாவை உற்சவமாகக் கொண்டாடுகிறார்கள். சிவபெருமான் பூமிக்கு வரும்போது அவரை வரவேற்க சூரியன், சந்திரன், பூமாதேவி, கங்கை முதலியோர் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற சம்பிரதாயம் அவர்களால் பல நூற்றாண்டுகளாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.



ஆனந்த நடனம்

மேற்படி விழாவின் போது சயாம் மன்னர் ஒரு கனவானைச் சிவபெருமான் ஸ்தானத்தில் நியமிக்கிறார். அந்த விழா முடியும் வரையில் அந்தக் கனவானுக்கு ஏராளமான அதிகாரங்கள் அளிக்கப்படுகின்றன. சயாம் சம்பிரதாயப்படி அவரை விழா முடியும்வரையில் கடவுள் அல்லது தற்காலிக மன்னராகவே கருதுகிறார்கள்.

ஊஞ்சல், நீராடல், நடனம் முதலியவை திருவெம்பாவை விழாவின் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன.

அயோத்தியா, சயாமின் தலைநகராக இருந்த காலத்தில் சயாம் சர்க்காரின் விவசாய மந்திரிகளே சிவபெருமான் ஸ்தானத்தில் மன்னரால் நியமிக்கப்பட்டு வந்தனர்.

சிவபெருமானாக நியமிக்கப்படுவோருக்குச் சுக்ல பட்சம் சப்தமி திதியன்று, அரசாங்க விழாக்களில் சயாமிய மன்னர்கள் உடுத்துவதுபோல் உடைகள் உடுத்துவார்கள். பிறகு அவரைப் புத்தர் ஆலயத்திலிருந்து பல்லக்கில் ஊர்வலமாக ஊஞ்சல் போட்டிருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லுவார்கள். அந்த ஊர்வலத்துடன் மன்னரின் குடை முதலிய ராஜ விருதுகளும் செல்லும்.


ஊர்வலத்துடன் சிலர் வித்தைகள் செய்து கொண்டு வருவது உண்டு. சிற்சில சமயங்களில் தேவேந்திரன் ஐராவதத்தில் ஏறி வருவதைப் போல் ஒருவர் வேஷம் தரித்துக் கொண்டு ஊர்வலத்துடன் வருவார். சிலர் நாகலோகத்திலிருந்து வருகிறவர்கள் என்பதற்கு அறிகுறியாகத் தலைகளில் பாம்பின் படத்தைப் போன்ற விசித்திரமான தலையங்கிகளைத் தரித்துக் கொண்டிருப்பார்கள். சிவபெருமானுடன் தேவ கணங்களும் வருகின்றன என்பதுதான் மேற்படி சம்பிரதாயத்தின் கருத்தாகும். ஊர்வலத்துடன் பேரிகை முதலிய வாத்தியங்களும் முழங்கிக் கொண்டு வரும்.

எண்பது அடி உயரம் உள்ள இரண்டு மரஸ்தம்பங்களில் ஊஞ்சல் போடப்பட்டிருக்கும். ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடுவோர் பல வேடிக்கைகள் செய்வார்கள். அவர்கள் அங்கே பீடத்தில் உட்கார்ந்திருக்கும் சிவபெருமானின் மனம் குளிரும்படி செய்வதற்கு ஊஞ்சல், நடனம், பூஜை முதலிய கைங்கர்யங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

* * *

திருவெம்பாவை விழாவின்போது சிவபெருமானாக பீடத்தில் உட்கார்ந்திருப்பவர் வலது காலைப் பூமியில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இடது காலை வலது கால் முழங்கால் மீது வைத்துக் கொள்ள வேண்டும். அவர் உட்கார்ந்திருக்கும்போது இடது

ஊர்வலத்துடன் ராஜ விருதுகள் செல்லும் காட்சி



கால் பூமியைத் தொடக் கூடாது. நமது கோவில்களில் தக்ஷிணாமூர்த்தி விக்ரகத்தைப் பார்ப்பவர்கள், சயாமில் அனுஷ்டிக்கப்படும் மேற்படி சம்பிரதாயத்தின் தத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

தென்னிந்தியாவில் ஆருத்திரா தரிசனம் எப்போது நடைபெறுகிறதோ, அதே சமயத்தில் தான் சயாமில் திருவெம்பாவை—திருப்பாவை விழா நடை பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் ஊஞ்சல் திருநாள் ஆருத்திரா தரிசன விழாவின் ஒரு முக்கிய அம்சமல்லவா?

மேலே குறிப்பிட்ட பதினைந்து நாட்கள் வரையில் சிவபெருமானும் விஷ்ணுவும் தேவ கணங்களும் பூமிக்கு வந்து ஜனங்களுக்கு அருள் புரிகிறார்கள் என்பது சயாமியர்களின் நம்பிக்கை. இந்த வைபவத்தையே சயாமியர்கள் திருவெம்பாவை-திருப்பாவை விழாவாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

உலகத்திலே நெல் உற்பத்தியில் சயாம் முக்கிய ஸ்தானம் வகிப்பதால், திருவெம்பாவை—திருப்பாவை விழாவை முக்கியமாக அறுவடை விழாவாகவே கருதவேண்டும் என்றும் கூறப்படுகிறது.

*　　　　*　　　　*

ரிக் வேதத்தில் சூரியன் 'வான வீதியில் ஆடும் தங்க ஊஞ்சல்' என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சயாமில் திருவெம்பாவை—திருப்பாவை விழாவில் ஆகாயம் அளாவ அமைக்கப்படும் ஊஞ்சல் சூரியனையே குறிக்கிறது என்று கூறுகிறார்கள்.

சிவபெருமான் விழா (திருவெம்பாவை) முடிவுற்றதும் விஷ்ணு கோவிலில் விஷ்ணு விழா (திருப்பாவை) ஆரம்பமாகிறது. அக்கோவிலில் ஒரு மேடையை அமைக்கிறார்கள். மேற்படி மேடை பத்ரபீடம் என்று கூறப்படுகிறது. அதன் அருகில் ஒரு தொட்டியில் அன்ன பட்சி உருவத்தை வைத்து அபிஷேகம் செய்கிறார்கள். பிறகு ஐந்து நாட்கள் வரை அந்த விழா சம்பந்தமாக நடனம், நீராடல் முதலியவை நடைபெறுகின்றன.

அன்ன பட்சி தண்ணீரை விலக்கி விட்டுப் பாலை மாத்திரம் பருகுவது போல், பாவங்களைக் களைந்து பூஜையை மாத்திரம் மகா விஷ்ணு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் பிரார்த்தனையே அதன் கருத்தாகும்.

இவ்வாறாக, உலகத்தைப் பாதுகாக்கும் மூர்த்தியான விஷ்ணுவையும், சம்ஹார மூர்த்தியான சிவபெருமானையும் கொண்டாடி வணங்கினால், பல இன்னல்களும் தீர்ந்து மக்கள் மகிழ்ச்சியையும் சுபிட்ச வாழ்வையும் அடைவார்கள் என்பதே தொன்று தொட்டு சயாமியர்களின் நம்பிக்கை.

சயாமுக்கும் தமிழ் நாட்டுக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பு இருந்து வந்திருக்கிறது என்பதையும் அந்த நாட்டில் நடைபெறும் திருவெம்பாவை — திருப்பாவை விழா குறிக்கிறது.

அட்டைப்பட விளக்கம்

மரத்தின் நிழலிலே

காதலனைப் பிரிந்த அந்தப் பெண் சதா அவன் நினைவிலேயே மூழ்கியிருந்தாள். அவன் பேசிய பேச்சுக்கள், அவன் கொடுத்திருந்த உறுதி மொழிகள், அவனுடன் கலந்து உறவாடிய இடங்கள்—இவற்றைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பாள்.

ஒரு தடவை அவனுடன் சோலையில் மரத்தின் நிழலில் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது. அந்த மரத்தடிக்குப் போனால் அந்தப் பழைய சம்பவங்கள் நன்றாக ஞாபகம் வருமல்லவா என்று நினைத்துக் கொண்டு போனாள்.

அவள் எதிர்பார்த்தாற் போலவே பழைய ஞாபகங்கள் அவளுக்கு இன்பத்தை அளித்தன. கூடவே, இன்னொரு சந்தேகம் எழுந்தது:

இரவும் பகலும் ஒன்றாய்நான்
ஏங்கி ஏங்கித் தவிப்பதையும்

பிரிவின் உருவாய் இருப்பதையும்
பேதை நெஞ்சாய் துடிப்பதையும்

மரத்தின் நிழலில் அன்றொருநாள்
மருவிப் பேசிய பேச்சையுமே

மறந்தே போய்விட் டிருப்பாரோ— அன்றி
மனத்தில் எண்ணி மகிழ்வாரோ?

அவளுடைய மனோநிலையை மரத்தின் மீது சாய்ந்து நிற்கும் நிலையிலும், அவள் முக பாவத்திலும் நன்றாகப் பிரதிபலிக்கச் செய்திருக்கிறார் நமது சித்திரக்காரர் ராகவன்.

அன்றொரு நாள் அவர்கள் குலாவிப் பேசிய காட்சியையும் ஒரு புறத்தில் தந்திருக்கிறார்.

ஒரு அணா விலைக்கு

உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகளின்



பொன் மொழிகள்

2ம் பாகம்

அசோகா வெளியீடு : 4" × 2½" சைஸ்

பளபளப்பான தங்க நிற அட்டை — 128 பக்கங்கள் கொண்டது.

எல்லா ஊர்களிலும் உள்ள 'அசோகா' பாக்குத்தூள் விற்பனையாளர்களிடமும் (ஏஜண்டுகள்) ஒரு அணா விலைக்கே கிடைக்கும்.

0—3—0 அணா தபால் ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டு மூலம் இரண்டு "பொன் மொழிகள்" புஸ்தகங்கள் அனுப்பப்படும்.

மொத்தமாகத் தேவையுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும். மாதிரி புஸ்தகம் தேவையுள்ளவர்கள் 0—2—0 அணா தபால் ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும்.

100 புஸ்தகங்களுக்கு மொத்த விலை ரூ. 5-8-0

500 புஸ்தகங்களுக்கு மொத்த விலை ரூ. 25-0-0

சென்னை மாகாணத்திலுள்ள எந்த ரயில்வே ஸ்டேஷனிலும் இலவச டெலிவரி. முழுத் தொகையும் முன் பணமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு :—1. எக்காரணங் கொண்டும் V. P. மூலம் யாருக்கும் அனுப்ப இயலாது.
2. 20-1-53-க்குப் பின் வரும் ஆர்டர்களுக்கு புஸ்தகம் கைவசம் இருந்தால் அனுப்பப்படும். இல்லையேல் பணம் வாபஸ் செய்யப்படும்.

விவரங்களுக்கு

M. K. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்குத்தூள் விற்பனையாளர்

தபால் பெட்டி நெ. 106 :: கோயமுத்தூர்

தமிழ்க் களஞ்சியம்

டி. கே. சி

18. சொல்ல மாட்டீர்களா ?

திருவாரூருக்குப் பக்கத்தில் ஒரு ஊர். அங்கே ஒரு பெண்.

பெண் திருவாரூரை நோக்கிப் போகிறாள். பாதையை ஒட்டி ஒரு காட்சி.

வனமான கரும்புகள் கொழுத்து நிற்கின்றன. ஒரு பெரிய நாரை அந்தப் பக்கமாகப் பறந்தோடிப் பாய நேர்ந்தது. இறக்கை பட்டுக் கரும்பு 'சடார்' என்று முறிந்தது. இதே வியப்பாய் இருந்தது பெண்ணுக்கு. இதை விட வியப்பு முறிந்த கரும்பிலிருந்து வடிந்த சாறு மெள்ள ஓடிப் பக்கத்திலிருந்த செந்நெல் வயலில் இறங்கியது. எல்லாம் வெகு ரஸமான காட்சியாய் இருந்தது; மனசை விட்டுப் போகக் கூடிய காட்சி அல்லதானே ?



திருவாரூர் போய்ச் சேர்ந்தாள். அந்த நேரத்தில்தான் தியாகராஜப் பெருமான் வீதி வழியாகப் பவனி வருகிறார். வெகு கோலாகலமாய் அலங்காரங்களுக்கும் தோரணங்களுக்கும் இடையே வருகிறது பவனி.



தேரில் எழுந்தருளியுள்ள தியாகராஜப் பெருமானது அழகை இப்படி அப்படி என்று சொல்லிவிட முடியாது. அந்த அழகில் ஈடுபட்டு விடுகிறாள் பெண். மனசை என்னவெல்லாமோ செய்கிறது பெருமானது உருவம். அவ்வளவுதான். தன் ஊருக்குத் திரும்பி விடுகிறாள் சாயங்காலம்.

இரவு சாப்பாடு இறங்கவில்லை. படுத்தாள்; உறக்கம் வரவில்லை. இரவெல்லாம் ஒரே மயக்க வெறி.

விடிந்ததும் எழுந்து நந்தவனத்துக்குள் போனாள். தான் வளர்த்த கிளிகளும் மைனாக்களும் உல்லாசமாய் மரக்கிளைகளுக்கிடையே விளையாடிக் கொண்டிருக்கின்றன. தன் கஷ்டத்தைக் கவனித்த பாடாக இல்லை.

பறக்குமெம் கிள்ளைகாள்
 பாடுமெம் பூவைகாள்
அறக்கண் எனத்தகும்
 அடிகள்ஆ ரூரரை
மறக்ககில் லாமையும்
 வளைகள்நில் லாமையும்
உறக்கம்இல் லாமையும்
 உணர்த்தவல் லீர்களோ.

[பறக்கும் எம் கிள்ளைகாள்: என்னிடத்தில் வராமல் அப்படியே பறந்தோடப் பார்க்கிறீர்களே கிளிகளே; பூவைகாள்: மைனாக்களே; அறக்கண் எனத்தகும்: எல்லோரும் நம்மைக் கொடுமையால் நடத்திக் கொண்டிருக்கும்போது

யாராவது ஒருவர் நம்மை அனுதாபத்தோடு இரக்கம் கொண்டு பார்ப்பார்களானால் அந்தப் பார்வையில்த்தான் அழகெல்லாம் குடிகொண் டிருக்கும். அத்தகைய கண்போல் அழகாய் இருக்கிறது தியாகராஜப் பெருமானது திருமேனி.

வளைகள் நில்லாமையும்: மனது வசத்தில் இல்லாமல் இருக்கும்போது வளையல்கள் கையை விட்டு கெழிந்து எங்கேயாவது உருண் டோடிக் கிடக்கும், தேட வேண்டியதாய்ப் போய்விடும்.]

இப்படியாகக் காதல் வெறியில் கிளிகளோடும் மைனாக்களோடும் பேசிக் கொண்டிருக்கிறாள்.

சிறிது நேரம் மௌனமாய் நிற்கிறாள். காதல் வெறி மறுபடியும் மேலிடுகிறது.

கரும்பு நெரிந்து, சாறு வயலில் ஓடுகிற காட்சி கண்ணுக்கு வந்தது.

குருகுபா யக்கொழுங்
கரும்புகள் நெரிந்தசா(று)

அருகுபா யும்வயல்
அந்தணா ரூரைப்

பருகுமா றும்பணிந்
தேத்துமா றும்நினைந்(து)

உருகுமா றும்இவை
உணர்ந்தவல் லீர்களோ.

இரவெல்லாம் உறக்கமோ இல்லை. கனவு கனவாய்க் காட்சிகள் வருகின்றன. தியாகராஜப் பெருமானை அப்படியே விழுங்கி விடலாம் என்று தோன்றுகிறது; சதா வணங்கி வணங்கிப் புகழுகிறதாகத் தோன்றுகிறது; நினைத்து நினைத்து மனம் உருகி ஓடித் தொலைந்து போகிறதாகத் தோன்றுகிறது. இதையெல்லாம் அந்தத் தியாகராஜப் பெருமானுக்கு மனசில் படும்படியாகச் சொல்ல மாட்டீர்களா?

பருகுமா றும், பணிந்(து)
எத்துமா றும், நினைந்து

உருகுமா றும்இவை
உணர்ந்தவல் லீர்களோ:

(பறக்கும்எம் கிள்ளைகாள்
பாடும்எம் பூவைகாள்)

பக்தியும் காதலும் தமிழோடு கலந்து புரண்டு உருளுவது வெகு அழகாய் இருக்கிறது-



அத்தியாயம் 30

குற்றச் சாட்டு

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் உள்ளமும் உடலும் சில நாளாகப் பெரிதும் நைந்து போயிருந்தன. புயல் அடித்த இரவு அவர் தூங்கவே இல்லையென்று இளைய பிராட்டி முதன் மந்திரியிடம் கூறியது மிகைப்படுத்திக் கூறியதல்ல. அன்று பகற் பொழுதும் அவர் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டுதானிருந்தது. பிற்பகலில் சின்னப் பழுவேட்டரையர் வந்து அவருடைய சஞ்சலத்தை அதிகப்படுத்தி விட்டார். முக்கியமாக, முதன் மந்திரி அநிருத்தர்மீது அவர் பல குற்றங்களைச் சுமத்தினார். அவர் தஞ்சைக்கு வந்தது முதல் கோட்டைக்குள் ஜனங்கள் வருவது பற்றிய கட்டு திட்டங்கள் எல்லாம் உடைந்து விட்டன என்று கூறினார். முதன் மந்திரியைப் பார்ப்பதற்கு வருகிறோம் என்ற வியாஜத்தினால் கண்டவர்கள் எல்லாம் கோட்டைக்குள் நுழைகிறார்கள் என்றும், இதனால் சக்கரவர்த்தியின் பாதுகாப்புக்கே பங்கம் விளையலாம் என்றும் குறிப்பிட்டார். அந்த இரண்டு குற்றங்களையும் கேட்ட சக்கரவர்த்தி தமக்குத் தாமே புன்னகை செய்து கொண்டார். அவற்றை அவர் முக்கியமாகக் கருதவில்லை.

ஆனால் மேலும் காலாந்தக கண்டர் சுமத்திய குற்றங்களைப் பற்றி அவ்விதம் அலட்சியம் செய்ய முடியவில்லை. அன்று வெளியிலேயிருந்து வந்த ஜனங்களுக்கும் வேளக்காரப் படையினருக்கும் வீதியில் விவாதம் முற்றிப் பெருங் கலவரமாகி விடக்கூடிய நிலைமை ஏற்பட்டதென்றும், அச்சமயம் நல்லவேளையாகத் தாம் அங்கே செல்ல நேர்ந்தபடியால் விபரீதம் எதுவும் நேரிடாமல் தடுத்து இரு



சாராரையும் சமாதானப்படுத்தி அனுப்பியதாகவும் கூறினார். முதன் மந்திரி அநிருத்தர் ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவர் என்று நாடெல்லாம் பிரசித்தமாயிருக்க, அவருடைய நடவடிக்கை அதற்கு நேர் மாறாயிருக்கிறதென்றும், கோடிக் கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகக் கைப்பற்றி அவர் கொண்டு வந்திருக்கிறார் என்றும், பழுவூர் அரண்மனைப் பல்லக்கையும் ஆள்களையும் இந்தக் காரியத்துக்கு உபயோகப் படுத்தியதாகவும், எதற்காக என்பது தெரியாமல் தாம் ஆட்களையும் பல்லக்கையும் அனுப்பி விட்டதாகவும், ஏதாவது அபகீர்த்தி ஏற்பட்டால் அது பழுவூர்க் குடும்பத்தின் தலையிலே விடியும் என்றும் கூறினார். கடைசியாக, இன்னொரு சந்தேகாஸ்பதமான சம்பவத்தைப் பற்றியும் சொன்னார். "பெரிய பழுவேட்டரையர் அரண்மனைக்கு யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி வருவதாக அறிந்து நான் கவலை கொண்டிருந்தேன். அவன் இளைய பிராட்டியைப் பார்க்க வருவதாக அறிந்தபடியால் நடவடிக்கை எடுக்கத் தயக்கமாயிருந்தது. ஆயினும், அந்த அரண்மனையின் மீது ஒருகண் வைத்திருக்கும்படி ஒரு ஒற்றனை நியமித்திருந்தேன். இன்றைக்கு யாரோ ஒருவன் பொக்கிஷ மந்திரியின் அரண்மனைத் தோட்டத்தில் பின்புறமாகச் சுவர் ஏறிக் குதித்ததைப் பார்த்ததாக அந்த ஒற்றன் வந்து சொன்னான். உடனே அவனைக் கைப்பற்றி வரச் சில ஆட்களை அனுப்பினேன். அவர்கள் ஒருவனை அரண்மனைத் தோட்டத்தில் கையும் மெய்யுமாகப் பிடித்து வந்தார்கள். யார் என்று பார்த்தால், முதன் மந்திரியின் அருமைச் சீடனாகிய ஆழ்வார்க் கடியான் என்று தெரிய வந்தது. 'எதற்காகச் சுவர் ஏறிக் குதித்தாய்?' என்று கேட்டதற்கு அவன் மறுமொழி சொல்ல மறுத்து விட்டான். 'முதன் மந்திரியின் கட்டளை' என்றான். சக்கரவர்த்தி! இப்படியெல்லாம் இந்த அநி

ருத்தப் பிரம்மராயர் செய்து வந்தால், தஞ்சைக் கோட்டைப் பாதுகாப்புக்கு நான் எப்படிப் பொறுப்பு வகிக்க முடியும்? என் தமையனாரும் ஊரில் இல்லாதபடியால் இதையெல்லாம் தங்கள் காதில் போட வேண்டியதாயிற்று!"

இவ்வாறு சின்னப் பழுவேட்டரையர் முறையிட்டது சக்கரவர்த்தியின் மனக் குழப்பத்தை அதிகமாக்கிற்று. "ஆகட்டும்; இன்று மாலை அநிருத்தர் இங்கே வருகிறார். இதைப்பற்றியெல்லாம் விசாரிக்கிறேன். முக்கியமாக, கோடிக்கரையிலிருந்து ஒரு பெண்ணைப் பலவந்தமாகப் பிடித்து வரச் சொன்ன விஷயம் என் மனத்தைப் புண்ணாக்கியிருக்கிறது. அது உண்மைதானே, தளபதி! சிறிதும் சந்தேகம் இல்லையே?" என்று கேட்டார்.

"சந்தேகமே இல்லை; பல்லக்குத் தூக்கிகளும் அவர்களுடன் வந்த வீரர்களும் நேற்று நள்ளிரவில் என்னிடம் வந்து சொன்னார்கள். தஞ்சைக் கோட்டையை அணுகிய போது புயலில் சிக்கிக் கொண்டார்களாம். சாலையின் மரம் ஒன்று பெயர்ந்து விழுந்து சிலருக்கு அபாயம் ஏற்பட்டதாம். சிவிகை மீது விழாமல் தப்பியது பெரும் புண்ணியம் என்று சொன்னார்கள். நல்லவேளையாக, ஸ்திரீ ஹத்தி தோஷம் ஏற்படாமற் போயிற்று! இதைப்பற்றி விசாரிப்பதோடு, ஆழ்வார்க்கடியான் காரியத்தையும் சக்கரவர்த்தி தீர விசாரணை செய்ய வேண்டும்!" என்று தெரிவித்து விட்டு, காலாந்தக கண்டர் சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுச் சென்றார். அநிருத்தர் வரும் சமயத்தில் அங்கே இருக்கச் சின்னப் பழுவேட்டரையர் விரும்பவில்லை. தாறுமாறாகச் சம்பந்தமில்லாத கேள்வி ஏதேனும் தம்மை முதன் மந்திரி கேட்டுத் திணறச் செய்யக்கூடும் என்ற அச்சம் அவர் மனத்திற்குள்ளே இருந்தது. முக்கியமாக, சக்கரவர்த்தியிடம் புயலினால் அவதிக்குள்ளான ஜனங்களுக்கு உதவுவதற்காகப் பொக்கிஷ சாலையைத் திறந்து விடும்படி அநிருத்தர் தம் முன்னாலேயே உத்தரவு வாங்கி விட்டால் பெரிய தொல்லையாகப் போய் விடும். நாளைக்குத் தமையனாரின் முன்னால் எப்படி முகத்தைக்காட்டுவது?



அநிருத்தருடைய வரவை அன்று காலையிலிருந்தே சக்கரவர்த்தி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் தான் முதன் மந்திரி வந்தார். அவருடைய திட நெஞ்சமும் இப்போது சிறிது கலங்கிப் போயிருந்தது. அவர் எவ்வளவோ ஜாக்கிரதையுடன் போட்டிருந்த திட்டம் தவறிப் போய்விட்டது. மந்தாகினியைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைக்கும், பின்னர் சக்கரவர்த்தியைப் போய்ப் பார்க்கலாம் என்று அவர் அரண்மனைக்குப் போவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார். பிற்பகலில் ஆழ்வார்க்கடியான் வந்து பெரிதும் தர்ம சங்கடமான செய்தியைத் தெரியப்படுத்தினான். ஊமைராணி போயிருக்கக்கூடும் என்று தான் ஊகித்த குறுகிய சந்து வழியில் சென்றதாகவும், ஒரு ஸ்திரீ பழுவேட்டரையர் அரண்மனை தோட்டத்து மதிள் சுவரில் ஏறிக் குதித்தது போல் தோன்றியதென்றும், அவள் ஊமை ராணியாக இருக்கக்கூடும் என்று எண்ணி அவனும் அந்த மதிள் சுவரில் ஏறிக் குதித்ததாகவும், தோட்டத்தில் தேட ஆரம்பிப்பதற்குள்ளே சின்னப் பழுவேட்டரையரின் ஆட்கள் வந்து பிடித்துக் கொண்டதாகவும் கூறினான். "அவர்களிடம் உண்மைக் காரணத்தைச் சொல்ல முடியவில்லை, ஐயா! அதனாலேதான் தங்களுடைய பெயரைக் கூறி விடுதலை பெற்று வர வேண்டியதாயிற்று!" என்றான்.

இந்த விவரம் முதன் மந்திரிக்குப் பெருங் கவலையை உண்டாக்கிற்று. "இந்தத் தஞ்சாவூர்க் கோட்டையில் இவ்வளவு அரண்மனைகள் இருக்கிறபோது, பெரிய பழுவேட்டரையரின் மாளிகையிலேயேதானா அவள் பிரவேசிக்க வேண்டும்? பகிரங்கமாக ஆள் விட்டுத் தேடச் சொல்லக்கூட முடியாதே? ஆனாலும், பார்க்கலாம். பெரிய பழுவேட்டரையர் ஊரில் இல்லாதது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. அரண்மனையைச் சுற்றிலும் காவல் போட்டு வைக்கலாம். அவ்வரண்மனைக்கு உள்ளேயும் எனக்கு ஒரு ஆள் இருக்கிறான். அவனுக்கும் சொல்லி அனுப்புகிறேன்! இருந்தாலும், இந்த ஓடக்காரப் பெண் எவ்வளவு தர்மசங்கடத்தை

உண்டாக்கி விட்டாள்?" என்றார் முதன் மந்திரி.

"சுவாமி! ஓடக்காரப் பெண் குறுக்கிட்டிரா விட்டாலும் ஊமை ராணி தங்கள் விருப்பத்தின்படி நடந்திருப்பாள் என்பது நிச்சயமில்லை. எப்படியாவது ஓடிப் போகத்தான் முயன்றிருப்பாள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.



"எனக்கென்னவோ ஒரு நம்பிக்கை இருக்கிறது. இத்தனை தூரம் வந்தவன் சக்கரவர்த்தியைப் பார்க்காமல் போக மாட்டான் என்று. நம்மால் முடிந்த முயற்சிகளையெல்லாம் செய்து பார்க்கலாம். ஆனால் இனிமேலும் சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்குப் போகாமல் காலந் தாழ்த்துவது முறையன்று. நீயும் அந்த ஓடக்காரப் பெண்ணை அழைத்துக் கொண்டு என்னுடன் வா! இரண்டு இளவரசர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் சக்கரவர்த்திக்குத் தெரியப் படுத்திவிட வேண்டும். சின்ன இளவரசரைக் கடலிலிருந்து கரை சேர்த்த ஓடக்காரப் பெண் நேரில் அதைப் பற்றிச் சொன்னால் சக்கரவர்த்திக்கு நம்பிக்கை உண்டாகலாம்" என்றார்.

முதன் மந்திரி அநிருத்தரும் அவருடைய சீடனும் பூங்குழலியும் சக்கரவர்த்தியின் அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனை முகப்பிலேயே இளைய பிராட்டியும் வானதியும் அவர்களுக்காகக் காத்திருந்தார்கள். ஊமை ராணி அகப்படவில்லையென்ற செய்தி இளைய பிராட்டிக்கும் கலக்கத்தை அளித்தது. அவள் பெரிய பழுவூர் மன்னரின் அரண்மனைத் தோட்டத்தில் புகுந்த செய்தி கலக்கத்தை அதிகப்படுத்தியது. இதிலிருந்து விபரீத விளைவு ஏதேனும் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்ற கவலையும் ஏற்பட்டது.

"ஐயா! பெரிய பழுவூர் மன்னரின் மாளிகையிலிருந்து வெளியேறுவதற்குச் சுரங்க வழி இருக்கிறதாமே? அதன் வழியாகப் போய் விட்டால்?"

முதன் மந்திரிக்கு வந்தியத்தேவனின் நினைவு வந்தது. "தாயே! அந்த வழியைக் கண்டு பிடிப்பது அவ்வளவு சுலபமாயிருக்குமா? எல்லாரும் வாணர் குலத்து வாலிபனைப் போன்ற அதிர்ஷ்டசாலியாயிருப்பார்களா? ஆயினும் கோட்டைக்கு வெளியிலும் ஆட்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்!" என்றார்.

பின்னர் ஆழ்வார்க்கடியானையும் பூங்குழலியையும் இளைய பிராட்டியுடன் விட்டுவிட்டு, முதன் மந்திரி மட்டும் சக்கரவர்த்தி படுத்திருந்த இடத்துக்குச் சென்றார். சக்கரவர்த்திக்கும் அவர் அருகில் வீற்றிருந்த வானமாதேவிக்கும் வழக்கமான மரியாதைகளைச் செலுத்தி விட்டு, புயலினால் சோழ நாடெங்கும் நேர்ந்துள்ள சேதங்களைப் பற்றி விசாரித்துத் தக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்ததினால் சீக்கிரமாக வர முடியவில்லை என்று சக்கரவர்த்தியிடம் தெரியப்படுத்திக் கொண்டார்.

அந்த ஏற்பாடுகளைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டதில் சக்கரவர்த்திக்குச் சிறிது திருப்தி உண்டாயிற்று.

"தனாதிகாரி இல்லாத சமயத்தில் நீங்களாவது இப்போது இங்கு இருந்தீர்களே! அது நல்லதாய்ப் போயிற்று! ஆனால் இது என்ன நான் கேள்விப்படுவது? கோடிக்கரையிலிருந்து யாரோ ஒரு ஸ்திரீயைப் பலவந்தமாகப் பிடித்து வந்திருக்கிறீராமே? சற்று முன் கோட்டைத் தளபதி சொன்னார். பிரம்மராயரே! இம்மாதிரி நடவடிக்கையை உம்மிடம் நான் எதிர்பார்க்கவில்லையே? ஒருவேளை அதற்கு மிக அவசியமான காரணம் ஏதேனும் இருந்திருக்கலாம். அப்படியானால் எனக்குத் தெரிவிக்கலாமல்லவா? அல்லது எல்லாருமே நான் நோயாளியாகிவிட்டபடியால் என்னிடம் ஒன்றுமே சொல்ல வேண்டியதில்லை. என்னை எதுவும் கேட்க வேண்டியதுமில்லை என்று வைத்துக்கொண்டு விட்டீர்களா? அருள்மொழி வர்மன் கடலில் முழுகாமல் தப்பிக் கரைசேர்ந்து நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் இருப்பதாகக் குந்தவை கூறுகிறாள். அதைப் பற்றிச் சந்தோஷப் படுவதா, வருத்தப் படுவதா என்று எனக்குத் தெரியவில்லை. கரை ஏறியவன் ஏன் இவ்விடத்துக்கு வரவில்லை? அவன் தப்பிப் பிழைத்துப் பத்திரமாக இருக்கும் செய்தியை ஏன் இதுவரை எனக்கு ஒருவரும் தெரியப் படுத்தவில்லை? — மந்திரி! என்னைச் சுற்றிலும் நான் அறியாமல் என்ன

வெல்லாமோ நடைபெறுகிறது. என்னுடைய ராஜ்யத்தில் எனக்குத் தெரியாமல் பல காரியங்கள் நிகழ்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் உயிரோடிருப்பதைக் காட்டிலும்......" என்று சக்கரவர்த்தி கூறி வந்தபோது அவர் தொண்டை அடைத்துக் கொண்டது; கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது.

குறுக்கே பேசக்கூடாதென்ற மரியாதையினால் இத்தனை நேரம் சும்மாயிருந்த அநிருத்தர் இப்போது குறுக்கிட்டு, "பிரபு! நிறுத்துங்கள்! தங்களுடன் எனக்கு நட்பு ஏற்பட்டு நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு நாளும் தங்களுடைய நலனுக்கு எதிரான காரியம் எதுவும் செய்யவில்லை. இனியும் செய்ய மாட்டேன். தங்களுக்கு வீண் தொல்லை கொடுக்க வேண்டாம் என்ற காரணத்துக்காக இரண்டொரு விஷயங்களைத் தங்களிடம் சொல்லாமல் விட்டிருக்கலாம். அது குற்றமாயிருந்தால் மன்னித்து விடுங்கள். இப்போது தாங்கள் கேட்டவற்றுக்கெல்லாம் மறுமொழி சொல்கிறேன். கருணை கூர்ந்து அமைதியாயிருக்க வேண்டும்" என்று இரக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

"முதன் மந்திரி! இந்த ஜன்மத்தில் எனக்கு இனி மன அமைதி இல்லை. அடுத்த பிறவியிலாவது மன அமைதி கிட்டுமா என்று தெரியாது. என் அருமை மக்களும் என் ஆருயிர் நண்பராகிய முதன் மந்திரியும் எனக்கு எதிராகச் சதி செய்யும்போது......"

"பிரபு! தங்களுக்கு எதிராகச் சதி செய்பவர்கள் யார் என்பதைச் சீக்கிரத்தில் அறிந்து கொள்வீர்கள். அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தைப்பட்டவன் அல்ல. இந்த முதன் மந்திரி பதவியை இப்போது நான் பெயருக்காகவே வைத்துக் கொண்டிருக்கிறேன். பெரிய பழுவேட்டரையரிடமே இந்தப் பதவியைக் கொடுத்து விடுகிறேன் என்று முன்னமே பல தடவை சொல்லியிருக்கிறேன். இப்போதும் அதற்குச் சித்தமாயிருக்கிறேன். என்பேரில் சிறிதளவேனும் தங்களுக்கு அதிருப்தி இருந்தால்......"

"ஆம், முதன் மந்திரி, ஆம்! எந்த நேரத்திலும் என்னைக் கைவிட்டுப் போய்விட நீங்கள் எல்லோருமே சித்தமாயிருக்கிறீர்கள். **என் மூச்சுப் போகும் வரையில் என்னுடன் இருந்து என்னுடன் சாகப்போகிறவள் இந்த மலையமான் மகள் ஒருத்திதான்.** நான் செய்திருக்கும் எத்தனையோ பாவங்களுக்கு மத்தியில் ஏதோ புண்ணியமும் செய்திருக்கிறேன். ஆகையினால்தான் இவளை என் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றேன்!" என்றார் சக்கரவர்த்தி.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சக்கரவர்த்திக்கு அருகில் கட்டிலில் வீற்றிருந்த வானமாதேவிக்கு விம்மலுடன் அழுகை வந்து விட்டது. அவள் உடனே எழுந்து அடுத்த அறைக்குச் சென்றாள்.

"மன்னர் மன்னா! மலையமான் மகளைப் பற்றித் தாங்கள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். அவருடைய திரு வயிற்றில் பிறந்த மக்களும் தங்களிடம் இணையற்ற பக்தி விசுவாசம் கொண்டிருக்கிறார்கள்......"

"ஆனாலும் என் வார்த்தையை அவர்கள் மதிப்பதில்லை. என் கட்டளைக்கும் கீழ்ப்படிவதில்லை. எனக்குத் தெரியாமல் ஏதேதோ செய்கிறார்கள். நீரும் அவர்களோடு சேர்ந்து கொள்கிறீர்! அருள்மொழிவர்மன் கடலிலிருந்து தப்பிப் பிழைத்து நாகப்பட்டினம் புத்த விஹாரத்திலிருப்பது உமக்கு முன்னமே தெரியும் அல்லவா? ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"மன்னிக்க வேண்டும், பிரபு! அந்த விவரம் நேற்று வரையில் எனக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கவில்லை. இளவரசரின் உயிருக்கு ஆபத்து நேரிட்டிராது என்று மட்டும் உறுதியாயிருந்தேன். அவர் பிறந்த வேளையைக் குறித்துச் சோதிடக்காரர்கள் எல்லாரும் கூறியிருப்பது பொய்யாகி விடாதல்லவா?"



"முதன் மந்திரி! சோதிட சாஸ்திரத்தினால் நேரக்கூடிய தீங்குகளுக்கு அளவே இல்லை. இந்த இராஜ்யத்திலிருந்து சோதிடக்காரர்கள் எல்லாரையுமே அப்புறப்படுத்திவிட எண்ணுகிறேன். அருள்மொழியின் ஜாதகத்தைக் குறித்து சோதிடக்காரர்கள் கூறியிருப்பதை வைத்துக் கொண்டுதான் நான் உயிரோடிருக்கும் போதே அவனைச் சிம்மாசனத்தில் ஏற்றி விடுவதற்கு எல்லா

ரும் பிரயத்தனப் படுகிறார்கள். நீரும் அவர்களைச் சேர்ந்தவர்தானே?"

"சத்தியமாக இல்லை, பிரபு! அதற்கு மாறாக, சின்ன இளவரசர் சிறிது காலத்துக்கு இந்தச் சோழ நாட்டுக்குள் வராமலிருந்தாலே நல்லது என்று எண்ணினேன். இலங்கைக்குப் போயிருந்தபோது இளவரசரிடம் அவ்விதமே சொல்லி விட்டு வந்தேன். ஆனால் நான் இப்பால் வந்தவுடன் பழுவேட்டரையர்களின் ஆட்கள் இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வர இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். தாங்களும் அதற்குச் சம்மதம் அளித்திருக்கிறீர்கள். இந்தச் செய்தி நாடு நகரமெல்லாம் பரவியிருக்கிறபடியால், ஜனங்கள் பழுவேட்டரையர்கள் மீது ஒரே கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் தான் இளவரசரை ஏற்றி வந்த கப்பலை வேண்டுமென்று கடலில் மூழ்கடித்து விட்டதாக ஜனங்களிடையில் பேச்சாயிருக்கிறது......"

"பொய், முதன் மந்திரி! பொய்! எல்லாம் முழுப் பொய்! பார்த்திபேந்திர பல்லவன் எல்லாம் என்னிடம் கூறி விட்டான். பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலில் இளவரசன் வரவில்லை. பார்த்திபேந்திரனுடைய கப்பலில் வந்தான். வழியில் வேண்டுமென்று கடலில் குதித்தான். இன்னொரு எரிந்த கப்பலில் இருந்த யாரோ ஒருவனைக் காப்பாற்றுவதற்காக என்று சொல்லி, பார்த்திபேந்திரன் தடுத்தும் கேளாமல், கொந்தளித்த கடலில் குதித்தான். இப்போது யோசிக்கும்போது எல்லாமே பொய்யென்றும் என்னை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்றும் தோன்றுகிறது.



இந்தச் சூழ்ச்சியில் குந்தவையும் சம்பந்தப் பட்டவள் என்பதை நினைக்கும் போதுதான் எனக்கு வேதனை தாங்கவில்லை. இந்த உலகமே எனக்கு எதிராகப் போனாலும் குந்தவை என்னுடன் இருப்பாள் என்று எண்ணியிருந்தேன். ஒரு தகப்பன் தன் மகளிடம் சாதாரணமாகச் சொல்லத் தயங்கக் கூடிய வரலாறுகளையெல்லாம் சொன்னேன்......"

"அரசர்க்கரசே! இளைய பிராட்டி தங்களுக்கு எதிராகச் சதி செய்வதாய் உலகமே சொன்னாலும் நான் நம்பமாட்டேன்; தாங்களும் நம்பக் கூடாது. இளைய பிராட்டி ஒரு விஷயத்தைத் தங்களிடம் சொல்லவில்லை என்றால், அதற்குக் காரணம் அவசியம் இருக்க வேண்டும். சின்ன இளவரசர் தம் சிநேகிதனைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்ததில் பொய் ஒன்றுமில்லை. இளவரசரையும் அவருடைய சிநேகிதரையும் கடலிலிருந்து காப்பாற்றிக் கரை சேர்த்த ஓடக்காரப் பெண் இதோ அடுத்த அறையில் இருக்கிறாள். இலங்கையில் நடந்தவற்றையும் நேரில் பார்த்து அறிந்தவள். அரசே! அவளைக் கூப்பிடட்டுமா!" என்றார் அநிருத்தர்.

சக்கரவர்த்தி மிக்க ஆவலுடன், "அப்படியா? உடனே அவளை அழையுங்கள். முதன் மந்திரி!... கோடிக் கரையிலிருந்து நீர் பலவந்தமாகப் பிடித்து வரச்சொன்ன பெண் அவள்தானா?..." என்றார்.

"பழுவேட்டரையரின் பல்லக்கில் வந்த பெண்தான் அடுத்த அறையில் காத்திருக்கிறாள். இதோ அழைக்கிறேன்" என்று அநிருத்தர் கூறிக் கையைத் தட்டியதும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் உள்ளே வந்தார்கள்.

அத்தியாயம் 31

முன்மாலைக் கனவு

பூங்குழலியைச் சக்கரவர்த்தி உற்றுப் பார்த்து விட்டு, "இந்தப் பெண்ணை நான் இதுவரை பார்த்ததில்லை யல்லவா? ஆனால் முக ஜாடை சற்றுத் தெரிந்த மாதிரி இருக்கிறது. பிரம்மராயரே! இவள் யார்?" என்று கேட்டார்.

"இவள் கோடிக் கரைத் தியாக விடங்கர் மகள். பெயர் பூங்குழலி!"

"ஆகா! அதுதான் காரணம்!" என்று சக்கரவர்த்தி கூறினார். பிறகு வாய்க்குள்ளே, "இவள் அத்தையின் முக ஜாடை கொஞ்சம் இருக்கிறது. ஆனால்

அவனைப் போல் இல்லை. ரொம்ப வித்தியாசம் இருக்கிறது!" என்று முணுமுணுத்துக் கொண்டார்.



அவர் முணுமுணுத்தது பூங்குழலியின் காதில் இலேசாக விழுந்தது. அதுவரையில் சக்கரவர்த்தியைப் பூங்குழலி பார்த்ததில்லை. அவர் அழகில் மன்மதனை மிஞ்சியவர் என்று கேள்விப்பட்டிருந்தாள். இளவரசரைப் பெற்ற தந்தை அப்படித்தான் இருக்கவேண்டுமென்றும் எண்ணியிருந்தாள். இப்போது உடல் நோயினாலும் மன நோயினாலும் விகாரப்பட்டுத் தோன்றிய சக்கரவர்த்தியின் உருவத்தைப் பார்த்துத் திகைத்துப் போனாள். தன் அத்தையைக் கைவிட்டது பற்றிச் சக்கரவர்த்தியிடம் சண்டை பிடிக்க வேண்டும் என்று எண்ணியிருந்ததை நினைத்து வெட்கினாள். பயத்தினாலும் வியப்பினாலும் கூச்சத்தினாலும் சக்ரவர்த்தியைத் தரிசித்தவுடனே வணக்கம் கூறுவதற்குக் கூட மறந்து நின்றாள்.

"பெண்ணே! உன் தந்தை தியாக விடங்கர் சுகமா?" என்று சக்கரவர்த்தி அவளைப் பார்த்துக் கேட்டார்.

அப்போதுதான் பூங்குழலிக்குச் சுய நினைவு வந்தது. இலங்கை முதல் கிருஷ்ணா நதி வரையில் ஒரு குடை நிழலில் ஆளும் சக்கரவர்த்தியின் சந்நிதியில் தான் நிற்பதை உணர்ந்தாள். உடனே தரையில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு எழுந்து கை கூப்பி வணக்கத்துடன் நின்றாள்.

சுந்தரசோழர் அநிருத்தரைப் பார்த்து, "இந்தப் பெண்ணுக்குப் பேச வரும் அல்லவா? ஒருகால் இவள் அத்தையைப் போல் இவளும் ஊமையா?" என்று கேட்டபோது, அவர் முகம் மனவேதனையினால் சுருங்கியது.

"சக்கரவர்த்தி! இந்தப் பெண்ணுக்குப் பேசத் தெரியும். ஒன்பது ஸ்திரீகள் பேசக்கூடியதை இவள் ஒருத்தியே பேசி விடுவான். தங்களைத் தரிசித்த அதிர்ச்சியினால் திகைத்துப் போயிருக்கிறாள்" என்றார் அநிருத்தர்.

"ஆமாம்; என்னைப் பார்த்தால் எல்லாருமே மௌனமாகி நின்று விடுகிறார்கள். என்னிடம் ஒருவரும் ஒன்றும் சொல்வதில்லை!" என்றார் சக்கரவர்த்தி.

மறுபடியும் பூங்குழலியைப் பார்த்து, "பெண்ணே! இளவரசன் அருள்மொழிவர்மனை நீ கொந்தளித்த கடலிலிருந்து காப்பாற்றினாய் என்று முதல் மந்திரி சொல்கிறார். அது உண்மையா?" என்று சுந்தர சோழர் கேட்டார்.

பூங்குழலி தயங்கித் தயங்கி, "ஆம், பிரபு!... அது குற்றமாகயிருந்தால்..." என்றாள்.

சக்கரவர்த்தி சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலி பயங்கரமாகத் தொனித்தது.

"பிரம்மராயரே! இந்தப் பெண் சொல்லுவதைக் கேளுங்கள்! 'அது குற்றமாயிருந்தால்' என்கிறாள். இளவரசன் உயிரை இவள் காப்பாற்றியது 'குற்றமாயிருந்தால்' என்கிறாள். என் மகன் கடலில் மூழ்கிச் செத்திருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன் போலிருக்கிறது. அப்படிப்பட்ட ராட்சதன் நான் என்று இவளிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். முதன் மந்திரி! நாட்டு மக்கள் எல்லாரும் இப்படித்தான் என்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறார்களா?" என்று கேட்டார் சுந்தர சோழர்.

"பிரபு! இவள் பயத்தினால் ஏதோ சொல்லி விட்டான். அதைப் பொருட்படுத்த வேண்டாம். பெண்ணே! இளவரசரை நீ காப்பாற்றியதற்காக இந்தச் சோழ நாடே உனக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறது. சக்கரவர்த்தியும் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்திருக்கிறார். அதற்காக நீ என்ன பரிசு வேண்டுமோ, அதைக் கேட்டுப் பெறலாம். இப்போது, நடந்ததையெல்லாம் சக்கரவர்த்தியிடம் விவரமாகக் கூறு! பயப்படாமல் சொல்லு!" என்றார்.

"முதலில், ஒரு விஷயத்தை இந்தப் பெண் சொல்லட்டும். இளவரசனைக் கடலிலிருந்து காப்பாற்றியதாகச் சொல்லுகிறாளே? அவன் இளவரசன்தான் என்பது இவளுக்கு எப்படித் தெரியும்? முன்னம் பார்த்ததுண்டா?" என்றார் சக்கரவர்த்தி.

"ஆம், பிரபு! முன்னம் ஈழநாட்டுக்கு வீரர்களுடன் இளவரசர் கப்பல் ஏறிய போது சில தடவை பார்த்திருக்கிறேன். ஒரு முறை இளவரசர் என்னைச் 'சமுத்திர குமாரி' என்று அழைத்ததும் உண்டு!" என்று கூறினாள் பூங்குழலி.

"ஆகா! இந்தப் பெண்ணுக்கு இப்போதுதான் பேச்சு வருகிறது!" என்றார் சுந்தரசோழ சக்கரவர்த்தி.

பின்னர், முதன் மந்திரி அடிக்கடி தூண்டிக் கேள்வி கேட்டதன் பேரில் பூங்குழலி வந்தியத்தேவனை இலங்கைக்கு அழைத்துச் சென்றதிலிருந்து இளவரசரை நாகைப்பட்டினத்தில் கொண்டு போய் விட்டது வரையில் எல்லாவற்றையும் கூறினாள். ஆனால் அநிருத்தர் எச்சரிக்கை செய்திருந்தபடியால் மந்தாகினியைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லவில்லை.

எல்லாம் கேட்ட பின்னர் சக்கரவர்த்தி, "பெண்ணே! சோழ குலத்துக்கு இணையில்லாத உதவி செய்திருக்கிறாய். அதற்கு ஈடாக உனக்குச் செய்யக்கூடியது ஒன்றுமே யில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன், சொல்! கோடிக் கரையில் இளவரசனைக் கரை சேர்த்த பிறகு இங்கே ஏன் அழைத்து வரவில்லை? ஏன் நாகைப்பட்டினத்துக்கு அழைத்துப் போனாய்?" என்றார்.

"சுவாமி! இளவரசர் கொடிய சுரத்தினால் நினைவு இழந்திருந்தார். நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் நல்ல வைத்தியர்கள் இருக்கிறார்கள் என்று அங்கே அழைத்துப் போனோம். பிக்ஷுக்கள் இளவரசரிடம் மிக்க பக்தி உள்ளவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இளவரசரை அந்த நிலையில் ஓடத்தில் தான் ஏற்றிப் போகலாமே தவிரக் குதிரை மேலோ, வண்டியிலோ ஏற்றி அனுப்ப முடிந்திராது......"

"அச்சமயம் கோடிக் கரையில் பழுவேட்டரையர் இருந்தாரே. அவரிடம் ஏன் தெரிவிக்கவில்லை......?"

பூங்குழலி சற்றுத் தயங்கி விட்டுப் பின்னர் கம்பீரமான குரலில், "சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் இளவரசருக்கு விரோதி என்று நாடெல்லாம் அறிந்திருக்கிறது. அப்படியிருக்க, இளவரசரைப் பழுவேட்டரையரிடம் ஒப்புவிக்க எவ்விதம் எனக்கு மனம் துணியும்?" என்றாள்.



"ஆம், ஆம்! என் புதல்வர்களுக்குப் பழுவேட்டரையர்கள் மட்டுமா விரோதிகள்? நான் கூடத்தான் விரோதி. உலகம் அப்படித்தான் எண்ணிக்கொண்டிருக்கிறது. அது போகட்டும்! முதன் மந்திரி! நேற்று இங்கு அடித்த புயல் நாகைப்பட்டினத்தில் இன்னும் கடுமையாக இருந்திருக்குமே? இளவரசனுக்கு மறுபடியும் ஏதேனும் தீங்கு நேரிடாமலிருக்க வேண்டுமே என்று என் நெஞ்சம் துடிக்கிறது."

"பிரபு! சோழ நாடு அதிர்ஷ்டம் செய்த நாடு. இப்போது இந்நாட்டுக்கு மகத்தான நல்ல யோகம். ஆகையால்..."

"சோழ நாடு அதிர்ஷ்டம் செய்த நாடுதான்; ஆனால் நான் துரதிர்ஷ்டசாலியாயிற்றே, பிரம்மராயரே! நான் கண்ணை மூடுவதற்குள் என் புதல்வர்களை ஒரு தடவை பார்க்க விரும்புகிறேன்......"

"ஐயா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இத்தகைய புதல்வர்களையும் புதல்வியையும் பெற்ற தங்களைப் போன்ற பாக்கியசாலி யார்? இதோ இன்றைக்கே ஆட்களை அனுப்பி வைக்கிறேன். இளவரசரைப் பத்திரமாய் அழைத்து வருவதற்கு என் சீடன் திருமலையையும் கூட அனுப்புகிறேன்!" என்றார் முதன் மந்திரி.

அப்போதுதான் சக்கரவர்த்தி ஆழ்வார்க்கடியான் மீது தம் பார்வையைச் செலுத்தினார்.

"ஆகா! இவன் இத்தனை நேரமும் இங்கே நிற்கிறானா? சின்னப் பழுவேட்டரையர் இவனைப் பற்றித்தானே சொன்னார்? பழுவூர் அரண்மனை மதிளில் ஏறிக் குதித்தவன் இவன்தானே?......"

"பிரபு! அதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது. அதைப்பற்றி நாளைக்குத் தெரியப்படுத்த அநுமதி கொடுங்கள். ஏற்கெனவே மிக்க களைப்படைந்து விட்டீர்கள்!" என்றார் முதன் மந்திரி.

இச்சமயத்தில் மலையமான் மகளும் குந்தவையும் வானதியும் சக்கரவர்த்தியின் அறைக்குள்ளே வந்தார்கள்.

"முதன் மந்திரி! இன்றைக்கு இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். சக்கரவர்த்திக்கு அதிக களைப்பு உண்டாக்கக் கூடாது என்று வைத்தியர்கள் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருக்கிறார்கள்!" என்று மகாராணி கூறினாள்.

பின்னர், "இந்தப் பெண் இனிமையாகப் பாடுவாளாம். ஒரு தேவாரப்பாடல் பாடச் சொல்லுங்கள். சக்கரவர்த்திக்குக் கானம் மிகவும் பிடிக்கும்" என்றாள்.

"ஆகட்டும், தாயே! என் சீடன் கூட ஆழ்வார் பாசுரங்களை நன்றாகப் பாடுவான். அவனையும் பாடச் சொல்கிறேன்!" என்றார் முதன் மந்திரி.

பூங்குழலி "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற அப்பர் தேவாரத்தைப் பாடினாள். ஆழ்வார்க்கடியான் "திருக் கண்டேன் பொன் மேனி கண்டேன்" என்ற பாசுரத்தைப் பாடினான்,

பாடல் ஆரம்பித்ததும் சுந்தர சோழர் கண்களை மூடிக் கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் முகத்தில் சாந்தியும் நிம்மதியும் காணப்பட்டன. மூச்சு நிதானமாகவும் ஒரே மாதிரியாகவும் வந்தது. நல்ல நித்திரையில் ஆழ்ந்து விட்டார் என்று தெரிந்தது.

இருட்டுகிற சமயமாகி விட்டபடியால் தாதிப் பெண் விளக்கேற்றிக் கொண்டு வந்து வைத்தாள்.

முதன் மந்திரி உள்ளிட்ட அனைவரும் அவ்வறையிலிருந்து வெளியேறினார்கள்.

மலையமான் மகள் மட்டும் சிறிதுநேரம் சக்கரவர்த்தியின் அருகில் இருந்தாள். அடுத்த அறையின் வாசற்படியிலிருந்து குந்தவை அவளைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்யவே அவளும் எழுந்து சென்றாள். பின்னர், அந்த அறையில் மௌனம் குடி கொண்டது. சுந்தர சோழர் மூச்சு விடும் சப்தம் மட்டும் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

* * *

முதல் நாளிரவு சற்றும் தூங்காத காரணத்தினால் களைத்துச் சோர்ந்திருந்தபடியினாலும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் பாடிய தமிழ்ப் பாசுரங்களின் இனிமையினாலும் சுந்தரசோழர் அந்த முன் மாலை நேரத்தில் நித்திரையில் ஆழ்ந்தாரென்றாலும், அவருடைய துயில் நினைவற்ற அமைதி குடி கொண்ட துயிலாக இல்லை. பழைய நினைவுகளும் புதிய நினைவுகளும் உண்மை நிகழ்ச்சிகளும் உள்ளக் கற்பனைகளும் கனவுகளாகி உருவெடுத்து அவரை விதவிதமான விசித்திர அநுபவங்களுக்கு உள்ளாக்கின.

* * *

அமைதி குடி கொண்டிருந்த நீலக் கடலில் அவரும் பூங்குழலியும் படகில் போய்க் கொண்டிருந்தார்கள். பூங்குழலி படகைத் தள்ளிக் கொண்டே கடலின் ஓங்கார சுருதிக்கு இசைய ஒரு கீதம் பாடிக் கொண்டிருந்தாள்.

"சோர்வு கொள்ளாதே மனமே—உனது
ஆர்வ மெல்லாம் ஒருநாள் பூரணமாகும்!
காரிருள் மூடிய நள்ளிரவின் பின்னர்
காலை மலர்தலும் கண்டனை அன்றோ
தாரணி சிரிக்கும் தாமரை சிரிக்கும்
அலைக்குலம் களிக்கும் அருணனும் உதிப்பான்!"

இந்த கீதத்தைக் கேட்டு சுந்தர சோழர் புளகாங்கிதம் அடைந்தார். அவருடைய உள்ளத்தில் குடி கொண்டிருந்த சோர்வு நீங்கி உற்சாகம் ததும்பியது. "இன்னும் பாடு!" "இன்னும் பாடு!" என்று பூங்குழலியைத் தூண்டிக்கொண்டிருந்தார். ஆழ் கடலில் மிதந்து படகு போய்க் கொண்டேயிருந்தது.

திடீரென்று இருள் சூழ்ந்தது. பெருங் காற்று அடிக்கத் தொடங்கியது. சற்று முன் அமைதியாக இருந்த கடலில் மலை மலையாக அலைகள் எழுந்து விழுந்தன. தொட்டில் ஆடுவது போல் சற்று முன்னால் ஆடிக் கொண்டிருந்த படகு இப்போது மேக மண்டலத்தை எட்டியும் அதல பாதாளத்தில் விழுந்தும் தத்தளித்தது. படகில் இருந்த பாய் மரங்களின் பாய்கள் சுக்கு நூறாகக் கிழிந்து காற்றில் அடித்துக் கொண்டு போகப் பட்டன! ஆயினும் படகு மட்டும் கவிழாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தது. அப்போதெல்லாம் பூங்குழலியின் படகு விடும் திறத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி வியந்து மகிழ்ந்து கொண்டிருந்தார்.

காற்று வந்த வேகத்தைப் போலவே சட்டென்று நின்றது. கடலின் கொந்தளிப்பு வரவரக் குறைந்தது. மீண்டும் பழையபடி அமைதி ஏற்பட்டது. கீழ்த் திசையில் வானமுகட்டில் அருணோதயத்துக்கு அறிகுறி தென்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் தங்கச் சூரியன் உதயமானான். கடலின் நீரும் பொன் வண்ணம் பெற்றுத் தகதகா மயமாகத் திகழ்ந்தது. சற்றுத் தூரத்தில் பசுமையான தென்னந் தோப்புக்கள் சூழ்ந்த தீவுகள் சில தென்பட்டன. அத்தீவுகளிலிருந்து புள்ளினங்கள் மதுர மதுரமான குரல்களில் இசைத்த கீதங்கள் எழுந்தன. ஈழநாட்டின் கரையோரமுள்ள தீவுகள் அவை என்பதைச் சுந்தர சோழர் உணர்ந்து கொண்டார். அவற்றில் ஒரு தீவிலேதான் முந்தைப் பிறவியில் அவர் மந்தாகினியைச் சந்தித்தார் என்பது நினைவு வந்தது.

அந்தத் தீவின்பேரில் பார்வையைச் செலுத்திக் கொண்டே, "பூங்குழலி! கடைசியில் என்னைச் சொர்க்க லோகத்துக்கே கொண்டு வந்து சேர்த்து விட்டாயல்லவா? உனக்கு நான் எவ்விதத்தில்

நன்றி செலுத்தப் போகிறேன்?'' என்றார். பூங்குழலி மறுமொழி சொல்லாதது கண்டு அவள் பக்கம் திரும்பிப் பார்த்தார். அப்படியே ஸ்தம்பிதமாகி விட்டார். ஏனெனில், படகில் இன்னொரு பக்கத்தில் இருந்தவள் பூங்குழலி இல்லை. அவள் மந்தாகினி! முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எப்படி இருந்தாளோ, அப்படியே இன்று மிருந்தாள்!

சில நிமிஷ நேரம் திகைத்திருந்துவிட்டு, "மந்தாகினி! நீதானா? உண்மையாக நீதானா? பூங்குழலி மாதிரி மாற்றுருவம் கொண்டு என்னை அழைத்து வந்தவள் நீதானா?'' என்றார். தாம் பேசுவது அவளுக்குக் காது கேளாது என்பது நினைவு வந்தது. ஆயினும் உதடுகளின் அசைவிலிருந்து அவர் சொல்வது இன்ன தென்பதை அறிந்து கொண்டவள்போல மந்தாகினி புன்னகை புரிவதைக் கண்டார்.

அவள் அருகில் நெருங்கிச் செல்வதற்காக எழுந்து செல்ல முயன்றார், ஆனால் அவரால் எழுந்திருக்க முடியவில்லை. தம் கால்கள் பயனற்றுப் போயின என்பது நினைவு வந்தது.

"மந்தாகினி! நான் நோயாளியாய்ப் போய் விட்டேன். உன்னிடம் என்னால் வர முடியவில்லை. நீதான் என் அருகில் வர வேண்டும். இதோ பார், மந்தாகினி! இனி ஒரு தடவை மூன்று உலகத்துக்கும் சக்கரவர்த்தியாக முடி சூட்டுவதாய் என்னை யாரேனும் அழைத்தாலும் நான் உன்னை விட்டுப் போக மாட்டேன். இந்த ஈழ நாட்டுக்கு அருகிலுள்ள தீவுகளுக்கு நாம் போக வேண்டாம். இங்கே யாராவது வந்து கொண்டே யிருப்பார்கள். படகை நடுக் கடலில் விடு! வெகு தூரம், தொலை தூரம், ஏழு கடல்களையும் தாண்டிச் சென்று, அப்பால் உள்ள தீவாந்தரத்துக்கு நாம் போய் விடுவோம்!'' என்றார் சுந்தர சோழர். அவர் கூறியதை யெல்லாம் தெரிந்து கொண்டவள்போல் மந்தாகினி புன்னகை புரிந்தாள்.


* * *

காவேரி நதியில் இராஜ ஹம்ஸத்தைப்போல் அலங்கரித்த சிங்காரப் படகில் சுந்தரசோழ சக்கரவர்த்தியும் அவருடைய பட்டத்து ராணியும் குழந்தைகளும் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். கான வித்தையில் தேர்ந்தவர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். சுந்தர சோழர் கான இன்பத்தில் மெய்மறந்து கண்களை மூடிக் கொண்டிருந்தார். திடீரென்று "ஐயோ! ஐயோ!'' என்ற கூக்குரலைக் கேட்டுக் கண்விழித்துப் பார்த்தார். "குழந்தையைக் காணோமே? அருள்மொழியைக் காணோமே!'' என்று பல குரல்கள் முறையிட்டன. சுந்தர சோழர் பரபரப்புடன் சுற்று முற்றும் பார்த்தார். காவேரியின் வெள்ளத்தில் அவருடைய செல்வக் குழந்தையான அருள்மொழியை யாரோ ஒரு ஸ்திரீ கையினால் பிடித்துக்கொண்டு தண்ணீரில் அமுக்கிக் கொல்ல முயன்று கொண்டிருந்தாள். சொல்ல முடியாத பயங்கரத்தை யடைந்த சுந்தர சோழர் காவேரி வெள்ளத்தில் குதிக்க எண்ணினார். அச்சமயம் அந்த ஸ்திரீயின் முகம் அவருக்குத் தெரிந்தது. அது விகாரத்தை அடைந்த மந்தாகினியின் முகம் என்பதை அறிந்து கொண்டார். உடனே அவருடைய உடல் ஜீவ சக்தி அற்ற சடப் பொருளைப்போல் ஆயிற்று. தண்ணீரில் குதிக்கப் போனவர் படகிலேயே தடால் என்று விழுந்தார்.

* * *

படகிலே விழுந்த அதிர்ச்சியினாலே தானோ, என்னமோ, சுந்தர சோழர் துயிலும் கனவும் ஒருகாலத்தில் நீங்கப் பெற்றார். புயல் மழை காரணமாக வழக்கத்தை விடக் குளிர்ச்சி மிகுந்திருந்த அவ்வேளையில் அவருடைய தேக மெல்லாம் வியர்த்திருந்தது. இவ்வளவு நேரமும் கண்ட தோற்றங்கள் எல்லாம் கனவில் கண்டவை என்பதை உணர்ந்தபோது அவருடைய நெஞ்சிலிருந்து ஒரு பெரும் பாரத்தை எடுத்தது போன்ற ஆறுதல் ஏற்பட்டது. எதிரே பார்த்தார். அறையில் ஒருவரும் இருக்கவில்லை. தீபம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. தாம் தூங்கி விட்டபடியால் பக்கத்து அறையில் இருக்கிறார்கள் போலும்! கையைத் தட்டி அழைக்கலாமா என்று எண்ணினார். "சற்றுப் போகட்டும்; கனவுத் தோற்றத்தின் அதிர்ச்சிகள் நீங்கட்டும்'' என்று எண்ணிக் கொண்டார்.

அப்போது மேல் மச்சிலிருந்து ஏதோ மிக மெல்லிய சத்தம் கேட்டது. அது என்னவா யிருக்கும்? முகத்தைச் சிறிதளவு திருப்பிச் சத்தம் வந்த திக்கை நோக்கினார். மேல் மச்சின் தூணைப் பிடித்துக் கொண்டு விளிம்பின் வழியாக ஓர் உருவம் இறங்கி வருவது போலத் தோன்றியது. (தொடரும்)



4. பிரிந்தவர் சேர்ந்தனர்!

அட, கடவுளே!......ஈவிரக்கமற்ற இந்த இராட்சத வீட்டிலிருந்து எனக்கு எப்போதுதான் விடுதலை கிடைக்குமோ!...'' என்று மாவரைத்தபடியே மனம் நைந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான், பாவம் ராஜா. அவன் அந்த ஓட்டல் முதலாளியின் வீட்டில் ஓயாமல் ஒழியாமல் உழைத்துக் கஷ்டப்படுவதைக் கேட்டால்—கண்டால்—கல்லும் உருகும்! அவ்வளவு கஷ்டம்! அவ்வளவு உழைப்பு! அந்த வீட்டுக்கு வந்த கடந்த இரண்டு மாசத்திற்குள் பாவம் ராஜா, பாகாய் உருகிப் போனான்! எலும்பும் தோலுமாக உருமாறிப் போனான்! இந்த நைந்த நிலையில் ராஜாவைப் பார்க்கும் எவரும் "ஐயோ!..." என்று சரசாவைப் போலக் கதறியழுது விடுவார்கள்! பாவம்!... அந்தச் சின்னஞ் சிறுவனை அந்த வீட்டு எஜமானி அவ்வளவு குரூரமாக வாட்டி வதக்கி யெடுத்து வந்தாள்!

நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது.

பாவம்! ராஜா, எதை நினைத்துக் கொண்டானோ?...அவன், மாவரைப்பதை மறந்து தேம்பித் தேம்பி யழ ஆரம்பித்தான்; அழுது கொண்டே இருந்தான்!......

'பளார்!......' என்று பலமான ஓர் அறை முதுகில் விழுந்தது. "ஐயோ! அம்மா!" என்று அலறித் துடித்துத் திரும்பினான்.

"உம்! சீக்கிரம் ஆகட்டும்!" என்று உறுமி அதட்டிக் கொண்டே அங்கேயே இடுப்பின்மீது கையை வைத்துக் கொண்டு நின்றாள் எஜமானியம்மாள்.

ராஜா, மாவை அரைத்து வழித்து எடுத்துக் கொண்டு ஆட்டுரலை விட்டு விசித்துக் கொண்டே எழுந்தான். எஜமானியம்மாள் 'வெடுக்'கென்று ராஜாவிடமிருந்த மாவுப் பாத்திரத்தைப் பிடுங்கிக் கொண்டு, "உம்! போடா! போய்... கிணற்றடியில் சேலையை ஊற வைத்திருக்கிறேன். அதைப் போய்த் துவைத்து எடுத்துக் கொண்டு, அரை விநாடியில் ஓடி வா! அப்போது தான் இன்றைக்கு ஒரு பிடி சோற்றையாவது கண்ணால் பார்ப்பாய்! உம், ஓடடா!..." என்று கர்ச்சித்துக் கொண்டே, மறுபடியும் ராஜாவின் வீங்கிய முதுகை ஒரு கை பார்த்தாள் எஜமானியம்மாள்.

மறு விநாடி......?

பீறிக்கொண்டு வந்த பெருங் கதறலை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, அறை விழுந்த முதுகைத் தேய்த்துத் துடைத்துக் கொண்டே கிணற்றடியை நோக்கித் துள்ளித் துடித்து ஓடினான், ராஜா!

வெகு நேரமாயிற்று!

பசி வேதனை ஒருபுற மிருக்கட்டும்; படுகின்ற பெரும்பாட்டின் கொடுந் துன்பத்தை நினைக்க நினைக்க, எங்கேயாவது குளத்திலோ குட்டையிலோ விழுந்து செத்துப் போகலாமா என்றுகூட நினைத்து விட்டான், ராஜா. அவனுக்கு அழுகையாய்க் குமுறிக் கொண்டு வந்தது!

அழுதுகொண்டே, துணியை—எஜமானியம்மாளின் பதினாறு முழச் சேலையைத் துவைத்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் ஆயிற்று. 'அடேய் பையா!' என்று உறுமிக்கொண்டே, ராஜாவின் பால் வழியும் கன்னத்தில் ஓரிடி இடித்தாள் எஜமானியம்மாள்.

ராஜா, சேலையைப் போட்டு விட்டுக் கன்னத்தைத் தடவிக் கொண்டே எழுந்தான்.

"என்னடா, மரம் மாதிரி நிற்கிறாயே! ஓடடா! மாயனூரிலிருந்து என் அண்ணா வந்திருக்கிறார். அவருக்குக் குளிக்க வெந்நீர் போட்டுவிட்டு, காப்பி போட்டு எடுத்துக் கொண்டு உடனடியாக வராந்தாவுக்கு வா! உம், ஓடு!" என்று சீறித் துரத்தினாள் எஜமானி. ராஜா உடனே பங்களாவை நோக்கி எடுத்தான் , ஓட்டம்! சட்டைத் தலைப்பில் கையைத் துடைத்துக் கொண்டு, கூடவே கண்ணீர் வடியும் கண்களையும் துடைத்துக் கொண்டான்.

கொஞ்ச நேரத்திற்குள்—

பரக்கப் பரக்கக் காப்பி போட்டு எடுத்துக் கொண்டு வராந்தா வாசலில் வந்து நின்ற ராஜா திகைத்துப் பிரமித்துப் போனான்!

ஏன்......?

எஜமானியம்மாளின் வீட்டிற்கு உறவினராக வந்து வராந்தாவில் உட்கார்ந்திருப்பவர்கள்...வேறு யாருமல்ல: சரசா, அவள் அப்பா, அம்மா, அவள் சிநேகிதன் வரதன்...!

வராந்தா, திகைப்பில் அழுந்தியது!

"ராஜா!"

"சரசா!"

அப்பாவின் மடியிலிருந்து எம்பித் தாவிப் பறந்து பாய்ந்தோடி, காப்பி, பலகாரத் தட்டுடன் சிலையாய் நிற்கும் ராஜாவின் கையைப் பிடித்துக் கொண்டாள் சரசா!

"ராஜா! நீ எதற்காக வீட்டை விட்டு ஓடி வந்தாய்? ....."

சரசாவின் ஆதுரமான கேள்வியைக்கேட்டதும் ராஜா சட்டென்று நிமிர்ந்தான். சோபாவில் அமர்ந்து பிரமித்துக் கிடக்கும் சரசாவின் அப்பாவின் பக்கத்தில் தலை குனிந்து நடுங்கி நிற்கும் வரதனைப் பார்த்தான்.

"சிநேகிதனைப் போல நடித்து வஞ்சகம் புரிந்த இந்த மோசக்காரனால் தான்!..." என்று வரதனைப் பார்த்துக் கோபத்துடன் குமுறிக் கொந்தளித்துக் கூவினான் ராஜா.

"என்னடா சொல்லுகிறாய்?......" என்று புரியாமல் கேட்டார் அப்பா.

"நீலகிரிக்கு அழைத்துப் போகிறேன் என்று ஏமாற்றி அழைத்து வந்து நடுவழியிலேயே விட்டுவிட்டு ஓடி விட்டான். இந்த மடையன்!......டேய், வரதா! உனக்கு நான் என்னடா தீமை புரிந்தேன்?...என்னை ஏன் அப்படி வஞ்சித்தாய்? எதற்காக மோசம் பண்ணினாய்? உனக்குத் தீமை செய்ய வேண்டுமென்று நான் கனவில் கூடக் கருதியதில்லையே! உன்னால், உன் நன்றி கெட்ட தன்மையினால் நான் பட்ட கொடுந் துன்பத்தைப் பார்! கையில் கொப்புளம்! காலில் சிப்புண்! முதுகில் கரண்டியடிக் காயம்! இந்தக் கதிக்கு ஆளாக்க நானுனக்கு என்னடா கெடுதல் செய்தேன்?..." என்று கதறிக் கதறி யழுதான், பாவம் ராஜா! அவனோடு சரசாவும் அழுதாள். வரதனும் அழுதான். தேம்பிக்கொண்டே சொன்னான்:

"அடே, ராஜா! என்னை மன்னிக்க மாட்டாயா? உன் காலில் விழுந்து கெஞ்சுகிறேன். ராஜா. சரசாவின் சிநேகத்தைப் பெற உன்னை இந்தக் கதிக்கு உள்ளாக்கும் கொடிய செயலைப் புரிந்து விட்டேன்! வேண்டுமென்றே தோட்டக்காரனை விட்டு அம்மாவின் பெட்டியை உடைத்துப் பணத்தை எடுத்துக் கொள்ளச் செய்து, அந்தத் திருட்டுப் பழியை உன்மீது சுமத்தி வைத்தேன். ஒரு வாரத்திற்கு முன்னேயே சரசா அந்தத் திருட்டைக் கண்டு பிடித்தாள்; எனக்குப் புத்தி வரத் திட்டிய பிறகு, என்னை மன்னித்து விட்டாள்! ஆனால், உன்னை ஏமாற்றி ரயிலில் விட்டு ஓடி வந்த அந்த நயவஞ்சகத் தன்மையை அப்போதும் நான் சொல்லவில்லை; அஞ்சி மறைத்தேன். அந்த நீதி கெட்ட தன்மை இப்போது தெரிந்து விட்டது! ராஜா! நான் துரோகி! வஞ்சகன்!" என்று உரத்துக் கதறிக்கொண்டே ராஜாவின் காலடியில் விழுந்தான் வரதன்!

"......மன்னிக்கத் தெரியாதவன் மனிதனல்ல! எழுந்திருடா, வரதா" என்று கூறித் தேம்பிக்கொண்டே தன் காலடியில் விழுந்து அழுத வரதனைத் தூக்கினான் அன்பு ராஜா.

சோபாவில் சாய்ந்துகொண்டிருந்த அப்பா, கண்ணைத் துடைத்துக் கொண்டு, வராந்தா சுவரில் மாட்டி யிருக்கும் புத்தர் படத்தை மௌனமாக—ஏதோ, சிந்தனையுடன் – விழியசையாமல் பார்த்துக் கொண்டிருந்தார். சரசா, பாவாடைத் தலைப்பால் கன்னத்தைத் துடைத்துக் கொண்டே, இடது புறத்துச் சுவரில் மாட்டியிருந்த காந்தியண்ணல் படத்தையே இமைக்காமல் பார்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். வரதனும் – ராஜாவும் – ஒருவரை யொருவர் இறுகவணைத்துக் கொண்டே பேரானந்தக் கண்ணீர் வடித்துப் பதுமையாய்க் கிடந்தார்கள்.

சரசாவின் தகப்பனார்தான் முதலில் அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தார்.

"ராஜா, உன்னைப் பற்றி நான்கூடத் தவறாக நினைத்து விட்டேன். வரதன் இவ்வளவு கொடிய காரியத்தைச் செய்திருப்பான் என்று என்னால் எண்ணவே முடியவில்லை. சரி, எல்லோரும் நடந்ததை மறந்து விடுவோம். உனக்குப் புது உடைகள் இப்போதே வாங்கித் தருகிறேன். இன்று இரவே புறப்பட்டு எல்லோரும் பட்டணம் போவோம். இன்றைக்கு நம் எல்லோருக்கும் இங்கே ஒரு நல்ல விருந்து ஏற்பாடு செய்கிறேன்!" என்றார்.

உடனே ராஜாவின் எஜமானியம்மாள் "விருந்து ஏற்பாடு என்னைச் சேர்ந்தது!" என்றாள். அதைக் கேட்டு எல்லோரும் சந்தோஷத்தில் மூழ்கினார்கள். (முற்றும்)

தனிமை மறைந்தது

விஜய்

சில்லென்று குளிர்ந்திருந்த பூட்டைத் திறப்பது அவனுக்குப் புது அனுபவமாக இருந்தது.

நண்பர்களுடன் சினிமா பார்த்ததனால் வெளியுலகை மூன்று மணி நேரம் மறந்திருந்த ரகுவுக்கு, அப்பொழுது எல்லா விஷயங்களும், பத்து மடங்கு வேகத்துடன் நினைவுக்கு வரத் தொடங்கின.

சாந்தா பிறந்தகம் சென்றிருக்கிறாள், குழந்தைப் பேற்றிற்காக. அவள் திரும்பி வருவதற்கு இன்னும் ஆறு மாதங்களாவது ஆகும்.

ஆறு மாதங்கள்......

ஆறு மாதங்களில் அன்று ஒரே ஒரு நாள்தானே கழிந்திருக்கிறது !

பூட்டைத் திறந்தவுடன் சற்று நேரம் வாயிற்படியிலேயே நின்றான் ரகு. வீட்டிற்குள் நுழையவே என்னவோ போல் இருந்தது.

மேலே பார்த்தான். கணக்கற்ற விண்மீன்கள் அவனைப் பரிகசிப்பதுபோல் மின்னின.

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

மின்சார விளக்கை ஏற்றிய பிறகு, கதவைத் தாழிட்டான். வீடு 'வெறிச்சோ' வென்றிருந்தது. ரகுவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. "அப்பப்பா ! தாங்கவே முடியாது போல இருக்கிறதே !" என்று முனகினான்.

கை, கால்கள் பனியில் நடந்ததால் சில்லிட்டிருந்தன. அவள் இருந்திருந்தால்......

அவள்தான் இல்லையே !

"யாரையோ சபித்துக் கொண்டே, படுக்கையுள் நுழைந்து கொண்டான். சால்வையில் குடியேறுவதற்குச் சற்று நேரம் பிடித்தது. பக்கத்தில் இருந்த மேஜையின் மேல் பல புஸ்தகங்கள் கிடந்தன. தூக்கம் வருவதற்குச் சற்று நேரமாகும் போல இருந்தது. ஒரு கவிதைப் புத்தகத்தை எடுத்தான். அதில் மனம் லயிக்கவில்லை. ஏதோ ஒரு குறை வீடு முழுவதும் நிறைந்திருந்தது.

விளக்கை அணைத்து விட்டுக் கண்ணை மூடிக் கொண்டு படுத்துக் கொண்டான்.

இருளிலே, தனிமையின் கூர்மை அவனை மிகவும் பாதித்தது.

ஒரு பொருளோ, அல்லது ஜீவனோ இருக்கும் வரை, அதன் பெருமையை, உயர்வை நம்மால் உணர முடிவதில்லை.

சாந்தாவை ரயிலேற்றும் வரை அவனும் சாதாரணமாகவே அந்த நிகழ்ச்சியைக் கருதினான். பிரிவின் துயர் தாங்காதவளாக, சாந்தா 'ஓ' வென்று கதறியபொழுது, "சீ, அசடு" என்று அவளைத் திட்டினதுடன், அவள் அசடுதான் என்று தீர்மானிக்கவும் செய்தான்.

ஆனால்......

மணியடித்து, ரயில் நகரத் தொடங்கியவுடன், அவனையறியாமல் அவனுடைய உள்ளம் ஆடத் தொடங்கிற்று. அவனுக்கு மிகவும் நெருங்கியிருந்த அவள் இன்னும் சில விநாடிகளில் எட்டாத தூரத்தில் இருப்பாளென்பதை எண்ணும் பொழுது, இயற்கையன்னை அவனுடைய கண்களிலும் நீரை வரவழைத்து விட்டாள்.

அன்று, அவனுக்கு எதிலுமே மனம் செல்லவில்லை. பெரும் பாரம் நெஞ்சை அழுத்திக் கொண்டே இருந்தது.

அவனுடைய நண்பன் அவனைக் கேலி செய்தான், "என்னப்பா, தலையிலே இடி விழுந்துவிட்டது போல உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்!" என்று கேட்டான்.

நண்பன் சிரித்தான். மூன்று குழந்தைகளின் தகப்பன் அவன். அனுபவம் அவனுக்குத் தைரியத்தை அளித்திருந்தது. "சரிதான், விட்டுத் தள்ளப்பா" என்று அலட்சியமாகத் தேற்றினான்.

தனிமையை மறப்பதற்காகத்தான் ரகு சினிமாவுக்குப் போனான். ஆனால், சினிமா நடந்த மூன்று மணி நேரத்துக்குப் பிறகு தனிமை அவனைப் பற்றிக் கொண்டது.

படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்த ராகவன் யோசிக்கத் தொடங்கினான். அவனுடைய நினைவு சுழன்றது.

மணமாகி இரண்டு வருஷங்கள்தான் ஆகின்றன. அதற்குள், அவனும் அவளும் ஒருவருக்கொருவர், 'தீராதவர்'களாகி விட்டனர். அவள் அவனைத் தெய்வமெனப் போற்றினாள்.

அவன் அவளின்றித் தானும் இல்லை என்ற உண்மையை உணர்ந்து விட்டான்.

அன்று அவனுடைய மனம், "அவளை நிமிஷத்துக்கு ஒருதரம் அழ வைப்பாயே, உன் புத்திசாலித்தனத்தைக் காட்டுவாயே ! இன்று யாரைக் கேலி செய்வாய் !" என்று கேட்டது.

"ஐயோ, நான் விளையாட்டுத்தனமாக நடந்து கொண்டதற்காக, ஒரேயடியாக எனக்கு அவள் மீது அன்பில்லை என்று அர்த்தமா !" என்று நடுங்கினான் அவன். "இந்தத் தடவை அவள் பிழைத்து வரட்டும். அவளை என் அன்பு வெள்ளத்தில் திணற வைக்கிறேன்" என்று கூறிக் கொண்டான்.

இரவு மெதுவாக, மிக மிக மெதுவாக வளர்ந்தது.

* * *

ரயிலில் பிரயாணம் செய்த அலுப்புத் தீரச் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் சாந்தா. ரகு அதே நேரத்தில் தனிமையில் வாடி வதங்கிக் கொண்டிருப்பான் என்பதை அவள் கண்டாளா, என்ன ! அவள் தூக்கத்தில் ஏதோ கனவுகளைக் கண்டாள். அவை இன்பக் கனவுகள் என்று அவள் வதனத்தில் படர்ந்த புன் சிரிப்பு சொல்லிற்று.

இரவு கழிந்தது.

பொழுது மெதுவாகப் புலர்ந்தது. எழுந்தவள் திடீரென்று திடுக்கிட்டு, பிறகு தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள். தூக்கக் கலக்கத்தில் தான் தன் ஊருக்கு வந்திருக்கிறோம் என்பதை மறந்து, வழக்கம்போல் கணவனுக்குக் காப்பி போடுவதற்காக எழுந்ததை நினைத்த பொழுது அவளுக்குச் சிரிப்பு வந்தது. அதே சமயம், பிரயாண அலுப்பில் மறந்திருந்த 'தனிமை' மெதுவாக அவளையும் பற்றிக் கொண்டது.

"எழுந்து விட்டாயா அம்மா! அடியே ! கும்பகர்ணன் மாதிரி தூங்குகிறான், பார். ஏய், சாந்தா எழுந்து விட்டாள். அவளுக்குக் காப்பி போட்டுக் கொடு" என்று அவள் தகப்பனார் சுப்பராமன் தம் மனைவியை எழுப்பினார்.

இந்த உபசாரம் சாந்தாவுக்கு மிகவும் இனித்தது.

பாசம், பரிவு, இவற்றையெல்லாம் முக்கியமான நேரங்களில்தானே அறிய முடிகிறது !

"அவருக்குக் கடிதம் எழுத வேண்டும் அப்பா, ஒரு கவர் கொண்டு வருகிறீர்களா!" என்றான். அவன் முகத்தில் லேசாக வெட்கம் சூழ்ந்திருந்தது.

"என்ன ஆதங்கம் பார். இரு, நான் காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன்" என்று சுப்பராமன் சமையற்கட்டில் நுழைந்தார்.

அவருக்குப் பின்னாலேயே நுழைந்த சாந்தாவினால், அந்த அறையையும், தங்கள் வீட்டு சமையற் கட்டையும் ஒத்துப் பார்க்காமலிருக்க முடியவில்லை. அதே சமயத்தில், தான் வீட்டுக்கு விலக்காகி யிருந்தபொழுது, ரகு காப்பி போட முயன்று முடியாமல் கரியடுப்புக்கு ஒரு வணக்கம் செய்து விட்டு, ஹோட்டலுக்குப் போய்க் காப்பி வாங்கிக் கொண்டு வந்ததை நினைத்த பொழுது, மந்தஹாசம் அவள் முகத்தைத் தவிழ்வியது.

"குழந்தே, கொஞ்சம் உட்காரு. இதோ காப்பி கொடுக்கிறேன்" என்றார் தகப்பனார் பரிவோடு. அவர் காப்பி போடப் போகிறாரென்பதை அறிந்து கொண்ட அவருடைய தர்மபத்தினி, போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கத் தொடங்கினாள்.

"ராத்திரி நன்றாகத் தூங்கினாயா!" என்ற கேள்வி சிந்தனையில் ஆழ்ந்திருந்த சாந்தாவை எழுப்பியது. "உம்" என்று ஆமோதித்த அவள் ரகு, தூங்கினானோ இல்லையா என்று கவலைப்படத் தொடங்கினாள். அவனுக்கு வெந்நீர் இல்லா விட்டால் உடம்புக்கு ஆகாது. அவள் இல்லாமல் ஒரு நிமிஷம்கூட அவனால் சமாளிக்க முடியாது.

அவன் அடுப்பைப் பற்ற வைத்துப் பார்த்திருப்பான். அது புகைந்து தள்ளியிருக்கும். கடைசியில், ஹோட்டலில் இருக்கும் உதவாக்கரைக் காப்பியைக் குடித்து விட்டுப் போய்ச் சேர்வான்.

சுப்பராமன் வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு காப்பியை ஆற்றிக் கொடுத்தார்.

சாந்தா மௌனமாகக் காப்பியை வாங்கிக் கொண்டாள். கணவனுடைய கேலியில்லாமல் காப்பி சாப்பிடுகிறாள்! அது இனிக்கவில்லை.

அவள் காப்பி போட்டவுடன் போர்வைக் குள்ளிருந்து, 'காப்பி ரெடியா!' என்று சத்தம் கேட்கும். அவள் 'ரெடி' என்பாள். தலை பரட்டையாக, கண் சிவந்து, பைஜாமாவுடன் ரகு படுக்கையிலிருந்து எழுந்து வருவான். அவசரம் அவசரமாகப் பல்லைத் தேய்ப்பான். பல்லைத் தேய்த்துக் கொண்டே பேசுவான். "நேற்று டிபன் கட்டிக் கொடுத்தாயே, அபாரம்!" என்று தொடங்குவான்.

"ஏன்!"

"அதைச் சாப்பிட்டவுடன், நேரே எம பட்டணத்துக்குப் போன மாதிரி இருந்தது."

"என்ன, அவ்வளவு மோசமாகவா இருந்தது!" அவள் குரலில் வேதனை கலந்திருக்கும்.

"இல்லை, அவ்வளவு மோசமாக இருந்தது!" என்று அழகு காட்டுவான்.

காப்பி குடிக்கும் பொழுது இன்னொரு படலம் தொடர்ந்து நடக்கும்.

"காப்பி ஏன் இவ்வளவு சூடாக இருக்கு!"

அவள் அதை ஆற்றிக் கொடுப்பாள்.

"ரொம்ப ஆறிப் போயிடுத்தே!"

அதை மறுபடியும் சுடவைப்பாள்.



அவன், "வணக்கம், அம்மணி. இந்தச் சூடே போதும்!" என்பான்.

இருவரும் சிரிப்பார்கள்.

இந்த நினைவு வந்தவுடன், காப்பி கசந்தது.

"சாந்தா! காப்பியில் இனிப்பு போதவில்லையே!" என்று கேட்டுக் கொண்டே சர்க்கரை டப்பியை எடுத்தார் தகப்பனார்.

இந்தப் பரிவுக்கு முன்னால் அவளால் என்ன செய்ய முடியும்! காப்பியைக் குடித்தாள்.

* * *

தன்னுடைய பிறந்த வீடே தனக்கு வனவாசம் அளிப்பதைச் சாந்தாவால் பொறுக்கவே முடியவில்லை. கணவன், மனைவி என்ற பாசபந்தம் எவ்வளவு உறுதியானது!

இன்னும் எவ்வளவு நாட்களோ! அவன் பிரசவத்துக்கு முன் லீவு எடுத்துக்கொண்டு வருகிறானோ இல்லையோ! அடுத்த தடவை சாந்தா அவனைப் பார்க்கும்பொழுது அவளிடம் ஒரு குழந்தை இருக்கும், அவர்களிடையே இருந்த அன்பு வெள்ளத்தைப் பிரவாகமாக்க.

சாந்தாவுக்கு இருப்பே கொள்ளவில்லை. தன் தாய், தந்தையர் பரிவிடையே ஏதோ சூனியத்தை அவள் உணர்ந்தாள். எங்கோ தூர இருந்த அவளுடைய ரகுவின் குரலுக்காக அவள் ஏங்கினாள்.

இரண்டு வருடங்களுக்கு முன், முன் பின் தெரியாத ரகுவுடன் தனிக் குடித்தனம் வைக்க வண்டி ஏறியபொழுது, 'இவ்வளவு காலம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த என் வீட்டைப் பிரிகிறேன்!' என்று அவள் எவ்வளவு விம்மினாள்!

அதெல்லாம் இப்பொழுது அவன் மறந்தே போய் விட்டான். தன் வீட்டில் விளக்கேற்ற யாருமில்லை. ரகுவைக் கவனிக்க ஆளில்லை என்பது தான் அவளுடைய பெரும் குறையாக இருந்தது.

மகள் கல கலப்பே இல்லாதிருந்ததைக் கண்ட தாய்க்கு மனம் கலங்கிற்று. ஒரே மகள், தலைச்சன் பிரசவத்துக்காக வந்திருக்கிறாள். அவளுக்கு ஒரு விதக் கவலையு மில்லாதிருக்க வேண்டு மென் றல்லவா பெற்றோர் அவளை அவ்வளவு தூரம் கவனித்துக் கொண்டனர்!

பெற்றோருக்கே தான் துரோகம் செய்வது போலச் சாந்தாவுக்குத் தோன்றியது. இருந்தும், வேற்று மனிதர்களைப் போலத்தான் அவர்களைப் பாவிக்க முடிந்தது.

மணமாவதற்கு முன், அவள் மிகவும் பிடிவாதக் காரியாக இருந்தாள். அற்ப விஷயத்துக்கெல்லாம், ரகளை பண்ணுவாள். கிராமப் பெண்ணாக வளர்ந்ததால், சிறிய விஷயங்களெல்லாம், மலையளவு பிரமாதமாக அவளுக்குப் படும்.

பட்டணத்திலே கணவன் மத்தியிலே அவள் நாகரிக மடைந்தாள். உருவத்தில் அல்ல, உள்ளத்தில் கூட. மிகுந்த சுயாவலம்பியாக இருந்த அவள் கணவன் கூட அவள் வசித்த பொழுது அவளுடைய சுயாவலம் விலகிற்று. தானே இல்லாது ரகு தவிப்பானென்று எண்ண, எண்ண அவளுள்ளத்தில் தனிமை யுணர்ச்சி ஓங்கி வளர லாயிற்று.

* * *

பிரிவு ரகுவுக்கு ஒரு நல்ல பாடத்தைச் சொல்லித் தந்தது. தன் சுயாவலத்தைக் கண்டு அவனே அதிசயிக்கத் தொடங்கினான். ஆறு மணி ஆட்டத்துக்குப் போய், பத்து மணிக்கு வீட்டுக்கு வந்து சாந்தாவின் பொறுமையைச் சோதிப்பது எவ்வளவு தப்பு என்பது தனிமையில்தான் அவனுக்குத் தெரிந்தது. "இனிமேல்......" என்று ஆயிரத்தோராம் தடவையாக, தனது அன்புச் சபதத்தைத் தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

அவனுக்கு இன்னொரு கவலை வளர்ந்து கொண்டு வந்தது. குழந்தை பிறந்து விட்டால் அதை கவனிக்கவே சாந்தாவுக்குச் சரியாகப் போய் விடுமோ, என்னவோ! ஒரு குழந்தை பிறந்ததும் புருஷன் மனைவிகளுக்கிடையே அன்பு குறைந்து விடுவதாகப் படித்த கதைகள் அவனைக் கலக்கின.

"என்பால் அவளுடைய அன்பு குறைந்தாலும், அதிகரித்தாலும், அதற்காக நான் கவலைப்பட மாட்டேன். அவளை நேசிப்பதையும் நிறுத்த மாட்டேன். குழந்தையின் பராமரிப்பில் அவள் என்னை மறந்தால், அவளுடைய சேவையில் நான் என்னை மறப்பேன், இது சத்தியம்" என்று அடிக்கடி அவன் சொல்லிக் கொள்ளத் தொடங்கினான்.

ஆண்கள் சமையல் வேலைகளைச் செய்வது அநாகரிகம், அசட்டுத்தனத்தின் எல்லை என்று வர்ணித்த ரகு, "எப்படிச் சரியாகக் காப்பி போடுவது!" என்று கற்றுக் கொள்ள முனைந்தான். ஒரு நாள் தனிமை இவ்வளவு தூரம் மாற்றி விட்டது.

அவள் வரும் அந்த நல்ல நாளுக்காக அவன் ஏங்கித் தவம் கிடந்தான்.

காகிதத்தை எடுத்து வைத்துக் கொண்ட சாந்தாவுக்கு என்ன எழுதுவதென்று தெரியவில்லை. தன் தனிமையை, வெறுமையை முழுவதும் அந்தக் கடிதத்தில் கொட்ட வேண்டுமென்று நினைத்தாள். ஆனால், வார்த்தைகள் அகப்படவில்லை. பேனாவைக் கடிக்கத் தொடங்கினாள்.

பிறகு வலது பக்கம் தேதியை எழுதினாள்.

ஊருக்கு வந்து ஒருநாளாயிற்று. ரகுவைப் பிரிந்து இரண்டு நாட்களாயின. ஒருநாள் ரயிலிலேயே கழிந்தது. இன்னொரு நாளில் பாதி ஓடி மறைந்திருக்கிறது.

வேண்டுமென்றே நாட்கள் மெதுவாக ஓடுவது போல அவளுக்குப் பட்டது. அப்போதே, அங்கேயே பறந்து சென்று ரகுவைக் காண வேண்டுமென்று அவளுடைய மலரிதயம் பதறிற்று.

அவளுடைய தாய் ஏதோ ஒரு மருந்தைக் கலந்து கொண்டு வந்தாள். "இந்தா, இதைக் குடித்து விட்டுப் பிறகு எழுது" என்றாள். "மருந்து எதற்கம்மா!" என்று சிறு குழந்தைபோல் சிணுங்கத் தோன்றிற்று அவளுக்கு. ஆனால் தகப்பனாரின் தலை தெரியவே மருந்தைக் குடித்து விட்டாள்.

"ஏனப்பா, வயலுக்குப் போகவில்லை?"

"இல்லையம்மா, உன் அருகிலேயே இருக்க வேணும்போல இருக்கு."

அவருடைய குரலிலே மறைக்க முடியாத வாத்ஸல்யம் பெருகி நின்றது. இந்தப் பெற்றோர்களைத்தான் எவ்வளவு பாடுபடுத்தி யிருக்கிறாள்! சிறு வயதிலே தான் 'நல்லவள்' என்ற பெயரெடுத்திருக்கலாகாதா!

"உன் வயிற்றிலே எனக்கொரு பேரன் பிறந்து, நீ தீர்க்காயுசா, க்ஷேமமா திரும்பிப்போகிற வரைக்கும் எங்களுக்கு இருப்பே கொள்ளாது அம்மா!" என்று சொன்னார் தகப்பனார்.

"அப்பா!" என்றாள். அவளுக்கு அழுகையே வந்து விட்டது.

கண்ணீர் கையிலிருந்த காகிதத்தை நனைத்தவுடன், கடிதம் எழுத வேண்டுமென்ற நினைப்பு வந்தது. கூடவே என்ன எழுதுவதென்ற யோசனையும் பிறந்தது.

இவ்வாறு, ரகுவும், சாந்தாவும் தத்தம் இடங்களில் காலத்தைத் தள்ளினார்கள்.

ஒரு மாதமாயிற்று.

சாந்தாவின் பிரசவ காலம் நெருங்கிற்று.

விட்டு விட்டு ஜுரம், வயிற்றுவலி முதலிய உபாதைகள் சாந்தாவை அடைந்த பொழுதெல்லாம் அவள் மிகவும் பயந்து போனாள். "நானில்லாமல், அவர் எப்படி வாழ்வாரம்மா!" என்று தாயிடம் அரற்றினாள். அவளுக்கு, தான் இறந்துவிடப் போகிறோம் என்ற அசட்டு உணர்ச்சி தோன்றிக் கொண்டிருந்தது.

காலம் பறந்தது.

குழந்தை பிறந்தது. அழகான ஆண் குழந்தை. சுப்பராமன் அவசரம் அவசரமாக ரகுவுக்கு இந்தச் சந்தோஷத்தைத் தந்தி மூலம் தெரிவித்தார்.

* * *

"ஆண் குழந்தை ஜனனம். தாயும் சேயும் சௌக்கியம்" என்ற தந்தியைக் கண்டதும் ரகு ஆனந்த நர்த்தன மாடினான். நண்பர்களுக்குப் பெரிய விருந்து அளித்துக் கௌரவப் படுத்தினான்.

ஆனால், மறுபடியும் படுக்கப் போகும்பொழுது ஏதோ ஒரு தனிமை அவனைப்பற்றி உந்தியது.

மனைவியைப் பிரிந்து சரியாக ஐம்பது நாட்களாகி யிருந்தன.

"......இப்பொழுது அவள் ஒரு குழந்தைக்குத் தாய். அது என் குழந்தை. அது என்னைக் கொண்டிருக்குமா, அல்லது அவளைக் கொண்டிருக்குமா?" என்று அந்தக் குழந்தையைப் பற்றி எண்ணினான். அக்குழந்தையின் வளர்ச்சியின் ஒவ்வொரு அங்கத்தையும் கற்பனை செய்து கொண்டு அவ்வின்பத்தை அணு அணுவாகச் சுவைத்தான்.

குழந்தை வளர்ந்தது. இயற்கைப் பிரசவமானதால், சாதாரணமாகப் பிரசவ காலங்களில் ஏற்படும் அமளிதான் சுப்பராமன் வீட்டிலும் ஏற்பட்டதே தவிர, அசாதாரணமாக ஒன்றும் நேர்ந்து விடவில்லை. குழந்தை இருபதாவது நாளை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது.

பகல் பொழுது. "அம்மா!" என்று பயத்தால் சாந்தா கதறிய குரல் கேட்டது. தோட்டத்தில் பச்சிலைகளைப் பறித்துக் கொண்டிருந்த சுப்பராமனும், அடுக்களையில் காப்பி போட்டுக் கொண்டிருந்த அவருடைய மனைவியும் சாந்தா படுத்திருந்த அறைக்கு விரைந்து ஓடிவந்தனர்.

குழந்தையின் முகம் அசாதாரணமாக வெளுத்திருந்தது. மூச்சு திணறிக் கொண்டிருந்தது.

அம்மாள், நாட்டு வைத்தியரை அழைத்து வந்தாள். அவர் கையை விரித்து விட்டார்.

சுப்பராமன் வண்டியைக் கட்டிக் கொண்டு பக்கத்திலிருந்த பெரிய நகரத்துக்குப் புறப்படத் தயாராக இருந்தார்.

மடிமேல் குழந்தையை வைத்துக் கொண்டு, "ஏழுமலையானே, உன்னிடத்துக்கு வந்து முடியிறக்குகிறோம், என்னையும் அவரையும் கைவிட்டு விடாதே!" என்று அரற்றினாள் சாந்தா.

தன் நோய் எது என்று தெரிவிக்க முடியாத நிலையில் இருந்த அப் பசுங்குழவி சோர்ந்து கிடந்தது. ஆஸ்பத்திரி வந்தது. வண்டியிலிருந்து குழந்தையுடன் இறங்கினாள். டாக்டர் குழந்தையைப் பரிசோதித்துப் பார்த்தார். "அபாயம் ஒன்றுமில்லை. எல்லாம் சரியாகிவிடும்" என்றார்.

சாந்தாவைப் பார்த்தார். "எல்லாம் உங்களால்தான் வருகிறது. உங்கள் மனத்தில் ஏதோ ஏக்கம், நிலவி இருக்கிறது. அது தீர்ந்தால்தான் குழந்தை நன்றாக இருக்கும். அதற்கு வேண்டிய தாய்ப் பால் கிடைக்கும்" என்றார்.

இரண்டு நாட்கள் கழிந்தன. குழந்தை கையையும் காலையும் உதைத்துக் கொண்டு சிரித்து விளையாட ஆரம்பித்தது.

அவள் உடனே ரகுவிடம் போக வேண்டுமென்று துடித்தாள். அவனுடன் இருந்தால் தான் அவளுக்குச் சாந்தி பிறக்கும் போலிருந்தது.

* * *

கதவைத் திறந்தான் ரகு. ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனான். சாந்தாவின் முகத்தைக் கேள்விக் குறியுடன் பார்த்தான். முகத்தில் புன்னகை மலர்ந்தது. அவன் முகத்திலும் அலாதியான மகிழ்ச்சி பூத்தது. அவள் கையில் அணைத்து வைத்திருந்த குழந்தையைப் பார்த்தான். தான் பெறற்கரிய பாக்கியம் பெற்று விட்டதை நினைத்து மகிழ்ந்தான். ஆசையோடு குழந்தையை வாங்கக் கையை நீட்டினான். "கொஞ்சம் பொறுங்கள். குழந்தையைத் தரையில் விடுகிறேன், பார்க்கலாம். அதற்கு இன்னும் தலை நிற்கவில்லை. ஜாக்கிரதையாகத் தூக்கவேண்டும்" என்று தாய்மை உணர்ச்சியுடன் சொன்னாள் சாந்தா.

"இதற்குள்ளாகவே நீ மாறிப் போய் விட்டாயே! எனக்குக் குழந்தையைத் தூக்கத் தெரியாதா!" என்று கேட்டுக்கொண்டே குழந்தையை ஜாக்கிரதையாக வாங்கி உச்சி முகர்ந்து மகிழ்ந்தான். வஞ்சகமே அறியாத அந்தப் பச்சிளங் குழந்தையும் தன் அமுதவாயைத் திறந்து சிரித்தது.

தம் மகளையும் மருமகனையும் பேரக் குழந்தையையும் பார்த்துச் சுப்பராமன் பூரித்துப் போனார். அவர்களை விட்டுத் தனிமை மறைந்தது.

மதுர நாயகம்

~ ராஜ் ~

அன்று கலாசாலையில் தமிழ் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ரஸமான விவாதம். தமிழ்ப் பண்டிதர் "நம் ஊருக்குத் 'திருநெலவேலி' என்று ஏன் பெயர் வந்தது?" என்ற கேள்வியைக் கேட்டார். வகுப்பில் மாணவ மாணவிகள் ஒருவரை ஒருவர் முகத்தில் கேள்விக் குறியுடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, நீலமேகம் எழுந்து நின்று "நான் சொல்கிறேன், ஸார்! மானிடராகப் பிறந்த எவருக்குமே வயிறு பிரதானம் ஸார்!" என்றதும் வகுப்பில் ஒரு சிரிப்பொலி எழுந்தது. ஏனென்றால் தமிழ் வாத்தியார் தம் தொந்தியை அருமையாகத் தடவிக் கொண்டிருந்தார். சிரிப்பு அடங்கியதும் "ஏண்டா! அதிகப் பிரசங்கி, கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் என்ன ஏதாவது நாடகம் நடிக்கிறாயா?" என்றார் தமிழ்ப் பண்டிதர்.

"இல்லை, ஸார்! நான் சொல்வதற்குள் கோபித்துக் கொள்கிறீர்களே! இந்த வயிற்றுப் பெருமானைத் திருப்தி செய்ய முக்கியமாக அன்னம் வேண்டும், அந்த அன்னம் அரிசியிலிருந்து வருகிறது, அந்த அரிசி நெல்லிலிருந்து வருகிறது!" என்றதும் "கண்டு பிடித்தாண்டா சிதம்பர ரகசியம், நெல்லுக்குள் அரிசி இருக்கிறது என்று! சீ! மடையா! உட்காரு" என்றார் உபாத்தியாயர். 'ஸார்! ஸார்! முழுதும் கேளுங்கள் ஸார்! நெல் விளைய நிலம் வேண்டுமே! அது இங்கே வெளி, வெளியாக இருக்கிறது, அப்படி விளைந்த நெல் நம் ஊருக்குத் 'திரு'வை, அதாவது பணத்தைக் கொடுக்கிறது. ஆகையால் செல்வம் தரும் நெல்லை உற்பத்தி செய்யும் வெளி வெளியான நிலங்களை உடையது 'திருநெல்வேலி' ஸார்! அதனால்தான் ஸார் நம் ஊர் தெய்வத்தின் பெயரும் 'நெல்லையப்பர்' ஸார்!" என்று கூறி முடித்தான்.

"பலே! பலே!" என்றார் உபாத்தியாயர். வகுப்பில் ஒரே ஆரவாரம், உபாத்தியாயர் ஒரு பெரிய 'ஆ' போட்டதும் நின்றது. ஆனால் நிச்சப்தம் நிலவிய வகுப்பில் தனியாக ஒரு சிரிப்பொலி எழுந்தது. உபாத்தியாயர் அந்தச் சப்தம் வந்த திக்கை நோக்கியதும் வகுப்பில் மாணவிகளிடையே உட்கார்ந்திருந்த மதுரம் என்னும் பெண்ணின் சிரிப்பென்று அறிந்து கொண்டார். "என்ன! சந்தோஷம் தாங்க முடியவில்லை போலிருக்கிறதே!" என்றதும் அவள் நாணித் தலை குனிந்தாள்.

"சரி! அடுத்தபடியாக!" என்று உபாத்தியாயர் சொன்னதும் மணி ஓசை மேலே செல்ல விடாமல் முற்றுப் புள்ளி போட்டது. வகுப்பும் கலைந்து எல்லோரும் வீடு திரும்ப ஆரம்பித்தார்கள். இன்னும் பதினைந்து நாட்களுக்குக் கலாசாலை கிடையாது.

வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த மதுரம் பின்னால் காலடிச் சப்தம் கேட்டு நின்றாள். திரும்பிப் பார்க்காமலே "என்ன வாயாடி!" என்றாள். "ஆமாம், களவாடி!" என்ற பதில் கிடைத்தது. "யாரைக் களவாடி என்கிறாய்? உன் வீட்டில் என்ன திருடினேன்?" என்று கேட்டாள் மதுரம்.

"கோபம் வந்து விட்டதே, மதுரம்! நீ என்னையே களவாடி விட்டாயே, அதைச் சொன்னேன்" என்றான் நீலமேகம்.

"அப்பப்பா உன் பேச்சும் நீயும்! எனக்குப் பிடிக்கவே இல்லை."

"நிஜமாகவா! அப்படியென்றால் இன்று நாம் குறுக்குத் துறையில் சந்திக்க வேண்டாமே!"

"பார்த்தாயா, உனக்குத்தான் கோபம் எடுத்ததற்கெல்லாம் வந்து விடுகிறது! சும்மாச் சொன்னேன். வீட்டுக்குப் போய்க் குடத்தை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன். கொஞ்சம் இரு!" என்று சொல்லி விட்டு வேகமாய் நடந்தாள் மதுரம்.

வழக்கப்படி மதுரம் குடத்தைத் தூக்கிக் கொண்டு தாம்பரபரணி நதியில் ஜலம் எடுக்கப் போனாள். அங்கே குறுக்குத் துறையில் அவளுக்கு முன்பு வாக்குக் கொடுத்தபடி நீலமேகம் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"என்ன, மதுரம்! இதற்குக் குறுக்குத் துறை என்று ஏன் பெயர் வந்தது சொல் பார்க்கலாம்!" என்றான்.

"அட, தமிழ் வாத்தியாரே! பதில் சொல்லட்டுமா? அந்தக் காலத்தில் எவனாவது ஒரு துரை இருந்திருப்பான். அவன் கிறுக்குத்தனமாக ஏதாவது காரியம் இங்கே செய்திருப்பான். இல்லையென்றால் இங்கு வந்து பிராணனை விட்டிருப்பான். கிறுக்குத் துரை காரியம் குறுக்குத் துறை என்று மருவி வந்திருக்கும்!" என்றாள்.

"போடி, அசடே! நீ இந்த ஊருக்கு வந்தவள்தானே, உனக்கு என்ன தெரியும்! இந்தத் துறையிலிருந்து குறுக்கு வழியாகப் போகலாம்."

"சரி! சரி! தெரிந்தது. எமலோகத்துக்குப் போக இந்தத் துறை குறுக்கு வழி, அதுதானே!" என்றாள் மதுரம்.

"சீ! என்ன இது? இன்று இப்படிப் பேசுகிறாய்? அதோ தெரியும் முருகன் கோவிலுக்குப் போகக் குறுக்கு வழி இந்தத் துறையிலிருந்து என்று அர்த்தம்!" என்றான் நீலமேகம்.

"அபாரம், அபாரம்! மூளையே மூளை! நீலமேகம்! பேரைப் பாரு. ஆள் நல்ல வெளுப்பு, பெயர் நீலமேகம். தேடிப் பிடித்து உனக்கு ஒரு பெயர் வைத்தார்களே!" என்று பரிகாசம் செய்தாள் மதுரம்.

"தப்புத்தான் அம்மா, நான்தான் பெயரை மாற்றிக் கொள்ளப் போகிறேனே!"

"சரிதான், என்ன! பெருமாள் பெத்தப் பெருமாள் மாதிரி நீலமேகம் கார்மேகம் ஆகுமோ?"

"அதுதான் இல்லையம்மா, சொல்லட்டுமா!"

"பயமுறுத்துகிறாயே, சொல்லேன்!"

"கோபித்துக் கொள்ள மாட்டாயே?" என்றான் நீலமேகம்.

"கோபித்துக் கொள்ள மாட்டேன், சொல்லு!" என்றாள் மதுரம்.

"என் பெயர் மதுரநாயகம், சரிதானே!" என்றான். அடுத்த நிமிஷம் அவனை அங்கே காணவில்லை. அவன்தான் தண்ணீரில் குதித்து விட்டானே! அவன் குதித்த இடத்தையே பார்த்து நின்று கொண்டிருந்த மதுரத்துக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. ஏனென்றால் மூழ்கின ஆள் வெளியே வரவில்லை. கலவரத்துடன் நின்ற மதுரம் சிறிது நேரம் சென்றதும் எதிர்க்கரையில் நின்ற நீலமேகத்தைக் கண்டதும் 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டாள். திரும்பி வந்தவனை "நீ இன்று என்னமோ ரொம்பக் கிறுக்காகக் காரியங்கள் செய்கிறாய், பேசுகிறாய், என்னைப் பயமுறுத்தி விட்டாயே! உன் சொல் அலங்காரமும், சொற்றொடரலங்காரமும் கேட்டு என் தலையை வலிக்கிறது!" என்று அன்போடு அவனைக் கோபித்துக் கொண்டாள் மதுரம்.

"இனிமேல் உன் நடையலங்காரத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து முருகன் கோவிலுக்கு நடையைக் கட்டு!" என்று கூறிக்கொண்டே நீலமேகம் நடக்க ஆரம்பித்தான்.

திருநெல்வேலிச் சீமையில் பெரும் பணக்காரர்களை மதிப்பிடக் "கோட்டை விரைப்பாடு" என்ற சொற்றொடரை உபயோகிப்பார்கள். அப்படி அநேகக் கோட்டை விரைப்பாடுகளுடன் பெரிய பணக்காரராக விளங்குபவர் சங்கர நாராயணப் பிள்ளை என்ற பண்ணையார். அவரை விடக் குறைந்த சொத்துள்ளவன் நம் நீலமேகம். பெற்றோர்கள் இல்லாதவன். மதுரம் தன் பெற்றோர்களுக்கு ஒரே பெண். அவளுடைய தந்தை கோவிந்த ரெட்டியார் தென்னாற்காடு ஜில்லாவில் நல்ல சொத்துடன் இருந்தார். ஆனாலும் பருவ மழை தவறி ஏரி, குளம் வற்றி, வானம் பார்த்த பூமியுடைய அவருடைய வாழ்க்கை கொடித்துப் போய், ஊரை விட்டு ஓடும்படி ஆகிவிட்டது. அப்படிப்பட்ட நிலையில் அவருக்குப் புகலிடமாகத் திருநெல்வேலிதான் ஏற்பட்டது. அங்கே போய்த் தன் மனைவி மணிமேகலையுடனும் குழந்தை மதுரத்துடனும் புனர் வாழ்வு வாழத் தொடங்கினார். கோவிந்த ரெட்டியார் கோவிந்தப் பிள்ளை ஆகி முருகன் வழிபாட்டில் இறங்கினார். மேலும் பாளையங் கோட்டையில் அவருடைய அக்கா தன் மகனுடன் இருந்ததும் ஒரு காரணம், அவர் திருநெல்வேலியில் புகுந்து புது வாழ்வு தொடங்கியதற்கு. அவருடைய அக்காவின் மகன் சம்பந்தம் மதுரத்தினால் 'சோனி' சம்பந்தம் என்று பெயரிட்டு அழைக்கப் பட்டான். அவன் நோஞ்சலாக இருப்பதோடு எப்பொழுதும் இருமலும் ஜலதோஷமும் அவனை விடாமல் இருந்தன. கோவிந்தப் பிள்ளை தம் மகனைச் சம்பந்தத்துக்கு முறைப்படி மணமுடிக்க எண்ணினார். ஆனால் மதுரத்துக்கும் அவள் தாயாருக்கும் இது கொஞ்சமும் பிடிக்கவில்லை.



இப்படிப்பட்ட நிலையில்தான் மதுரமும் நீலமேகமும் கலாசாலையில் சந்தித்ததிலிருந்து ஒருவரை யொருவர் நேசிக்கத் தலைப்பட்டார்கள். இந்த நட்பு சம்பந்தத்துக்குப் பிடிக்காமல் இருந்ததில் ஆச்சரியம் இல்லை. தன் தாயாரிடமும் சொன்னான். அவளும் தம் தமையனிடம் பட்டதும் படாதுமாகச் சொன்னாள். அவருக்குத் தம் செல்வக் குமாரி மதுரத்தைக் கண்டிக்க மனம் வரவில்லை. தம் மனைவி காதில் மட்டும்

அதைப் போட்டுவைத்தார். அவளும் உள்ளூற உவகை யடைந்தாள். ஆனாலும் தாயார் என்ற ஒரு கடமையை உணர்ந்து தன் மகளை எச்சரித்து வைத்தாள். ஊராருக்குப் பயந்து இரு இனம் இனிய இதயங்கள் கட்டுப்படுவதாகத் தெரியவில்லை.

நீலமேகம் திடீரென்று சில நாட்களாக மதுரத்தைச் சந்திப்பதில்லை. அப்படிச் சந்தித்தாலும் ஏதோ அவசர காரியம் இருப்பதாகச் சொல்லிவிட்டுப் போய் விடுவான். ஒரு நாள் மதுரம் அவனைத் தற்செயலாகச் சந்தித்தபோது "'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்ற கதையாக ஆகிறது நம் உறவு" என்றதற்கு, "மதுரம்! நீ என்றைக்கும் எனக்கு மதுரமான அமுதுதான்! அப்படி ஒன்றும் வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதே!" என்றான் நீலமேகம்.

ஒரு நாள் அதிகாலை. வழக்கமாகத் தன் காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்த மதுரத்துக்கு மனம் ஒன்றும் சரியாக இல்லை.

அதற்கேற்றாற்போல் 'சோணி' வேறு அங்கு வந்திருந்தான். இவ்வளவு அதிகாலையில் அவன் அங்கு வந்தது மதுரத்துக்கு ஆச்சரியமாக இருந்தது. "கேட்டாயா அண்ணி, சமாசாரத்தை?" என்று வாயை 'உஸ்'ஸென்று உறிஞ்சிக் கொண்டபடியே கேட்டான்.

"ஏண்டா, இவ்வளவு காலையில் என்ன சமாசாரம்? அது சரி, வாயில் என்னத்தைப் போட்டுக் கொண்டு 'உஸ்' 'உஸ்' என்கிறாய்?" என்றாள் மணிமேகலை.

"ஓ, அதுவா! கொஞ்சம் இருமல். அதற்காக ஒரு துண்டு அதிமதுரம் அடக்கிக்கொண்டேன்!" என்று மதுரத்தைப் பார்த்தான். அவள் அவனுக்கு ஒரு அழகு காட்டிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

"ஏண்டா, ராத்திரி ரொம்பப் பனியில் நனைந்தாயோ?"

"அதுதான் அண்ணி சொல்ல வந்தேன். நம்ப நீலமேகம் சமாசாரம் தெரியுமில்லே? நேற்று நம்ப பெரிய பண்ணை சங்கரநாராயணப் பிள்ளை களத்து மேட்டிலே ஒரே கலாட்டா" என்றான்.

"என்னடா, புதிர் போடுகிறாய்? விளங்கும்படி சொல்லு" என்றார் கோவிந்தப் பிள்ளை. "சொல்றேன்" என்று அதிமதுரத்தை ஒரு உறிஞ்சு உறிஞ்சினான். "உங்க நீலமேகம் இருக்கானே, அவன் ஒரு புரட்சிக்காரன். நேற்று இரவு பெரிய பண்ணை களத்துமேட்டுக்குப் போய் அவர் சேர் கட்டி வைத்திருந்த நெல் போரில் தீ வைத்தான். நல்ல வேளை அங்கே சமயத்தில் போலீசு வந்து தீயைப் பரவ விடாமல் அணைத்து விட்டுப் பையனைப் போலீஸ் லாரியிலே போட்டுக் கொண்டு போய்விட்டார்கள்! இந்த உணவுத் தட்டுக் காலத்தில் இப்படி ஒருவன் கிளம்பி ஏழை ஜனங்கள் வயிற்றில் அடிப்பதுன்னா சும்மா விடுமா சர்க்கார்?" என்று கூறி ஒரே மூச்சில் முடித்துவிட்டு மதுரத்தைப் பார்த்தான்.

ஆனால் இதைக் கேட்ட மதுரத்திற்குத் தலை சுற்றியது. "ஏண்டா சம்பந்தம், நீலமேகம் நல்ல பிள்ளை ஆயிற்றே, பணத்துக்கும் குறை வில்லை. நீ சொன்னபடி எல்லாம் அவன் ஏன் செய்யணும்?" என்று கேட்டார் கோவிந்தப் பிள்ளை.

"எல்லாம் சகவாச தோஷந்தான்!" என்று பதிலளித்தான் சம்பந்தம்.

"அப்பா! நான் இதை நம்பவில்லை. அத்தான் பொய் சொல்லுகிறார்" என்று அலறினாள் மதுரம்.

"நான் சொல்வதை இப்போது நம்பமாட்டாய். அவன் கம்பி எண்ணப் போகும்போது நம்புவாய்!" என்று கூறிப் போய்விட்டான் சம்பந்தம்.

"அம்மா! எல்லாம் சரி, இந்த அத்தான் இவ்வளவு அவசரமாக இந்த விஷயத்தை ஏன் சொல்ல வரணும், அம்மா? அந்தப் பிள்ளை வாயாடிதான், துடுக்குத்தான். ஆனால் மனசு ரொம்ப வெள்ளை. அது இப்படி எல்லாம் செய்திருக்காது" என்று அங்கலாய்த்தாள் மதுரம்.

இது நடந்து ஒரு வாரம் இருக்கும்; மதுரம் ஒரு சொப்பன உலகத்தில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டாள். கலாசாலை போவது நின்றது. இந்த உலகமே பொய் என்று அவளுக்குத் தோன்றியது. கை கோத்து இருவரும் முருகன் சந்நிதிக்குப்

போய்த் தரிசனம் செய்ததற்குத் தகுந்த பலன் கிடைத்தது. 'இப்படி ஒரு துஷ்டனா நீலமேகம்? இருக்காது' என்றது அவள் இதயம்.

நெல்லையப்பருக்கு உற்சவம். தேர், திருநாள் அமர்க்களம். அன்று சம்பந்தம் வெகு நாட்களுக்குப் பிறகு மதுரத்தின் வீட்டுக்கு நேராக வந்தான். "அண்ணி! இன்று தேர் பார்க்கப் போகிறேன். கூட மதுரத்தை வரச் சொல்லேன். வீட்டுக்குள்ளேயே இருந்து என்ன பண்ணுகிறாள்" என்றான். பெற்றோர்களும் வற்புறுத்தியதின் பேரில் வேண்டா வெறுப்பாகக் கூடச் சென்றாள் மதுரம். பராக்குப் பார்த்துக் கொண்டே போனவள் கும்பலில் அகப்பட்டுக் கொண்டு விட்டாள். சம்பந்தமும் அவளும் பிரிந்து விட்டார்கள்; பயந்து விட்டாள் மதுரம். 'கடவுளே, இது என்ன இப்படிச் சோதனை' என்று நினைத்தாள். இருந்தாலும் அவளுக்குச் சம்பந்தத்தை விட்டுத் தனியாகப் பிரிந்து போனது ஒருவித சாந்தியைக் கொடுத்தது. அப்பொழுது அவள் கையைக் கெட்டியாக யாரோ பிடிப்பது போலிருந்தது. திரும்பிப் பார்த்தாள். தலை முக்காடு போட்டுக்கொண்டு அவள் கையைப் பற்றியது நீலமேகத்தின் கை. அவ்வளவுதான். இருவரும் ஒரு வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வழி நெடுக அவன் கதையாகச் சொல்லிக் கொண்டு வந்த விவரங்கள் அவளுக்கு ஆறுதல் அளித்தது. வண்டி வீட்டு வாசலில் நின்றதும் குதித்தாள் மதுரம். உள்ளே ஓடினாள். பின்னாலேயே நீலமேகம் நுழைந்தான்.

"அப்பா, அவர் வந்து விட்டார்!" என்று சொன்னாள் மதுரம். அவளுக்குப் பின்னாலேயே நீலமேகமும் வந்து விட்டான்.

கோவிந்தப் பிள்ளைக்குச் சற்று நேரம் ஒன்றும் தோன்றவில்லை. "வா அப்பா, நீலமேகம்! என்ன சமாசாரம்! ஊரெல்லாம் ஒரேயடியாக உன்னைப் பற்றியே பேச ஆரம்பித்து விட்டார்களே!"


"சம்பந்தமும் நானும் விளையாட்டாக ஆரம்பித்தது. இப்படி வினையாக முடியும் என்று எண்ணவில்லை. 'உனக்கு ஆண்மையில்லை!' என்றான். கோபம் வந்தது எனக்கு. 'ஆண்மையைக் காண்பிக்க வேண்டுமானால் நம் பெரிய பண்ணை வைக்கோல் போரில் தீ வைக்கத் தைரியமாவது உண்டா?' என்றான்.

"அந்தமாதிரி ஆண்மை வேண்டாம் அப்பா நமக்கு!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டேன் நான். ஆனால் அவனே அந்தக் காரியத்தைச் செய்து விட்டு என்பேரில் இரகசியமாகப் போலீஸில் வத்தி வைத்து விட்டான். போலீஸில் என்னைப் பிடித்து விட்டார்கள். ஆனால் போலீஸ் விசாரணையில் உண்மை வெளியாகிவிட்டது. அவனைப் பிடிக்க வாரண்ட் அனுப்பப்பட்டது. அவன் எங்கேயோ தலை மறைவாக இருக்கிறான்!" நீலமேகம் இப்படிச் சொல்லும்போதே, திடீரென்று சம்பந்தம் அங்கு வந்து சேர்ந்தான். நீலமேகத்தைப் பார்த்ததும் அவன் முகம் வெளிறிப் போய்விட்டது.

இந்தச் சங்கடமான நிலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் திடீரென்று அங்கே வந்து சம்பந்தத்தின் மீதுள்ள வாரண்டைக் காட்டினார். சம்பந்தம் அவருக்கு ஒரு சிரமமும் வைக்கவில்லை. தானாகவே போய் லாரியில் ஏறிக் கொண்டான்.

கோவிந்தப் பிள்ளைக்கு இதெல்லாம் விளங்காத புதிரா யிருந்தது. 'சம்பந்தம் இவ்வளவு அயோக்கியனா?' என்று அவர் ஆச்சரியப் பட்டார். மதுரத்தின் முகத்தில் குதூகலம் தாண்டவமாடியது. அவள் ஒரே ஓட்டமாக ஓடி நீலமேகத்தின் கையைப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

நீலமேகம் பரவசமடைந்தான். ஒருவாரம் போலீஸ் லாக்கப்பில் இருக்க நேர்ந்துவிட்டதனால் நீலமேகத்துக்கு அந்த ஊரில் யாருடைய முகத்திலும் விழிக்கப் பிடிக்கவில்லை. அந்த ஊரை விட்டுத் தஞ்சாவூருக்குப் போய்விடுவது என்று முடிவு கட்டினான். கோவிந்தப் பிள்ளையும் அவன் விருப்பப்படியே மதுரத்துக்கும் அவனுக்கும் தஞ்சாவூரிலேயே கல்யாணம் செய்து வைத்தார். புது இன்ப வாழ்க்கையை ஆரம்பித்தபோது நீலமேகம் தன் பெயரையும் மதுரநாயகம் என்று மாற்றி வைத்துக் கொண்டான். அவர்களுடைய இன்பமான புது மண வாழ்க்கையும் அதி மதுரமாயிருந்தது.


வலிமை
சௌகரியம்
வேகம்
பத்திரம்
THE HERCULES CYCLE & MOTOR CO. LTD.
BRITANNIA WKS. BIRMINGHAM



பாவ மன்னிப்பு

பரிசுக்கதை: ஆண்டன் கூலன் (நெதர்லண்ட்ஸ்) மொழிபெயர்ப்பு: வாஞ்ச

அப்போது இலேசாக மழை தூறிக் கொண்டிருந்தது. கருப்பு உடை உடுத்திக் கொண்டிருந்த பாதிரியார் ஆமஸ் கையில் சில காகிதங்களை எடுத்துக் கொண்டு கிறிஸ்து வாலயத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தார்.

பெரிய ரஸ்தாவை அடுத்துள்ள சிறிய தெருவில்தான் அந்த ஆலயம் இருந்தது. ரஸ்தாவில் ஜனக் கூட்டமும் சந்தடியும் மிகவும் அதிகமாக இருந்தன. டிராம் வண்டிகள் மணி அடிக்கும் சப்தம் காதைத் துளைத்தது. மோட்டார் ஹார்ன்களின் கூக்குரலோ சகிக்க முடியவில்லை.

எனினும் ரஸ்தாவிலிருந்து ஆலயம் சிறிது தூரத்துக்கு அப்பால் இருந்ததால், அங்கு சந்தடி எதுவுமின்றி அமைதி நிலவியது.

வழக்கம்போல் இதையெல்லாம் கவனித்த வண்ணம் ஆமஸ் பெரிய ரஸ்தாவிலிருந்து மேற்படி குறுக்குத் தெருவில் நுழைந்து ஆலயத்தை நோக்கிச் சென்றார். பெரிய ரஸ்தாவில் உள்ள சகிக்க முடியாத சந்தடிக்கும் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள அமைதிக்கும் எவ்வளவு வேற்றுமை!

எனினும், எப்போதும் ஆமஸின் மனசுக்குச் சாந்தியைக் கொடுக்கும் அந்த அமைதி அன்று அவர் மனத்தில் இனம் தெரியாத பீதியை உண்டாக்கியது.

ஆலயத்தின் தலைவாயில் கதவைத் திறப்பதற்காக அவர் தமது சட்டைப் பையிலிருந்து சாவியை எடுக்க முற்பட்டார். அதே சமயம் திடுக்கிட்டு அப்படியே நின்று விட்டார்.

ஏனெனில் ஆலயத்தின் கதவு சிறிது திறந்திருந்தது. அகாலத்தில் அது அவ்வாறு திறந்திருக்கக் காரணமில்லை. அன்று மாலை கதவை நன்றாகப் பூட்டுவதற்கு வேலையாள் மறந்து விட்டானோ என்று அவர் நினைத்தார்.

அவர் சிறிது நேரத்துக்கு முன் தமது அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது ஏற்பட்ட துர்ச்சகுனமான சில அறிகுறிகள் அவரது ஞாபகத்துக்கு வந்தன. தாம் பயந்தது முற்றிலும் சரிதான் என்று அவருக்குத் தோன்றியது. இல்லாவிடில் அந்த அகாலத்தில் அவர் ஆலயத்துக்கு வர எவ்விதக் காரணமும் இல்லை அல்லவா?

* * *

ஆமஸ் தமது அறையில் உட்கார்ந்து ஒரு மாத சஞ்சிகையை வாசித்துக் கொண்டிருந்தார். அதில் குறிப்பிட்ட ஒரு தர்ம கைங்கர்யத்துக்குப் பண உதவி கோரி ஒரு கட்டுரை வெளியாகி யிருந்தது. "நீங்கள் உதவி செய்ய முடியும். அந்த உதவியை ஒரு நிமிஷமும் தாமதமின்றி உடனே செய்யுங்கள்" என்ற தலைப்புக்களின் கீழ் அந்தக் கட்டுரை வெளியாகி யிருந்தது.

அதை வாசித்ததும் ஆமஸுக்கு தம்முடைய உதவியை ஆலயத்தில் உடனே யாரோ கோருவது போன்ற உணர்ச்சியும் பரபரப்பும் ஏற்பட்டன. எனவே மறுநாள் ஆலயத்தில் பாடவேண்டிய சில பிரார்த்தனை கீதங்கள் அடங்கிய காகிதங்களுடன் வெகு வேகமாக ஆலயத்துக்குப் புறப்பட்டு வந்தார். ஆலயத்தின் கதவு திறந்து கிடந்ததைக் கண்டதும், தம் மனத்துக்குத் தோன்றிய விபரீதமான அறிகுறிகள் வெறும் பிரமையல்ல என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

ஆமஸ் கதவை நன்றாகத் திறந்து கொண்டு ஆலயத்துக்குள் சென்றார். மின்சார விளக்கைப் போட்டார். படிகளின் வழியாக விடுவிடு என்று மேலே ஏறினார். அவர் பாதிப் படிகள்தான் ஏறியிருப்பார்; அச்சமயம் திடீரென்று மேலே யிருந்த மெயின் ஸ்விட்சைப் போட்டு, மின்சார விளக்கை யாரோ

அணைத்து விட்டனர். 'ஸ்விட்சி'ன் சப்தம் நன்றாகக் கேட்டதால், அதை யாரோ அணைத்திருக்கிறார்கள் என்பதில் அவருக்குச் சிறிதும் சந்தேகம் ஏற்படவில்லை.

நிசப்தமான அந்த இருளில் அவர் சிறிது நேரம் தயங்கிப் படியின் மீது நின்றார். பிறகு சமாளித்துக் கொண்டு மற்றப் படிகளையும் கடந்து மேலே சென்றார்.

அந்தக் கதவும் திறந்து கிடந்தது. ஆனால் மேற்படி கதவைப் பூட்டுவது வழக்கமில்லை. சிறிது காற்று அடித்தால் கூட அந்தக் கதவு தானாகவே திறந்து கொள்ளும். எனவே, அதைக் குறித்து ஆமாஸின் மனத்தில் பீதி எதுவும் ஏற்படவில்லை.

மேலே வந்ததும் அவர் அங்குள்ள விளக்கைப் போடுவதற்காக 'ஸ்விட்சை'த் தடவிய போது, இருட்டில் காலடிச் சப்தம் அவருக்குத் தெளிவாகக் கேட்டது. எனவே ஆலயத்துக்குள் வேறு யாரோ இருக்கிறார் என்பது அவருக்குத் தெரிந்து விட்டது.

உடனே அவர், "யார் அது?" என்று உரக்கக் கத்தினார்.

அதே சமயம் படிகளின் வழியாகக் கீழே யாரோ தடதடவென்று இறங்கிப் போகும் சப்தம் கேட்டது. ஆமஸ் சட்டென்று விளக்கைப் போட்டார். கையிலிருந்த காகிதங்களை அப்படியே கீழே வீசி எறிந்தார். வெளியே விரைந்து வந்தார்.

அதற்குள் தலைவாயில் கதவு படார் என்று சாத்திக் கொண்டது. ஆமஸ் வெகு வேகமாக இறங்கி வந்து கதவைத் திறந்தார். யாராவது ஓடுகிறார்களா என்று தெருவின் இரண்டு பக்கங்களையும் மாறி மாறிப் பார்த்தார். ஆனால் கண்ணுக்கு எட்டிய வரையில் யாரும் ஓடுவதாகத் தெரியவில்லை.

ஆலயத்தில் உள்ள சாதனங்கள் ஏதாவது திருட்டுப் போய் விட்டனவா என்று பார்ப்பதற்காக அவர் மறுபடியும் வேகமாக மேலே பாய்ந்து வந்தார். ஞான ஸ்நானத் தொட்டிக்கு அப்பால் இருந்த 'ஸ்விட்சை'த் தட்டி விளக்கைப் போட்டார். வெளிச்சத்தில் கோவில் உட்புறத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு அவர் அப்பால் அடி எடுத்து வைத்த போது, அவரது கண்முன் குடலை நடுங்க வைக்கும் ஒரு காட்சி தென்பட்டது.

அங்கிருந்த மேடைக்குக் கீழே கல் படிகளுக்கு அருகில் ஒரு மனிதன் சுருண்டு விழுந்து கிடந்தான். அவனது மண்டையில் பயங்கரமான காயம் ஏற்பட்டு இரத்தம் வெள்ளமாகப் பெருகி யிருந்தது.

பாதிரியார் ஆமஸ் பரபரப்பு அடைந்து கீழே குனிந்து அந்த மனிதனை மெதுவாகத் தூக்கினார். அவனது உடல் ஜில்லிட்டிருந்தது. எனவே அவன் இறந்து சிறிது நேரம் ஆகியிருக்க வேண்டுமென்று அவர் ஊகித்துக் கொண்டார்.

பிறகு அவர் மெதுவாக உடலைக் கீழே கிடத்தினார். அந்த மனிதனின் தொப்பி சில அடி தூரத்துக்கு அப்பால் விழுந்து கிடந்தது. அப்போதுதான் பாதிரியார் அவனது முகத்தை உற்றுப் பார்த்தார்.

அதைப் பார்த்ததும் அவரது திகைப்பும் பரபரப்பும் இன்னும் அதிகமாயின. அவரது மனத்திலே ஏக காலத்தில் பல கேள்விகள் எழுந்தன. உடனே மாண்ட மனிதனின் அடர்த்தியான கிராப் தலையும், வடு உள்ள முகமும், நீலச் சட்டையும், கால் சட்டையும் அவரது கவனத்தைக் கவர்ந்தன.


"இவனா? இவன்தான் சிறிது......"

இவ்வாறு தனக்குத்தானே கூறிக்கொண்ட அவரது வாயிலிருந்து அந்த வார்த்தைகளுக்கு மேல் எதுவும் வரவில்லை. உடனே அவர் மாண்ட மனிதனின் ஆத்மா சாந்தி அடைவதற்காக அந்த இடத்திலேயே தலையைக் குனிந்த வண்ணம் சிறிது நேரம் பிரார்த்தனை செய்தார். பிறகு ஆலய பீடத்தை நோக்கிய வண்ணம் சில நிமிஷங்கள் வரையில் முழந்தாளிட்டு வணங்கினார். அதன்பின் ஆலயத்திலிருந்து பரபரப்புடன் புறப்பட்டார்.

ஆமஸ் தமது அறைக்குச் சென்றார். ஒரே சமயத்தில் மழையினாலும் வியர்வையினாலும் அவரது முகத்திலிருந்து ஜலம் வழிந்து கொண்டிருந்தது.

அவர் உடனே டெலிபோன் மூலம் போலீஸாருக்குத் தகவல் அறிவித்து விட்டு, மறுபடியும் ஆலயத்துக்குச் சென்று போலீசாரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

போலீஸ் அதிகாரிகள் வந்து மாண்ட மனிதனையும் அவன் கிடந்த இடத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்தனர். பிறகு ஆமஸிடமிருந்து வாக்குமூலம் பெற்றுக் கொண்டு அவர்கள் புறப்பட்டனர். அவர்கள் புறப்



நண்பர் (டாக்டர் வீட்டில் ஒரே கூட்டமாயிருப்பதைப் பார்த்து விட்டு):— டாக்டர் ஸார், ரொம்பக் காரியமா யிருக்கிறீர்கள் போலிருக்கிறது! நான் சாவகாசமாக வந்து பார்த்துக் கொள்ளுகிறேன். வரட்டுமா?

டாக்டர்:—சும்மா வாருங்கள். ஸார்! அவர்களெல்லோரும் என் மனைவியின் பிறந்த வீட்டு மனிதர்கள். மருந்து சாப்பிட வரவில்லை; விருந்து சாப்பிட வந்திருக்கிறார்கள்!

படும் போது, மேற்படி சவத்தைச் சிறிதும் தாமதமின்றி ஆலயத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று ஆமஸ் போலீஸ் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார். அவ்விதமே மாண்டவனின் உடல் அப்புறப்படுத்தப்பட்ட பின்தான் அவருக்குச் சிறிது மன அமைதி உண்டாயிற்று.

* * *

எனினும் ஆலயத்தில் நிகழ்ந்த மேற்படி விபரீத சம்பவம் ஆமஸின் மனத்தை என்னவோ செய்து கொண்டிருந்தது. மர்மமான அச் சம்பவத்துக்கு யார் பொறுப்பாளியாக இருக்கக் கூடும் என்பதை அவரால் சிறிதும் ஊகிக்க முடியவில்லை.

எனவே, அவர் தலையில் கையை வைத்துக் கொண்டு சோகமாக உட்கார்ந்திருக்கும் சமயத்தில் டெலிபோன் மணி அடித்தது. உடனே பாதிரியார் ஆமஸ் பரபரப்புடன் டெலிபோனைக் கையில் எடுத்துக் காதில் வைத்துக் கொண்டார்.

போலீஸ் தலைமை அதிகாரிதான் டெலிபோனில் ஆமஸைக் கூப்பிட்டார்.

"மாண்ட மனிதனை அடையாளம் கண்டு பிடித்தாகி விட்டது. அவன் ஜெர்மானியர்களுடன் ஒத்துழைத்த ஒரு டச்சு சிப்பாய் என்று நிச்சயமாகத் தெரிகிறது. அவன் நேற்றுத்தான் சிறையிலிருந்து விடுதலை அடைந்தானாம். இது ஓர் அரசியல் கொலையாகவே இருக்க வேண்டும். எனவே, தாங்கள் ஆலயத்துக்குள் சென்றபோது அங்கிருந்து வெளியே ஓடியவன் யார் என்பதை இப்போது தெரிந்து கொள்ள முயற்சி செய்து வருகிறோம்" என்றார் போலீஸ் அதிகாரி.



"இவ்வளவு சீக்கிரத்தில் இந்தத் தகவல்களை யெல்லாம் கண்டு பிடித்ததற்காகத் தங்களுக்கு வந்தனம்."

இவ்வாறு பதில் கூறிய ஆமஸ் டெலிபோனை வைத்து விட்டு மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தார். ஆலயத்தில் நிகழ்ந்த கோர சம்பவம் அவரது மனத்தைத் துடிக்கும்படி செய்து விட்டது.

இச் சமயத்தில் டெலிபோன் மணி மறுபடியும் அவரது சிந்தனையைக் கலைத்தது. போலீசாரிடமிருந்து மேற்கொண்டு தகவல்கள் கிடைக்கலாம் என்ற எண்ணத்துடன் அவர் டெலிபோனைக் கையில் எடுத்தார்.

டெலிபோனில் கேட்ட குரல் அவருக்குப் பழக்கமில்லாத குரலாக இருந்தது.

"தாங்கள் யார்?" என்று கேட்டார் ஆமஸ்.

"சில மணி நேரத்துக்கு முன் உங்கள் ஆலயத்தில் நிகழ்ந்த சம்பவத்தின் மர்மத்தை அறிந்தவன்" என்றது அந்தக் குரல்.

ஆமஸ் திடுக்கிட்டார். அவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. மௌனமாக இருந்தார்.

"தங்களை இப்போது வந்து பார்க்கலாமா? தாங்கள் அனுமதி கொடுத்தால் அச் சம்பவத்தைப் பற்றிய முழு விவரங்களையும் தங்களிடம் கூறி விடுகிறேன்" என்றது அக்குரல்.

மீண்டும் சிறிது நேரம் மௌனமாக இருந்த ஆமஸ் தயக்கத்துடன் "சரி" என்றார்.

* * *

ஆமஸுக்கு நாற்காலியில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து அங்குமிங்கும் உலாவத் தொடங்கினார். வரப் போகும் மனிதன் யார்? அவன் எப்படி இருப்பான்? அவன் சொல்ல விரும்பும் விஷயங்களிலிருந்து இந்தக் கொலைக்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியுமா? ஒரு வேளை அவனே கொலை......?

இவை போன்ற பல கேள்விகள் ஆமஸின் மனத்தில் எழுந்தன.

சில நிமிஷங்கள் சென்றதும் யாரோ ஒரு மனிதன் ஆமஸின் எதிரில் வந்து நின்றான். சைகை காட்டி அவனை உட்காரச் சொன்னார் ஆமஸ்.

அவன் உட்கார்ந்ததும், "என் பெயரைச் சொல்லும்படி தாங்கள் வற்புறுத்தக் கூடாது" என்றான்.

"தங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள்" என்று கூறி, ஆமஸ் வந்த மனிதனை உற்றுப் பார்த்தார்.

அவனுக்கு முப்பத்தைந்து அல்லது நாற்பது வயது இருக்கும். நன்றாகவும் சுத்தமாகவும் உடை உடுத்திக் கொண்டிருந்தான். அவனது வசீகரமான முகம், ஆமஸுக்கு அவன்மீது கெட்ட எண்ணம் ஏதாவது ஏற்படுவதற்குச் சிறிதும் இடம் கொடுக்கவில்லை.

"இங்கு நடந்த சம்பவத்தின் காரணம் தங்களுக்குத் தெரியும் என்று சொன்னீர்களே?" என்று கேட்டார் ஆமஸ்.

வந்த மனிதன் "ஆம்" என்று கூறி, மேலும் தொடர்ந்தான்.

"இந்த ஆலயத்தின் பீடத்துக்கு அருகில் இன்றிரவு இறந்து கிடந்த மனிதன் ஜெர்மனியுடன் ஒத்துழைத்த டச்சு சிப்பாய்."

"அது எனக்குத் தெரியும்" என்று இடைமறித்தார் ஆமஸ்.

"எப்படித் தெரியும்?"

"போலீசார் கூறினார்கள்."

"அதற்குள் அவர்கள் அந்த மனிதன் யார் என்பதைக் கண்டு பிடித்து விட்டார்களா!... நானும் ஒரு சிப்பாய்தான். யுத்தகாலத்தில் கொடிய ஜெர்மன் சிறையான பெர்கன்–பெல்ஸன் முகாமிலிருந்து நான் அதிர்ஷ்டவசமாகத் தப்பிப் போலந்துக்கு வந்து சேர்ந்தேன். வரும் வழியில் நான் ஓர் யூதர் குடும்பத்தைச் சந்திக்க நேரிட்டது. அந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஏழு வயதுள்ள அவர்களுடைய மகனும் இருந்தனர். அவர்களும் மரணத்தின் வாயிலிருந்து தப்பி, அதாவது ஜெர்மானியர்களிடமிருந்து தப்பி ஓடி வந்தவர்கள்தான்.

"நாங்கள் ஒரு கிராமத்தை அடுத்த காட்டில் ஒளிந்து கொண்டிருந்தோம். அந்தக் கிராம ஜனங்களில் சிலர் எங்களுக்கு இரகசியமாக உணவு அளித்து வந்தனர். அந்தச் சிறுவன் எப்போதும் என்னுடனேயே சிரித்து விளையாடிக் கொண்டிருப்பான். ஒருநாள் மேற்படி யூதச் சிறுவன் வழி தவறிப்போய் ஜெர்மன் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டான். அவன் மூலமாக அவர்கள் நாங்கள் ஒளிந்திருந்த இடத்தைத் தெரிந்து கொண்டு விட்டார்கள்.

"ஜெர்மானியர்களின் கட்டளைக்கு இணங்கி இந்த மனிதன்தான் எங்களை விரட்டிக் கொண்டு வந்தான். நாங்கள் ஓடத் தொடங்கவே அவன் எங்களை நோக்கிச் சரமாரியாகச் சுடத் தொடங்கினான். ஒரு தோட்டா என் காலில் படவே நான் கீழே விழுந்து விட்டேன். விழுந்த நான் இறந்தவனைப் போல் அப்படியே அசையாமல் இருந்ததால், நான் இறந்து விட்டதாக எண்ணி அவன் மற்றவர்களைத் தொடர்ந்து சென்றான்.

"அவனது துப்பாக்கிக்கு அந்த யூதர் குடும்பம் பலியாகியதை என் கண்ணால் பார்த்தேன். அப்போது அந்த ஏழு வயதுச் சிறுவன் பரிதாபமாக அலறியதை இப்போது நினைத்தாலும் என் குலை நடுங்குகிறது."

இச்சந்தர்ப்பத்தில் அந்த மனிதன் முகத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டு விம்மினான். சில நிமிஷ நேரம் வரையில் அவனால் பேச முடியவில்லை.

"பிறகு அந்தக் கோரமான காட்சி என் மனத்தை விட்டு அகலவே இல்லை. அந்தக் கொலைகாரன் திரும்பிச் சென்ற பின் நான் பல நாள் பட்டினி கிடந்து, தட்டுத் தடுமாறித் தப்பி வந்து சேர்ந்தேன்.

"அதற்குப் பின் இன்று தான் இந்த மனிதனைப் பார்த்தேன். இவன் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். நானும் அங்கு சாப்பிடச் சென்றபோது இவனை உடனே அடையாளம் கண்டு பிடித்தேன். அவன் நெற்றியில் ஒரு வடு உண்டு. அது இவனை உடனே எனக்குக் காட்டிக் கொடுத்து விட்டது. அந்த வடு இல்லாவிட்டாலும் கூட இந்தப் பாதகனை நான் நிச்சயமாக அடையாளம் கண்டு பிடித்திருப்பேன்.

"என்னையும் அவன் அடையாளம் கண்டு கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில், அவன் என்னைப் பார்த்ததும் அவ்விதம் திகில் கொண்டு எழுந்து ஓட ஆரம்பித்திருக்க மாட்டான். ஹோட்டல்காரருக்குக் கொடுக்க வேண்டிய சில்லறையை அவன் எடுத்துக் கொடுத்த போது அவனது கைகள் நடுங்கியதை நான் கவனித்தேன்.

நான் அவனைப் பின் தொடரவே, அவன் என்னைப் பார்த்து "நான் செய்த பாவத்துக்குச் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டேன்" என்றான் நடுங்கிய குரலில்.

"ஏழு வயதுக் குழந்தையைக் கொன்றதற்கு அந்தப் பிராயச் சித்தம் போதாது" என்றேன். அவனைத் தொடர்ந்த வண்ணம்.

அப்போது என் தொண்டை அடைத்துக் கொண்டதையும் எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும் அவன் கவனித்திருக்க வேண்டும்.



எனவே அவன் நிகில் கொண்டு வெகு வேக மாக நடக்கத் தொடங்கினான்.

" 'குழந்தையைக் கொன்றதற்கு என்ன சொல்லுகிறாய்?' 'குழந்தையைக் கொன்றதற்கு என்ன சொல்லுகிறாய்' என்று அலறிக் கொண்டே அவனை விடாமல் பின் தொடர்ந்தேன்.

" அவன் கடைசியாக இந்தச் சிறு தெருவுக்குள் நுழைந்தான் 'நான் உன்னை இலகுவில் விடமாட்டேன். அந்தக் குழந்தைக்கு வழி என்ன சொல்லுகிறாய்?' என்று மறுபடியும் கத்திக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்து சென்றேன்.

" இந்த ஆலயத்தின் கதவு சிறிது திறந்திருந்ததால் சட்டென்று அவன் இதற்குள் நுழைந்து விட்டான். நானும் அவனைத் தொடர்ந்து படிகளின் வழியாக மேலே ஏறினேன். இருளாக இருந்தும் கூட மேல் படியில் அவன் பிரமித்துப் போய் நின்றது எனக்குத் தெரிந்தது. 'குழந்தையைக் கொன்ற பாதகத்துக்கு என்ன பிராயச் சித்தம் செய்து கொள்ளப் போகிறாய்?' என்று மறுபடியும் கேட்டேன்.

"அவன் உள்ளே ஓடினான். வெறி பிடித்தவனைப் போல் நானும் பின் தொடர்ந்தேன். அந்தச் சிறுவனின் ஆவி, 'அவனை விடாதே. அவனை விடாதே' என்று அலறுவது போல் எனக்குத் தோன்றியது. அவன் கடைசியாக உள்ளே மேடை மீது ஏறினான். நானும் ஏறினேன். அங்கிருந்து இருளில் ஒரே பாய்ச்சலாகக் கீழே பாய்ந்தான். பயங்கரமான சப்தத்துடன் சுவரில் மோதிக் கொண்டு கீழே விழுந்தான். விழுந்தவன் பிறகு அந்த இடத்திலிருந்து எழுந்திருக்கவே இல்லை.

" அந்த இடத்திலேயே நான் நின்று கொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் நின்றேன் என்பது எனக்கே தெரியாது. கடைசியில் நீங்கள் வந்து விட்டீர்கள். உடனே நான் விளக்கை அணைத்துவிட்டு, இங்கிருந்து ஓட்டம் பிடித்தேன்."



அப்பா:—உன் பிள்ளை தினமும் அலாரம் வைத்து விட்டுப் படுத்துக் கொள்ளுகிறானே! ஒரு நாளாவது காலையில் எழுந்திருக்கிறானோ?

அம்மா:— எழுந்திருக்காமல் என்ன! அது அடிக்க ஆரம்பித்ததும் அவன்தான் எழுந்திருந்து அதை நிறுத்திவிட்டுப் படுத்துக் கொள்கிறான்!

வந்த மனிதன் இவ்வாறு கூறி முடித்ததும் ஆமஸ் சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தார். பிறகு, "ஓட்டம் பிடித்த நீங்கள் மறுபடியும் எதற்காகத் திரும்பி வந்தீர்கள்" என்று சந்தேகத்துடன் கேட்டார்.

" அப்போது என்ன செய்வது என்றே எனக்குத் தோன்றவில்லை. பிறகு நிதானித்து என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன். அவனைக் கொன்றவன் நான் அல்ல என்பதைத் தங்களிடம் தெரிவிப்பதற்காகவே இங்கு திரும்பி வந்தேன். அவனை என் கையால் கொன்றிருந்தால்கூட நான் வருத்தப்பட மாட்டேன். அப்படிப்பட்ட ராக்ஷசப் பிறவிகள் உலகத்தில் இருப்பது ஆபத்தாகும்."

வந்த மனிதன் இவ்விதம் கூறிய சமயத்தில் டெலிபோன் மணி மீண்டும் அடித்தது. போலீஸ் அதிகாரி மறுபடியும் ஆமஸுடன் பேச விரும்பினார்.

" ஆலயத்துக்கு அருகில் இரண்டு இரகசிய போலீஸ் அதிகாரிகளை நிறுத்தி வைத்திருக்கிறோம். இந்த அகால வேளையில் சந்தேகாஸ்பதமான முறையில் தங்களை யாரோ கண்டு பேசிக் கொண்டிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். அவரைச் சில கேள்விகள் கேட்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் அங்கு வந்தால், அவ்விதம் கேள்வி கேட்பதற்கு அனுமதிப்பீர்களா?" என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

ஆமஸ் வந்த மனிதனிடம் மேற்படி தகவலை அறிவிக்கவே, " அவர்கள் தாராளமாக வரட்டும். அவர்கள் வராவிட்டாலும், உங்களிடம் விடைபெற்றுக் கொண்டபின், நானே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று எல்லா விஷயங்களையும் கூறிவிடத் தீர்மானித்திருந்தேன்......நான் கூறியதைத் தாங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டான் அவன்.

" பூரணமாக நம்புகிறேன்...மாண்ட மனிதனே இன்று மத்தியானம் இங்கு வந்து யூதர் குடும்பத்தைத் தான் கொன்ற விவரங்களையெல்லாம் என் முன்னிலையில் கூறி ஆலயத்தின் பீடத்துக்கு எதிரில் மண்டியிட்டு, ஆண்டவனிடம் பாவ மன்னிப்புக் கோரினான்" என்றார் ஆமஸ்.

இதைக் கேட்டதும் வந்த மனிதனின் இருதயத்தில் பொங்கிய உணர்ச்சிகளை விவரிப்பதென்பது இயலாத காரியம். ஆலயத்தில் மாண்டவன்மீது அப்போதுதான் முதல் தடவையாக அவனுக்கு எவ்வளவு இரக்கம் உண்டாயிற்று.

அதே சமயத்தில், " ஆகா! யுத்தவெறி நல்ல மனிதர்களைக் கூட எத்தகைய மிருகங்களாக மாற்றி விடுகிறது!" என்று முணுமுணுத்தது அவனது வாய்.








ROBINSON'S
PEARL
BARLEY
சிறந்தது
சகல உபயோகங்களுக்கும்
கஞ்சி, கூழ், பாயசம், கறி, பார்லித் தண்ணீர் இவைகளுக்கு புதிய ருசிகரமான சத்துள்ள பேர்ல் பார்லி மிகச் சிறந்தது
இப்போது எங்கும் கிடைக்கும்
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
தபால் பெட்டி 664, கல்கத்தா-1.



வெகுநன்றாக பற்சிதைவைத் தவிர்க்க உதவுகிறது!
COLGATE
RIBBON DENTAL CREAM
ஒளிவீசும் புன்னகைகள் கோல்கேட் புன்னகைகள்



"என்ன கமலா, இன்னும் சமையல் ஆக வில்லையா?" என்று கேட்டவண்ணம் அவசரமாக உள்ளே நுழைந்தான் ராகவன். அங்கு கமலா, முகம் சிவக்கக் கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்த வண்ணம் இருந்ததைக் கண்டு திடுக்கிட்டான்.

"என்ன கமலா, ஏன் அழுகிறாய்? உன் உடம்புக்கு என்ன?" என்று பரிவுடன் கேட்டான்.

"என் உடம்புக்கு ஒன்றுமில்லை. மனசுதான் சரியாக இல்லை" என்றாள் கமலா கண்களைத் துடைத்தவாறு.

"நீ ஏன் இப்பொழுது அழுதாய் என்பது எனக்குத் தெரிந்து விட்டது" என்று செல்லமாய்க் கூறிய வண்ணம் அவளது கையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய புகைப் படத்தைப் பறித்தான்.

அந்தப் புகைப்படம் பதினாறு வயது நிரம்பிய ஒரு அழகிய பையனின் படம். சுருள் சுருளான மயிரும் அழகிய சிரித்த முகமுமாய் விளங்கினான் அந்தப் புகைப் படத்தில் ராம் கோபால்.

படத்தையே இரண்டு மூன்று நிமிஷங்கள் பார்த்துவிட்டுப் பின் அதைத் தன் சட்டைப் பையில் வைத்த வண்ணம், "கமலா! இது என்னிடமே இருக்கட்டும். நீ வைத்திருந்தால் அடிக்கடி பார்த்து மனசை அலட்டிக் கொள்கிறாய்" என்றான் ராகவன்.

"அதை 'என்லார்ஜ்' பண்ணிக்கொண்டு வாருங்கள் என்று உங்களுக்கு நான் எத்தனை தடவை சொல்லி விட்டேன்?" என்று அன்புடன் கடிந்து கொண்டாள் கமலா.

"சரி, சரி, நீ சீக்கிரம் சமையல் செய், நான் இன்று ஆபீசுக்குச் சீக்கிரம் போக வேண்டும்" என்று கூறியபடி தன் அறைக்குச் சென்றான் ராகவன்.


சாம்பாருக்குத் தொட்டுக் கொள்வதற்குத் தோகையலை அவசர அவசரமாக அரைக்கத் தொடங்கினாள் கமலா. அதே சமயத்தில் அவளது மனமும் பின்னோக்கிச் சென்றது.

★

ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கொரு பையனுமாய், கமலாவும், ராம்கோபாலும் வைத்திய ராமய்யருக்குப் பிறந்தார்கள். ஆனால் ஆசைக்குக் கமலா பிறந்தாளே ஒழிய ராம்கோபாலுக்கு ஆஸ்தி வைக்கும்படியாக வைத்திய ராமய்யர் அவ்வளவு பெரிய பணக்காரர் ஒன்றும் இல்லை. ஏதோ நாலு வயிற்றுக்குப் போதுமான அளவு சம்பாதித்து வந்தார். கமலாவும் அவள் தம்பி ராம்கோபாலும் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் இருவரும் தங்கள் தகப்பனாரின் நிலையை அறிந்து அவருக்கு ஒன்றும் தொந்தரவு தரவில்லை.

கமலாவுக்குப் பதினெட்டு வயதாயிற்று. அவளுக்கு விவாகம் செய்ய வேண்டும் என்பதையே மறந்திருந்த வைத்திய ராமய்யருக்கு ஒருநாள் அவர் மனைவி "ஏன்னா! கமலாவுக்கு என்ன வயசாச்சு தெரியுமோல்லியோ? அவளை ஒருவனுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று எண்ணமா, அல்லது எப்பொழுதும் உங்களிடமே அருமைப் பெண்ணை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமா?" எனக் கேட்டாள்.

"காலம் வந்தால் எவனாகிலும் ஒருவன் வந்து கொக்கைப்போல் கொத்திக் கொண்டு போகிறான். அதற்குள் நீயேன் அலட்டிக்



மாமா (ஊருக்குப் போகும்பொழுது அம்பியிடம் ஒரு ரூபாய் நோட்டையும் ரூபாய் நாணயத்தையும் காட்டி):—அம்பி, உனக்கு இந்தப் பணம் வேண்டுமா? அல்லது இந்தக் காகிதம் வேண்டுமா?

அம்பி (நாலு வயது):—மாமா, அந்தக் காசைக் காகிதத்தில் வைத்து மடித்துக் கொடுங்கள், மாமா!

கொள்கிறாய்'' என்று சமாதானம் சொல்வதாக மேலுக்குச் சொன்னாரே ஒழிய அவருடைய மனமும் எப்படியாவது இந்த வருஷத்துக்குள் கமலாவின் கல்யாணத்தை நடத்திவிடவேண்டும் என்று தீர்மானித்தது.

ஆனால் எல்லாம் நினைத்தபடியே நடந்து விடுகிறதா! வருஷங்கள்தான் உருண்டனவே அன்றி, கமலாவுக்குக் கல்யாணம் ஆனபாடில்லை. ஒரு வரன்கூட பொருந்தவில்லை.

கமலாவுக்கு வயது இருபது ஆகிவிட்டது. ஊராரின் வாயில் அகப்பட்டுத் திண்டாடினாள்; பாவம் கமலா!

ஒரு சனிக்கிழமை. அன்று கமலா தன் தம்பி ராம்கோபாலுடன் நவக்கிரகங்களைச் சுற்றிவரக் கோவிலுக்குச் சென்றாள். பக்கத்து வீட்டுச் சுப்புப் பாட்டியும் சேஷிப் பாட்டியும் இராமாயணம் கேட்க அங்கு வந்தார்கள். அப்பொழுது சுப்புப் பாட்டி, ''ஏண்டி சேஷி, பார்த்தாயோல்லியோ அந்தப் பெண் கமலாவை? குதிரை யாட்டமா வளர்ந்துட்டா! ஒரு வரனாவது சேர்ந்து வரல்லே, பாவம்! அவ அப்பாதான் என்ன செய்வார்? பார்க்காத வரனில்லே; போகாத ஊரில்லே'' என்றாள்.

''இந்தப் பெண் அதிர்ஷ்டம் அப்படியிருக்கு'' என்றாள் சேஷிப் பாட்டி. இதைக் கேட்டவுடன் கமலாவுக்கு அப்படியே அவமானத்தால் எண் சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகி விட்டாற்போல் தோன்றியது. ஆனால் அச்சமயத்தில் கடவுளைத்தான் பிரார்த்திக்க முடிந்ததே ஒழிய வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை அவளால்.

எத்தனையோ வரன்கள் பார்த்தும் ஒன்றும் பொருந்தி வராததைக் கண்ட வைத்தியராமய்யருக்குக் கமலாவின் மேல் ஒரு காரணமறியாத வெறுப்பு தோன்றியது. அவள் என்ன செய்தாலும் அதில் தப்பு கண்டு பிடிப்பதும், அவளைத் திட்டுவதுமாக இருந்தார்.

கடைசியில் தலைமயிர் நரைத்த நாற்பது வயதுள்ள ஒரு வரன் பொருந்தியது. அவருக்கு மூத்தாள் கொடுத்து விட்டுப் போன இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு பன்னிரண்டு வயது நிரம்பிய பையனும் இருந்தனர். தாம் பெண்ணைப் பார்க்க வேண்டாம், நிச்சயமாக அவளையே பண்ணிக் கொள்ளுகிறேன் என்றும் சொல்லி விட்டார். அப்படியாவது கமலா வீட்டை விட்டுப் போனால் போதுமென்று இருந்த வைத்தியராமய்யருக்கு அந்த வார்த்தை தேவாமிருதம்போல் இருந்தது.

தனக்கு வரப்போகும் கணவனின் வயது நாற்பது. அதோடு அவரிடம் மூத்தாள் விட்டுப்போன குழந்தைகள் மூன்று என்பதையெல்லாம் நினைத்த கமலாவுக்கு உலகமே சுழல்வதுபோல் தோன்றியது. எங்காவது தனியாகச் சென்று கதறி அழ வேண்டும் போலவும் அவளுக்குத் தோன்றியது.

ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் திடீரென்று எழுந்தாள். நேராகப் புழக்கடைக்குச் சென்றாள். அங்குள்ள ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டு நெஞ்சு வெடிக்கச் சற்று நேரம் அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது ''கமலா'' என்றழைத்தபடியே அங்கு வந்தான் ராம்கோபால். அங்கு கமலா அழுது கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவனுக்கு ஒருவாறு விஷயம் விளங்கி விட்டது. அவள் அழுவதைப் பார்த்ததும் அவனுக்கும் அழுகை வந்து விட்டது. ''கமலா'' என்றான். மறுபடியும் விம்மியபடியே ''உனக்கு இஷ்டமில்லா விட்டால் நீ போய் அப்பாவிடம் சொல்லி விடேன்'' என்றான் ராம்கோபால். அவன் அறியாமையைக் கண்டு பரிதாபப்பட்டாள் கமலா. ஆனால் ''கோபு, நீ ஏன் அழுகிறாய்! என் விதி. நான் கஷ்டப்பட்டுத்தான் ஆகவேண்டும். என்ன செய்வது?'' என்றாள்.

மறு நிமிஷம் ராம்கோபால் ''கமலா, இந்தக் கல்யாணம் நிச்சயம் நடக்காது. நான் பார்த்து விடுகிறேன்'' என்று கூறியவண்ணம் 'சடக்'கென்று உள்ளே ஓடி விட்டான். ''ஏய், கோபு! அப்பாவிடம் போய் ஒன்றும் உளறி வைத்து விடாதே!'' என்று கூறிக் கொண்டே அவன் பின்னாலேயே ஓடினாள் கமலா. ஆனால் அவன் அப்பாவிடம் போய் ஒன்றும் சொல்லவில்லை.

★

மறுநாள் கலியாண வீடே அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. வைத்தியராமய்யர் உள்ளே போவதும் வெளியே வருவதும், அங்குள்ள வேலைக்காரர்களை

அதட்டிய வண்ணமுமாயிருந்தார். "மாமா! மாமா!" என்று மூச்சு வாங்கிய வண்ணம் ஓடி வந்து அவர் எதிரே நின்றான் ராம்கோபாலின் நண்பன் ராமு. "என்னடா, என்ன?" என்றார். "ராம்கோபாலின் மேல் கார் ஒன்று ஏறிவிட்டது" என்றான். 'என்ன!' என்று கேட்டு அப்படியே திக்பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டார் வைத்தியராமய்யர்.

ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் அவர் தம்மைச் சமாளித்துக் கொண்டு விபத்து நடந்த இடத்துக்கு விரைந்தார். அங்கு ராம்கோபால் நல்ல அடிபட்டு மூர்ச்சையாகித் தரையில் விழுந்து கிடந்தான். அவனைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது.

அங்கு பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்தனர். "கார் மிகவும் வேகமாய்ப்போய்க் கொண்டிருந்த போது குறுக்கே ஓடினான். அதற்குப் பாவம் டிரைவர் என்ன செய்வான்?" என்றார் ஒருவர். "ஆனாலும் இவ்வளவு வேகமாகக் கார் ஓட்டக் கூடாது" என்றார் மற்றொருவர். இப்படிப் பலர் பல்வித மாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காருக்குச் சொந்தக்காரர் தம் காரிலேயே அவனை ஏற்றிக் கொண்டு பிரபல பிரைவேட் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். அவர் செலவிலேயே சிறந்த சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார். இதற்குள் வீட்டில் கோபு, எழுதி வைத்திருந்த கடிதத்தைப் படித்த கமலா அதை உடனே ஒளித்து வைத்தாள். பதினைந்து நாட்களில் கோபு பரிபூரண குணமடைந்து வீட்டுக்குத் திரும்பினான்.

கல்யாண தினத்தன்று இத்தகைய துயரம் தரும் செய்தி வந்ததானது ஒரு அபசகுனமெனக் கருதிய பிள்ளை வீட்டினர் கல்யாணம் செய்து கொள்ள மறுத்தனர். கமலாவின் நிலை இன்னும் இரங்கத் தக்கதாகி விட்டது.

வைத்தியராமய்யர், "மூதேவி! உன் அதிர்ஷ்டம் தான் என்னடி?" என்று வசை மாரி பொழிய ஆரம்பித்துவிட்டார். ஆயினும், அவ்வளவு தியரத்தையும் தாங்கும் சக்தி, அவள் உள்ளத்தில் பதிந்திருந்த ரகசியம் தான்,—அதாவது தம்பி கோபு எழுதிய கடிதம் தான்—, கொடுத்தது.

★

மாதங்கள் உருண்டோடின. ஒரு நாள் காலை வைத்தியராமய்யர் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். "ஸார்" என்றழைத்த படியே உள்ளே நுழைந்தார் ராகவன். அவர் அப்பொழுது தான் வைத்திராமய்யருடைய காரியாலயத்துக்கு மானேஜராக மாற்றப் பட்டு வந்திருந்தார்.

மானேஜரின் திடும் பிரவேசம் வைத்திய ராமய்யரைத் திகைக்கும்படி செய்து விட்டது. "ஒன்றுமில்லை, ஸார்! உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றார். இருவரும் வெகுநேரம் உலக விஷயங்களைப் பற்றிச் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். முடிவில் ராகவன் "இந்த ஹோட்டல் சாப்பாடு எனக்குப் போதும் போதும் என்றாகி விட்டது" என்றார்.

"அதற்கென்ன ஒரு வீட்டைப் பார்த்துக் கொண்டு ஊரிலிருந்து அழைத்து வந்து விட்டால் போகிறது" என்றார் வைத்திய ராமய்யர்.

"ஊரைத்தான் அழைத்து வரவேண்டும்" என்றார் ராகவன் ஒரு புன்சிரிப்போடு.

ஒன்றும் புரியாமல் விழித்தார் வைத்திய ராமய்யர். பின்னர்தான் "எனக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லை, ஸார்" என்று கூறினார் ராகவன்.

"என்ன! இன்னுமா உங்களுக்குக் கலியாணம் ஆகவில்லை" என்று ஆச்சரியத்துடன் வினவினார் வைத்தியராமய்யர்.

பின்னர் ராகவன் தன் கதையைக் கூறலானார்: "ஸார்! எனக்கு உறவினர் ஒருவரும் கிடையாது. என் பெற்றோர்கள் எனக்கு நினைவு தெரியுமுன்பே இவ்வுலகத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டார்கள். பின்னர் என் அத்தையின் உதவியில் மெட்ரிகுலேஷன் வரை படித்தேன். பிறகு உபகாரச் சம்பளம் பெற்றுப் பட்டமும் பெற்றேன். நான் உத்தியோகம் செய்வதற்குள் அத்தையும் கண்ணை மூடி விட்டாள். பின்னர் என் சொந்த முயற்சியில் வாழ்க்கையில் இவ்வளவு தூரம் வந்து விட்டேன். அது முதல் ஹோட்டல் சாப்பாடு தான்" என்று தம் கதையைக் கூறி முடித்தார் ராகவன்.

"ஸார், அப்படியானால் உங்கள் ஜாதகம் இருக்கிறதா?" என்று கேட்டார் எடுத்த எடுப்பிலே வைத்தியராமய்யர்.


"எனக்கு இப்பொழுது என் வயதே சரியாகத் தெரியாது என்றால் ஜாதகம் என்னிடம் எப்படியிருக்கும்?" என்றார் ராகவன்.

"ஸார், எனக்கு ஒரு பெண் இருக்கிறாள். நீங்கள் அவளைப் பாருங்கள், உங்களுக்குப் பிடித்திருந்தால்......" என்று இழுத்தார்.



"ரயில் விபத்து ஏற்பட்டால் முதல் வண்டியில் பிரயாணம் செய்கிறவர்களுக்குத்தான் அபாயம் மிகவும் அதிகம்!"

"அப்படியானால் அந்த முதல் வண்டியை எப்பொழுதுமே ஏன் எடுத்து விடக்கூடாது?"



கும்பகோணத்துக்கு அடுத்துள்ள சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதர் ஆலயத்தில் வெகு நாட்களாகக் கோயில் யானை இல்லாதது பெருங் குறையாக இருந்தது. அக்குறையைப் பொறையார் சந்தி விலாஸ் பஸ் சர்வீஸின் சொந்தக்காரரான ஸ்ரீ வீரப்பப்பிள்ளை நிவர்த்தி செய்திருக்கிறார். குமரப்பெருமானுக்கு ஸ்ரீ வீரப்பப்பிள்ளை காணிக்கையாக அளித்த யானையையும், கோவில் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீ ராமாமிர்த உடையாரையும், ஸ்ரீ வீரப்பப் பிள்ளையின் குடும்பத்தாரையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

வைத்தியராமையருரைப் பார்த்தது முதல் ராகவனுக்கு அவரிடத்தில் ஒரு மதிப்பும், மரியாதையும் ஏற்பட்டிருந்தது. ஆகையால் அவர் கூறியதை மறுக்காமல் உடனே ஒப்புக் கொண்டார்.

கமலாவைப் பார்த்ததும் அவருக்கு மிகவும் பிடித்து விட்டது. உடனே தம் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார். வைத்திராமய்யரின் ஆனந்தத்திற்குக் கேட்கவும்வேண்டுமா? மறு முகூர்த்தத்திலேயே கல்யாணம் விமரிசையாக நடந்தேறியது. இப்பொழுது கமலாவின் அதிர்ஷ்டத்தைப் புகழாதவர் ஒருவருமே இல்லை யெனக் கூறலாம்.

பின்னர், கமலாவின் வாழ்க்கை வளர்மதி போல் வளர்ந்து வந்தது.

★

"கமலா இன்னுமா தோசையலை அரைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கூறிய வண்ணம் அங்கு வந்தான் ராகவன்.

"இதோ வந்து விட்டேன்" என்று தோசையலை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு வந்து அவசர அவசரமாக ராகவனுக்குப் பறிமாறினாள். பின்னர் ராகவன் ஆபீஸுக்குச் சென்றதும் தன் பெட்டியின் அடியில் இருந்த கடிதத்தை எடுத்துப் படிக்கலானாள்.

அக்கா,

உனக்கு இந்தக் கலியாணத்தில் சிறிதும் இஷ்டமில்லை என்று அறிந்தேன் ஆனால் அப்பா இதை நிறுத்தமாட்டார். ஆதலால் இதை எப்படியாவது நிறுத்தவேண்டுமென்று என் உயிரைக் கொடுக்கக் கூடச் சித்தமாயிருக்கிறேன். உனக்கு என் மனமார்ந்த அன்பு.

இங்ஙனம்
ராம் கோபால்

தனக்காக, தன் வாழ்விற்காக உயிரைக் கொடுத்துத் தியாகம் செய்யத் துணிந்த தம்பி ராம் கோபாலைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவள் நெஞ்சம் இளகிவிடும். அவனுடைய அன்பு ததும்பும் முகத்தைப் போட்டோவில் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருப்பாள் கமலா! இன்றும் அவன் நினைவு வந்து, கமலா போட்டோவைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

இப்படி எத்தனை நாழிகை உட்கார்ந்திருந்தாளோ, அவளுக்குத் தெரியாது. 'போஸ்ட்' என்று குரல் வந்ததும் திடுக்கிட்டுத் திரும்பினாள். தபால்காரன் ஒரு கார்டை எறிந்து விட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

கடிதத்தை ஆவலுடன் எடுத்துப் படிக்கத் தொடங்கினாள் கமலா.

"அன்பார்ந்த அக்காவுக்கு,

நமஸ்காரம். நான் நாளை அங்கே வருகிறேன். அத்திம்பேரிடம் சொல்லவும்.

கோபு."

இந்தக் கடிதத்தைப் படித்ததும் அவள் அடைந்த ஆனந்தம் கொஞ்சநஞ்சமல்ல. 'அவனை நினைத்ததற்கும், அவன் புறப்பட்டு வருவதற்கும் எவ்வளவு சரியாக இருக்கிறது!' என்று எண்ணி அவள் வியந்தாள்.

முதன்மை ஸ்தானம்—நம் புராதன கௌரவம்



இந்தியா புராதன நாட்களிலே மிகவும் புகழ்பெற்றதற்கு, இந்நாட்டின் திறமையும் கற்பனையும் நிறைந்த தொழிலாளிகளும், தைரியமும் சாமர்த்தியமும் வாய்ந்த மாலுமிகளும், புத்தி கூர்மையான கணித நிபுணர்களும் தத்துவ சாஸ்திரிகளும் முக்கியமான காரணம். உயரிய நாகரீகத்தின் உயிர்ச்சின்னமாக விளங்கின சமஸ்கிருத இலக்கியமும், விஞ்ஞானமும் இவ் உயரிய கலாசாரப் பண்பாடுகள் சுற்றியுள்ள நாடுகளுக்கெல்லாம் பரவியது இயற்கையே. இந்நாட்டின் தத்துவ ஞானம் கலை, விஞ்ஞானம் இவை யாவும் புத்துயிர் பெற்று உன்னதமாக விளங்கின. இந்தியத் தொழிலாளர்கள், சிற்பிகள் இவர்களின் சக்திக்கும் விசேஷத்திறமைக்கும் பரோபுதூர், பிரமபனம், அகர்தாம் முதலிய இடங்களில் எழுப்பப்பட்ட உன்னதமான ஞாபகஸ்தம்பங்களே தக்க சான்றாகும்.

தற்சமயம் நம் நாட்டின் நன் நோக்கங்களும் பண்பாடுகளும் உலகத்தின் பல பாகங்களில் பரவி வருகின்றன. தொழில் துறையில் மிகப் பெரிய திட்டங்கள் உலகத்தின் கவனத்தைப் பெற்று நமக்கு ஏராளமான புகழையும் அளித்து வருகின்றன. இவ்விந்திய மறுமலர்ச்சியில் டாடா எஃகு ஓர் இன்றியமையாத பொருள்.

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்

TN. 3015

பாசம் வென்றது

இதயவாசி

"சந்திரா, சந்திரா" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த மூர்த்தி ஆபீஸ் உடைகளைக் கூடக் களைய மனமில்லாது சோபாவில் சாய்ந்தான். சோர்வு அவன் உடல் முழுவதும் பரவி அவனை இறுத்தியது.

ஆவி பறக்கும் காப்பியையும், டிபனையும் மேஜை மேல் வைத்த சந்திரா தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். கடைந்து எடுக்கப் பட்ட தந்தப் பதுமை போலிருந்த அவள் உடலில் நகை என்பது பெயரளவுக்குக் கூட இல்லை. சாதாரண வாயில் புடவையே அவள் கட்டியிருந்தாலும் அப்பொழுது அழகு ராணியாகத் திகழ்ந்தாள். அவளுடைய நயனங்களை இலேசான சோகத் திரை ஒன்று போர்த்தியிருந்தது. கண் கொட்டாமல் சந்திராவைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டான் மூர்த்தி.

"என்ன சந்திரா, உன் வேலையெல்லாம் முடிந்து விட்டதா?" என்று கேட்ட மூர்த்தியைப் பார்த்துப் புன்னகை செய்தாள் அவள்.

"என் வேலைக்கு முடிவு ஏது. அண்ணா! இப்பொழுது கூட ஒரு அவசர வேலையை நிறுத்தி வைத்து விட்டு உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்" என்றாள்.

"எனக்காகவா! ஏன் என்ன விசேஷம்!" என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் மூர்த்தி.

"ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லுகிறேன். அதற்குப் பரிசு என்ன கொடுப்பீர்கள்!"

"எது வேண்டுமானாலும் தருகிறேன். என்னிடம் இருக்கும் பொருள்கள் எல்லாம் உன்னுடையதுதானே!" என்று கூறி அவன் சந்திராவை அன்பு ததும்பப் பார்த்தான்.

"இன்று பம்பாயிலிருந்து கடிதம் வந்திருக்கிறது" என்றாள் சந்திரா. அவள் முகத்தில் முறுவல் மின்னி மறைந்தது.

"உண்மையாகத்தான் சொல்லுகிறாயா! அல்லது விளையாடுகிறாயா!"

"நான் எதற்காக அண்ணா உங்களுடன் விளையாட வேண்டும்! இன்னும் இரண்டு நாட்களில் மன்னி வந்து விடுவாள்" என்று கூறிச் சந்திரா அவனை ஆவல் ததும்பப் பார்த்தாள். அப்பொழுது மூர்த்தியின் முகத்தில் கூடச் சிறு மலர்ச்சி தோன்றியது.

"எங்கே கடிதத்தைக் கொடு, பார்க்கலாம்" என்று ஆவலுடன் கையை நீட்டினான் அவன்.

"அடேயப்பா! என்ன அவசரம்!" என்று கேலியாகக் கூறிய சந்திரா கடிதத்தை அவனிடம் நீட்டினாள். பசி, சோர்வு எல்லாம் அவனிடமிருந்து பறந்து ஓடின. ஆர்வத்துடன் மனைவியின் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

"அன்புள்ள சந்திராவுக்கு.

ரேவதி எழுதிக் கொண்டது. இதுவரை நீ எழுதிய கடிதங்களுக்குப் பதில் போடாததற்கு மன்னித்துவிடு. அண்ணா சௌக்கியமாக இருக்கிறாரா? குழந்தை நன்றாக விளையாடுகிறான். சந்திரா! இப்பொழுதுதான் நான் என் தவறை உணர்ந்தேன். இங்கே நடந்த ஒரு சம்பவம் என் மனத்திலிருக்கும் அழுக்கை அகற்றிச் சுத்தப்படுத்திவிட்டது. செய்த தவறை நினைந்து வருந்திக் கொண்டிருக்கும் பொழுது உன் கடிதமும் கிடைத்தது. எனக்காக நீ டில்லிக்குப் போக வேண்டாம். நான் இரண்டு நாளில் அங்கு புறப்பட்டு வந்து விடுகிறேன். மற்ற விஷயங்களை நேரில் பேசிக் கொள்ளலாம். இப்படிக்கு,

ரேவதி"

ஒரே மூச்சில் கடிதத்திலுள்ள விஷயங்களைப் படித்து முடித்தான் மூர்த்தி.

"சந்திரா, நீ டில்லிக்குப் போகப் போகிறாயா! என்னிடம் சொல்லவே யில்லையே!" என்றான் மூர்த்தி சிறிது ஆச்சரியத்துடன்.

"ஆமாம், அண்ணா! டில்லியிலிருக்கும் ஆஸ்பத்திரிக்கு ஒரு டாக்டர் தேவை என்று தினப் பத்திரிகையில் பார்த்தேன். முயற்சி செய்ததில் வேலை கிடைத்து விடும் போலிருக்கிறது. நாளை இரவு வண்டிக்குப் புறப்படலா மென்று இருக்கிறேன்" என்று கூறிய சந்திராவின் கண்கள் கலங்கின.

"யாரைக் கேட்டு இந்த வேலை செய்தாய், சந்திரா! உன்னைத் தனியாக டில்லிக்கு அனுப்பி விட்டு நான் இங்கு இருக்கவா!" என்றான் மூர்த்தி. அவன் குரலில் வருத்தமும் கடுமையும் கலந்து ஒலித்தன.

இலேசாகச் சிரித்தபடியே சந்திரா "எப்பொழுதும் தங்கை உங்களுடன் இருக்க முடியுமா,



தர்மகர்த்தா:—இந்தக் கோவிலில் எந்தக் காரியமானாலும் நான்தான் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நான் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. உற்சவமா, நான்தான் கவனிக்கிறேன். அபிஷேகமா, நான்தான் ஏற்பாடு செய்கிறேன். ஸ்வாமி புறப்பாடா, நான் கவனித்தால்தான் உண்டு.

நண்பர்:—தம்பட்டம்கூட நீரே அடித்துக் கோஷம் இட்டுக் கொள்கிறீர் என்று தெரிகிறது!

அண்ணா! மன்னி வந்தால் என் பிரிவு உங்களை அதிகம் பாதிக்காது'' என்று ஆறுதல் கூறினாள்.

''அவள் இங்கே வரவும் வேண்டாம். அவளுக்காக நீ டில்லிக்குப் போகவும் வேண்டாம். நீ செய்யும் இந்தக் காரியங்கள் எதுவும் எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.''

''என்ன அண்ணா! நீங்கள் சின்னக் குழந்தையா, பிடிவாதம் செய்ய? நான் டில்லிக்குப் போனாலும் அங்கேயே இருந்துவிட மாட்டேன். அடிக்கடி வருவேன். நீங்களும் மன்னியும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து நானும் சந்தோஷம் அடைவேன். சரி, எனக்கு இப்பொழுது வெளியில் போக வேண்டும். வருவதற்கு நேரமானாலும் ஆகலாம்'' என்று கூறிப் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டு எழுந்தாள் சந்திரா. அவள் போவதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தியின் மனம் வருந்தியது. மனைவிக்கும், சந்திராவுக்கு மிடையே பகையை வளர்த்துப் பிளவை உண்டாக்கிய அந்தச் சம்பவம் அவன் மனக் கண்ணின் எதிரே நிழலாடியது. சிந்தனை அலைகள் பொங்கி ஆரவாரமிட்டுக் கொக்கரித்தன.

* * *

மூர்த்தியும், சந்திராவும் தாயற்ற குழந்தைகள். முகம் வாடாது வளர்த்து வந்தார் நடராஜ அய்யர். வயது வந்ததும் நல்ல வரனாகப் பார்த்து இருவருக்கும் ஒரே பந்தலில் மண முடித்தார். ரேவதி மூர்த்தியின் மனைவி ஆனாள். ரேவதியின் சகோதரன் முகுந்தன் சந்திராவின் கணவன் ஆனான். மணம் முடிந்ததும் சந்திராவை மேலும் படிக்கச் சொல்லிவிட்டு முகுந்தன் மேல் படிப்பின் பொருட்டு அமெரிக்கா சென்றான். கணவனின் உத்தரவுப்படி சந்திரா மெடிக்கல் காலேஜில் சேர்ந்து படித்தாள். இரண்டு வருடம் சலனமின்றி ஓடி மறைந்தது.

வாழ்க்கை விதியின் விளையாட்டுப் பொம்மை தானே! முகுந்தன் நினைவிலே இன்பம் கண்டு கொண்டிருந்த சந்திராவின் தலையில் பேரடி விழுந்தது. மூன்று நாள் விஷ ஜுரத்திற்கு அவன் பலியாகி விட்டான் என்பதை அறிந்தபொழுது சந்திரா துடி துடித்தாள். அரும்பு மலராமலே கருகி விட்டது. அதிர்ச்சி தாங்காத நடராஜய்யர் மூர்த்தியினிடம் சந்திராவை ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடினார். சந்திராவின் துரதிர்ஷ்டத்தினால்தான் முகுந்தன் இறந்துவிட்டான் என்ற எண்ணம் ரேவதியின் பிறந்தகத்துக்காரர்கள் மனத்தில் குடி கொண்டது.

கணவனின் விருப்பப்படி டாக்டர் என்ற பட்டம் பெற்றாள் சந்திரா. படிப்பு முடிந்த பின் அண்ணனின் உதவியில் வீட்டிலேயே பிராக்டிஸ் செய்ய ஆரம்பித்தாள். மூர்த்தி சந்திராவிடம் உயிரையே வைத்திருந்தான். அவளுக்கு வேண்டிய சௌகரியங்களை வெகு அக்கறையுடன் கவனித்து வந்தான். சந்திராவுக்கு நல்ல பெயரும் புகழும் கிடைத்தது. அவளுக்குக் கைராசி இருப்பதாகக் கூறிக்கொண்டு பல மனிதர்கள் வீடு தேடி வந்தனர். சந்திரா தன் துயரத்தை ஓரளவு மறக்கும்படி செய்தது அவள் தொழில்!

ஆரம்பத்தில் ரேவதியும் சந்திராவிடம் இரக்கமும் அன்பும் கொண்டிருந்தாள். ஆயினும் அது நாளடைவில் வெறுப்பாக மாறியதில் வியப்பு எதுவுமில்லை. பம்பரம் சுற்றுவது போலச் சுழலுவது மனித மனத்தின் குணமல்லவா! மூர்த்தி தன்னைக் கவனியாது சந்திராவையே கவனிப்பதாக நினைத்துக் கொண்டாள். அவளுடைய துரதிர்ஷ்டத்தினால் தன் கணவனுக்கும் ஏதாவது தீங்கு வந்து விடுமோ என்று பயந்தாள். சந்திராவுக்கு இருந்த வேலைத் தொந்தரவினால் மன்னியுடன் பேசக்கூட நேரம் கிடைக்காது. நாட்கள் தேய்ந்து ஐந்து வருடங்களை விழுங்கி ஏப்பமிட்டது.



அந்தக் குடும்பத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தக் செய்ய ரேவதி கர்ப்பமானாள். எல்லையற்ற ஆனந்தத்துக்கிடையே பிள்ளைக் குழந்தை பிறந்தது. எத்தனையோ நாட்களுக்குப் பிறகு அருமையாகப் பிறந்த அந்தக் குழந்தைக்கு ரவியென்று பெயரிட்டு மகிழ்ந்தனர். குழந்தையின் மேல் அதிக காற்று படக் கூடச் சம்மதிக்க மாட்டாள் ரேவதி. அத்தனை வேலைகளின் மத்தியிலும் சந்திரா குழந்தையுடன் கொஞ்சி விளையாடுவாள். இன்பமாகச் சென்று கொண்டிருந்தவாழ்க்கையில் புயல் வீசியது.

ஒரு நாள் காலை. எழுந்திருக்கும்போது

குழந்தையின் உடம்பு லேசாகச் சுட்டது. சோர்ந்து படுத்திருந்த குழந்தையைக் கண்டு பதறிப் போய் விட்டாள். ரேவதி உடம்பைப் பரீட்சை செய்து மருந்தைக் கொடுத்து விட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள் சந்திரா. பகல் ஒரு மணிக்குத் திரும்பிய சந்திரா குழந்தையின் நிலை கண்டு திடுக்கிட்டாள். படுக்கையில் குழந்தை புரண்டு கொண்டிருந்தது. கவனித்துப் பார்த்த சந்திராவுக்கு அது கொடிய விஷஜுரம் என்பது தெளிவாகத் தெரிந்தது. எந்த மருந்து கொடுத்தாலும் அசைந்து கொடுக்காத வியாதி என்பதும் அவளுக்கு நன்றாகத் தெரியும்.

சந்திராவின் மௌனத்தைக் கண்ட ரேவதி, "என்ன சந்திரா! குழந்தைக்கு ஜுரம் தணியவே யில்லையே! ஏன் இப்படிப் புரளுகிறான்!" என்றாள்.

"ஜுரம் ரொம்ப அதிகமாயிருக்கிறது, மன்னி. தூக்கத்துக்குத்தான் மருந்து கொடுக்க வேண்டும்" என்று கூறிய சந்திரா குழந்தைக்கு மருந்தைக் கொடுத்தாள். புரளுவது நின்று தூங்க ஆரம்பித்தது குழந்தை.

கண்களை மூடிப் படுத்துக் கிடக்கும் குழந்தையைப் பார்த்து மிகவும் பயந்தாள் ரேவதி. மூர்த்தி வந்ததும் வேறு டாக்டரை அழைத்து வருமாறு தொந்தரவு செய்தாள். அவள் சொன்னதைக் காதில் வாங்காத மூர்த்தி நேரே சந்திராவிடம் வந்தான். ஐஸ் பைகளைக் குழந்தையின் தலையில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள்.

"ஜுரம் ரொம்ப அதிகமா யிருக்கிறதா, சந்திரா!" என்று கேட்டான் மூர்த்தி கவலையுடன்.

"ஆமாம் அண்ணா, இது விஷ ஜுரம். மருந்து அதிகம் வேலை செய்ய முடியாது. நாளை ஒரு நாள் தள்ளிவிட்டால் பிறகு பயமில்லை."

"டாக்டர் ராகவனை வேண்டுமானால் அழைத்து வந்து பார்க்கட்டுமா!"

"அழைத்து வரலாம், அண்ணா! அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை."

மூர்த்தி ராகவனை அழைத்து வந்தான். டாக்டர் ராகவன் வந்து பார்த்துச் சந்திரா சொன்னதையே சொல்லி விட்டுப் போனார். மூர்த்தி சிலையாக உட்கார்ந்து விட்டான். சந்திராவும் ரேவதியும் செய்யும் வகை தெரியாது தவித்தனர். இந் நிலையில் எல்லோரையும் விட்டுப் பிரிந்தான் ரவி. ரேவதி கதறினாள். குழந்தையைப் பிரிந்த துக்கம் எல்லோருக்கும் எல்லை மீறியது.

குழந்தையைப் பிரிந்த ஏக்கம் ரேவதியைப் படுக்கையில் தள்ளியது. வியாதி என்று பெயர் சொல்வதற்கு ஒன்று மில்லா விட்டாலும், வீட்டில் நடமாடக் கூடச் சக்தியற்றிருந்தாள் அவள். எத்தனைதான் உயர்ந்த மருந்துகள் கொடுத்தும் ரேவதி சிறிதும் குணமடையவில்லை. சலிப்படைந்த சந்திரா 'இடம் மாற்றினால் மன்னியின் உடம்பு தேறலாம்' என்றாள் சகோதரனிடம். அவனும் அதை ஆமோதித்தான். ஆனால் ரேவதி அதைப் பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

இதற்கிடையில் ரேவதியின் மனத்தில் ஒரு அசட்டு எண்ணம் ஊறியது. துரதிர்ஷ்டம் பிடித்த சந்திரா மருந்து கொடுத்ததினால்தான் குழந்தை இறந்து விட்டதாக நினைத்தாள். 'ஜுரத்தை வர வழைத்துக் கூடக் கொன்றிருப்பாள், பாவி!' என்று அடிக்கடி முணு முணுத்துக் கொள்வாள். சந்திராவைக் கண்டால் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்வாள். அவளாகப் பேச வந்தாலும் ரேவதி பேச மாட்டாள். நாளுக்கு நாள் அந்த அசுர எண்ணம் கப்பும் கிளையும் விட்டு வளரத் தொடங்கியது.

ஒரு நாள் இரவு மணி எட்டிருக்கும். மூர்த்தியும் ரேவதியும் மாடிஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் வெளியிலிருந்து வந்தாள் சந்திரா. அவள் வருகையை அவர்கள் அறியவில்லை. உடையை மாற்றிக் கொண்டு மாடிக்கு ஏறினாள் அவள். ரேவதியின் ஆத்திரமான பேச்சு சந்திராவை மாடிப் படியிலேயே நிற்கும்படிச் செய்து விட்டது.

"சீக்கிரமாக வந்து அந்தக் குழந்தையையும் உங்கள் தங்கைக்குப் பலியாக்க வேண்டுமா!" என்ற ரேவதியின் ஆவேச மொழிகள் சந்திராவின் நெஞ்சைச் 'சுரீர்' என்று சுட்டது.

"என்ன சொன்னே! என் தங்கைக்குப் பலியா! நீ சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே!" என்று ஓரளவு நிதானத்துடன் பேசினான் மூர்த்தி.

"உங்களுக்கு எப்படிப் புரியும்! தனக்கு ஒன்றுமில்லை என்ற அசூயையினால் மருந்தைக் கொடுத்து என் குழந்தையைக் கொன்று விட்டாள் பாவி" என்று பிதற்றினாள் ரேவதி.

"சீ வாயை மூடு! யாரைப் பார்த்து அந்தமாதிரி சொல்லுகிறாய்! சந்திராவின் தங்கமான குணம் உனக்குத் தெரியவில்லை" என்று சீறினான் மூர்த்தி.

"எனக்குத் தெரியா விட்டால் வேண்டாம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே அதுவே போதும். அவள் இந்த ஊரிலிருந்து போனால்தான் நான் பம்பாயிலிருந்து திரும்பி வரப் போகிறேன்."

"ரேவதி, உனக்காக அவள் எங்கே போவாள்! சந்திரா எங்கும் போக முடியாது. நீ வேண்டுமானால் வராமல் இருக்கலாம்."

"என்னுடைய பிடிவாதம் உங்களுக்குத் தெரியவில்லை. வேடிக்கை என்று நினைத்திருக்கிறீர்கள்.

ஆனால் இது உண்மையாகவே நடக்கத்தான் போகிறது, பாருங்கள்!'' என்று கத்தினாள் ரேவதி.

"ஏது!'' என்றான் மூர்த்தி.

"அவள் இந்த வீட்டை விட்டுப் போனபிறகு தான் நான் இங்கே வருவது!''

"உன்னைவிட நானும் பிடிவாதக்காரன்தான்! நீ வராவிட்டால் வேண்டாம். நீயும் உன் குழந்தையுமாக அங்கேயே இருங்கள். எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும்.''

காலடி யோசை மாடிப் படியை நெருங்கியது. அவர்களுக்கு முன் சந்திரா கீழே இறங்கி விட்டாள். அவள் உள்ளம் எரிமலை போலக் குமுறியது. தலைவலி என்று சொல்லிவிட்டுப் படுக்கையில் போய்ப் படுத்தாள் சந்திரா. புகைந்து கொண்டிருந்த துக்கத்தை அழுது ஆற்றிக் கொண்டாள். மன்னியின் உடல் நலிவுக்குக் காரணம் இப்போது அவளுக்குத்தெரிந்து விட்டது.

மறுதினமே பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டாள் ரேவதி. அவள் வார்த்தைகளினால் மனம் உடைந்த மூர்த்தி அவளை ரயிலேற்றக்கூட ஸ்டேஷனுக்குச் செல்லவில்லை. அவள் போனபின் மூர்த்தி சந்திராவிடம் ரேவதியின் எண்ணத்தைக் கூறி வருந்தினான். சகோதரனைச் சமாதானப் படுத்திச் சந்திரா, ரேவதிக்குப் பல கடிதங்கள் எழுதி மனத்தை மாற்றுவதில் ஈடுபட்டாள். போடும் கடிதங்களுக்குப் பதில் வராததைக் கண்டு அவள் நெஞ்சில் வேதனை குமையும்.

ரேவதிக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாக மூர்த்திக்குத் தந்தி வந்தது. அவன் அதைச் சிறிதும் லட்சியம் செய்யாதவன்போல சாதாரணமாகவே நடந்து கொண்டான்.

அண்ணாவையும், மன்னியையும் ஒன்று சேர்க்கும் பணியில் தீவிரமாகப் பாடுபட்டாள் சந்திரா.



மாஜிஸ்டிரேட்:—நீர் இவரை நாத்னாவியால் அடித்ததில் கால் ஒடிந்து போனது உண்மையா?

குற்றவாளி:—அது கொஞ்சம் கூட எதிர்பாராமல் நடந்து விட்டது!

மாஜிஸ்டிரேட்:—ஏது?

குற்றவாளி:—அந்த நாத்காலியின் கால் ஒடிந்து போனதுதான்!

நாட்கள் ஒவ்வொன்றாக மறைந்தன. மாதங்களும் கடந்து ஒரு வருஷமாக உருவாகி மறைந்தது.

முடிவில் கையில் கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு டில்லி போகத் திட்டமிட்டாள் சந்திரா. தன் தொழில் தன்னைக் காப்பாற்றி விடும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. மன்னிக்குக் கடிதமும் எழுதி விட்டாள். மூர்த்தியிடம் மட்டும் டில்லிக்குப் போவதைப் பற்றிச் சொல்லவே யில்லை. சொன்னால் அவன் சம்மதிக்க மாட்டான் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். புறப்படுவதற்கு முதல் நாள் மூர்த்தியிடம் சொன்னால் போதும் என்று தீர்மானித்திருந்தாள் அவள். பிரிவின் துயரத்தை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் ரேவதியின் கடிதம் மூர்த்திக்கு விஷயத்தை மிகவும் தெளிவாக விளக்கி விட்டது.

*　　　*　　　*

"அண்ணா காப்பியும் பலகாரமும் அப்படியே இருக்கிறதே! ஒன்றும் சாப்பிடாமல் என்ன அப்படிப் பலமான யோசனையோ, தெரியவில்லை!'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் சந்திரா.

அப்பொழுதுதான் சுய நினைவுக்கு வந்தான் மூர்த்தி. "இவ்வளவு சீக்கிரமாகத் திரும்பி விட்டாயா!'' என்றான்.

"போன வேலை முடிந்து விட்டது. வந்து விட்டேன்'' என்றாள் சந்திரா.

"சந்திரா, நீ டில்லிக்குப் போவதை நான் விரும்பவில்லை. மன்னியின் மனம்தான் மாறி விட்டதே! நீ எதற்காக டில்லிக்குப் போக வேண்டும்!''

"அண்ணா, பெண்களின் குணம் உனக்குத் தெரியாது போலிருக்கிறது. இன்று மாறி யிருக்கும் மனம் நாளை வேறுவிதமாக மாறினாலும் மாறிவிடும். மன்னிக்கு மட்டும் நான் சொல்ல வரவில்லை. பெண்களின் இயற்கைக் குணமே அப்படித்தான். மேலும் என் தோழி கமலிக்கு நாளை புறப்பட்டு வருவதாகக் கடிதம் எழுதி விட்டேன்!'' என்ற சந்திராவை அதற்குமேல் பேசவிடாது வாசலில் காரின் ஹாரன் சப்தம் கேட்டது. யாராக இருக்கும் என்ற எண்ணத்துடன் வாசல் புறமும் திரும்பிய சந்திராவின் எதிரில் ரேவதி குழந்தையுடன் அங்கு வந்து நின்றாள்.

"சந்திரா, நீ சொல்லியது முழுவதையும் கேட்டேன். என்னை மன்னித்து விடு. நான் பழைய ரேவதியில்லை. டில்லிக்குப் போவதை மறந்து உன் துஷ்ட மருமானை ஏற்றுக் கொள்ளு'' என்று சொல்லிக்கொண்டே சந்திராவிடம் தன் அருமைக் குழந்தையை நீட்டினாள் ரேவதி.

தாவி வந்த குழந்தையை வாங்கி இறுக அணைத்துக் கொண்டாள் சந்திரா. "மன்னி'' என்று ஏதோ சொல்ல வந்த சந்திராவைத் தடை செய்தது ரேவதியின் உணர்ச்சிப் பேச்சு.

"நீ. எது சொன்னாலும் கேட்க மாட்டேன் சந்திரா! டில்லிக்குப் போவதை நீ மறந்துவிட வேண்டியதுதான். எங்கே நான் வருவதற்குள் போய் விடுவாயோ என்ற பயத்தில்தான் துணை கூட இல்லாது கடிதம் எழுதிய அன்றே புறப்பட்டு விட்டேன். இனி உன்னைப் போக விட மாட்டேன்'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினாள். பிறகு அவள் மலர்ந்த முகத்துடன் மூர்த்தியின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் மலர்ந்த புன்னகை அவள் கூறியதை ஆமோதித்தது. அவர்கள் புது வாழ்வுக்குக் கட்டியம் கூறுவதுபோல அப்போது கடிகாரத்தின் 'டாண்,டாண்' என்று மணி எட்டு அடித்தது.

கோலினஸ்

இயற்கையின் அற்புதப் பச்சை க்ளோரோபில் சேர்ந்தது

—உங்கள் பல் சுத்திகரிப்பில் இதுவரை ஏற்படாத மாபெரும் அபிவிருத்தி!

செடிகொடிகளை பசுமையுடன் வைத்திருக்கும் பொருளாகிய இயற்கையின் சிருஷ்டி க்ளோரோபில் உதவியால் நாள் முழுதும் வாய் துர்நாற்றத்தை அகற்றுங்கள்....பல் சிதைவும் சாதாரண ஈறுக்கோளாறுகளும் ஏற்படாமல் தடுங்கள்!

உங்கள் பல் பராமரிப்புக்கு இதுவரை இல்லாத முறையில் மிகப்பயன்படக்கூடிய மார்க்கம் இதுவே, சந்தேகமில்லை. க்ளோரோபில் சேர்ந்த அற்புதமான கோலினஸ் பல் சிதைவையும் நோய்க் கிருமிகளையும் நேரடியாகத் தாக்குவது மட்டுமின்றி, வாய் நாற்றத்தையும் நாள் முழுவதிலும் ஒழித்து விடுகிறது. இதற்குக் காரணம் இந்த பச்சை க்ளோரோபில் தான் — தாவரங்களை பசுமையுடன் வைத்திருக்க இயற்கையால் சிருஷ்டிக்கப்பட்ட அரிய ரசாயனப் பொருள்!

க்ளோரோபில் சேர்ந்த கோலினஸ் விசேஷ பலனளிப்பது தவிர, சிக்கனமானதும் கூட — சாயில் வாங்கும் ... அதைப் போலவே போதுமானது. பச்சை அட்டைப் பெட்டியில் எல்லா ஸ்டோர்களிலும் கிடைக்கும். இன்றே வாங்கி, தந்த சிகிச்சை முறையில் இதுவரை இல்லாத இம்மகோன்னத அபிவிருத்தியின் பயனை அடையுங்கள்!

புதிய பச்சை அட்டைப் பெட்டியை கவனியுங்கள்
ஸ்டாண்டர்ட் கோலினஸ் (மஞ்சள் லேபில்) கூட கிடைக்கும்

2000 அமெரிக்க பல் நோயாளிகள் க்ளோரோபில்லின் குணாதிசயங்களை நிரூபிக்கின்றனர்

நான்கு வருட ஆராய்ச்சி மற்றும் சுமார் 2000 அமெரிக்க பல் நோயாளிகளைக்கொண்டு நடத்தப்பட்ட மிக விரிவான சோதனைகள்.... இவைகளின் பெருத்த நிரூபணமான தகவல் என்னவெனில், க்ளோரோபிலுடன் கூடிய டென்டல் க்ரீம்:—

- வழக்கமான சகல வகை ஈறுக் கோளாறுகளையும் நீக்குகிறது.
- நாள் பூராவும் வாயில் துர்நாற்றம் ஏற்படாமல் தடுக்கிறது.
- பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை நசித்துத் தடுக்கிறது.

உங்கள் பல் டாக்டர் இச்சோதனைகளைப்பற்றி அறிவார்.... அவற்றின் பலன்களையும் ஊர்ஜிதம் செய்வார்.









'கோலினஸ்' புன்னகையில் ஆரோக்யம் ததும்புகிறது!

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜியாஃப்ரே மானர்ஸ் & கோ., லிட்., பம்பாய் 1. கிளைகள்: கல்கத்தா — மதராஸ் — டில்லி


☆ ☆ சங்கீத மண்டலம் ☆ ☆





முதல் வரிசை : 1. பி. எஸ். முருகபூபதி, 2. மாவேலிக்கரை கிருஷ்ணன் குட்டி நாயர், 3. மதராஸ் ஏ. கண்ணன். இரண்டாவது வரிசை : 1. திருச்சூர் சுப்புவய்யர், 2. நாகர்கோவில் தாணு, 3. காரைக்குடி முத்துவய்யர். மூன்றாவது வரிசை : 1. டி. கே. மூர்த்தி, 2. ஆர். நாகராஜன், 3. கோயமுத்தூர் சீனிவாசன்.







வெள்ளிவிழா வித்வத்கோஷ்டி





முதல் வரிசை : 1. மதுரை கிருஷ்ணய்யங்கார், 2. என். ராஜம் ஐயர், 3. மைலாட்டூர் ராமச்சந்திரன். இரண்டாவது வரிசை : 1. பி. சீனிவாசன், 2. வேலூர் ராமபத்திரன், 3. வி. நாகராஜன். மூன்றாவது வரிசை : 1. பாலக்காடு மகாதேவன், 2. பள்ளத்தூர் லக்ஷ்மணன், 3. மதுரை ராமசாமி.




வெள்ளிவிழா வித்வத்கோஷ்டி




முதல்வரிசை : 1. பி. கே. கிருஷ்ணமணி, 2. என். கணேசன், 3. ராமனாதபுரம் ராகவன். இரண்டாவது வரிசை : குருவாயூர் துரை, 2. உமையாள்புரம் சிவராமன், 3. கே. வி. கனகாம்புஜம். மூன்றாவது வரிசை : 1. வி. மோகினி, 2. வி. எஸ். ஜானகி, 3. ராமனாதபுரம் ஸ்ரீ வேணுகோபால் (வயலின்)





உங்களை

எப்பொழுதும்

முன்னேற்றப்

பாதையில்

வைத்திருக்கும்

அன்றாட

முதலீடு

உங்கள் பணம் மேலும் மேலும் விருத்தியாவதை நீங்கள் விரும்புகிறீர்கள் — யார்தான் விரும்பவில்லை—அதுவும் அதிகப்படி பணத்துக்கு **வருமான வரி இல்லை** என்னும்போது. ஆகவே **தேசிய சேமிப்புப் பத்திரங்களை** வாங்கிக் கொண்டே இருங்கள். இன்றைய தினம் முதலீடு செய்யப்படுகிற பிரதி 100 ரூபாயும் பன்னிரண்டு வருடங்களில் 150 ரூபாயாகிறது.

உங்கள் பத்திரங்களை முழு காலத்துக்கும் அப்படியே வைத்திருந்தீர்களானால், அவைகள் வருடத்திற்கு 4. 1/6 சத விகித வட்டி அளிக்கின்றன. உண்மையிலேயே இது உயர்ந்த வட்டிதான்.

உங்களால் முடிந்ததையெல்லாம் வாங்குங்கள்; ஆனால் காலவரையறைக்குள் பணமாக மாற்றாதீர்கள்; ஏனென்றால் அவைகள் இன்னும் நல்ல வட்டி சம்பாதித்துக் கொண்டே இருக்கின்றன— மேலும் மேலும் அவை மதிப்பில் உயர்ந்து கொண்டே போகின்றன. நீங்களும் உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரும் எவ்வளவு சிறிய சேமிப்பைக் கொண்டும் கணிசமான தொகையை நாளடைவில் காணலாம்.

5, 10, 50, 100, 500, 1,000, 5,000 ரூபாய் மதிப்புகளில் இப் பத்திரங்கள் தபால் ஆபீஸ்களில் கிடைக்கும்.

அவ்வப்பொழுது திருத்தப்பட்ட 1944-ம் வருஷத்து தேசிய சேமிப்புப் பத்திர விதிகளின் படி வழங்கப் படுகின்றன.

பன்னிரண்டு வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள்

மேற்கொண்டு செய்திகளுக்காகவும் அல்லது இந்த முதலீட்டைக் குறித்த விதிகளுக்காகவும் "கார்டன் காஸில்", சிம்லா - 3 என்னும் விலாசத்திலுள்ள நாஷனல் ஸேவிங்ஸ் கமிஷனருக்காவது உங்கள் ராஜ்யத்தின் மாகாண நாஷனல் ஸேவிங்ஸ் ஆபீஸருக்காவது தயவுசெய்து எழுதிக் கேளுங்கள்.

AC 438 TM

சிவப்புத் தோடு

கடகம்

இருள் சூழ்ந்த கரிய இரவின் அமைதியைக் கெடுக்கும் ஈனக்குரல், அந்தக் குடிசையிலிருந்து வந்து கொண்டிருந்தது. ஊரின் கடைக் கோடியிலிருந்துதான்.

"ஐயோ, அப்பா, அம்மா, வலி பொறுக்க முடியலையே" என்று கிழவி வீராயி படுத்த படுக்கையாகவே முனகிக் கொண்டிருந்தாள். தள்ளாத கிழவி, இன்றோ நாளையோ என்றிருந்தது. வியாதியோ அவள் ஆவியை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருந்தது.

அவள் மகன் முனுசாமியும், மருமகள் அஞ்சலையும் கிழவி படுத்திருந்த கட்டிலைச் சுற்றிக் கவலையோடு உட்கார்ந்திருந்தனர்.

இருந்தாற்போலிருந்து, கிழவி சொன்னாள்: "அப்பா, நான் பிழைக்க மாட்டேன். நீங்கள் புத்தியாய்ப் பிழைத்துப் போங்க. எப்படியாவது தேவர் வீட்டில் அடகு வைத்திருக்கும் என் சிவப்புத் தோட்டை மீட்டு, அஞ்சலைக்குப் போடு. அதைக் கைமாறிப் போகும்படி விட்டுவிடப் போகிறாய்? தலைமுறை தலைமுறையாக நம் வீட்டிலே இருந்து வருகிறது. அத்தை எனக்குப் போட்டாங்க. நான் அஞ்சலைக்குப் போட்டுப் பார்க்கணும் என்றிருந்தேன். என் மூச்சு இருக்கும்போது அது முடியவில்லை. வைத்த நகையை மீட்க முடியவில்லை" என்று விட்டு விட்டு, மூச்சுத் திணறித் திணறிக் கிழவி பேசினாள்.

"என்னம்மா, நீங்கள் இப்படிக் கவலைப் படுகிறீங்க. தோட்டை மீட்டு உங்கள் காதிலேயே போடறேன் பாருங்க. நீங்களும் பிழைத்துக் கொள்ளத்தான் போறீங்க" என்று தாய்க்கு மகன் தைரியம் கூறினான்.

"அத்தான் அலட்சியமா இருந்தாலும், நான் சும்மா விருப்பேனா அத்தை? அந்த ஏழுமலையான் கிருபையாலே நீங்கள் பிழைத்து எழுந்திருக்கவேணும். எங்களுக்கு வழி காட்டிக்கொண்டிருக்கணும்" என்று அஞ்சலையும் தன் மாமியாருக்கு ஆறுதலாக ஏதோ சொன்னாள்.

அன்றிரவு நடு சாமத்துக்கு மேல், கிழவிக்கு மிகத் தடபுடலாகப் போய்விட்டது. முனுசாமியும் அலறி அடித்துக் கொண்டு வைத்தியரை அழைப்பதற்கு ஓடினான். வைத்தியர் வந்தார். ஆனால் கிழவி மீண்டும் ஒரு முறை அவள் வீட்டுக் குடும்பச் சொத்தான சிவப்புத் தோட்டை ஞாபகப்படுத்தி விட்டுக் கண்ணை மூடி விட்டாள்.

கிழவியின் பிரிவுக்குப் பிறகு முனுசாமிக்கும், அஞ்சலைக்கும் தேவர் வீட்டில் நாற்பது ரூபாய் பணத்துக்காக அடகு வைத்திருந்த, அழுத்தமான கெட்டித் தங்கத்தினாலான தோட்டை மீட்பது பற்றிய யோசனையாகவே இருந்தது. என்னதான் கெட்டாலும் தோட்டின் மதிப்பு இருநூறு ரூபாய்க்குக் குறையாது. அதிலிருந்த தங்கத்துக்கே கண்ணை மூடிக்கொண்டு கொடுக்கலாம்.

ஒரு சமயம், முனுசாமி ஏற்றத்திலிருந்து விழுந்து காலை முறித்துக் கொண்டபோது, அவனுடைய வைத்தியச் செலவுக்காகத்தான், வீராயியின் காதில் கிடந்த அந்த சிவப்புத் தோடு, நாற்பது ரூபாய் பணத்துக்கு ராமசாமித் தேவர் வீட்டுப் பெட்டியில் போய் அடைக்கலம் புகுந்தது. கிழவி போய் வைத்துத்தான் பணம் கேட்டாள். "இவர்கள் பணத்தைக் கொடுத்து, நகையை மீட்கப் போகிறதில்லை, நகை நமக்குத்தான்" என்ற எண்ணத்தோடு அவர் பணம் கொடுத்தார்.

ஏனோ தெரியவில்லை, முனுசாமி உடம்பு தேறி வேலைக்குப் போய்ச் சம்பாதித்த போதிலும், இரண்டு வருஷமாகவே நகையை மீட்க முடியாமல் போய்விட்டது.

"எப்பாடு பட்டாகிலும், சாப்பிட்டோமோ, இல்லையோ அத்தை தோட்டைத் தேவர் ஐயாவிடமிருந்து மீட்டுவிடவேணும். அப்போதான் எனக்குத் தூக்கம் வரும்" என்று அஞ்சலை புருஷனிடம் சொன்னாள்.

"என் ராசாத்திக்கு அந்தத் தோட்டைப் போட்டு அழகு பார்க்காமல் போனால், நான் மீசை முளைத்த ஆம்பிளையில்லை" என்று முனுசாமியும் தன் கருத்த மீசையை ஒருதரம் முறுக்கி விட்டுக் கொண்டான்.

அன்று முதல், கட்டு செட்டாகயிருந்து, அவர்கள் காசு சேர்க்க ஆரம்பித்தார்கள்.



தகப்பனார் (சின்னப் பையனைப் பார்த்து) :— இன்றைக்கு எத்தனை கணக்குத் தப்பாகப் போட்டாய்?

சின்னவன் :— ஒரு கணக்குக் கூடத் தப்பாகப் போடவில்லை அப்பா.

தகப்பனார் :— அடே, அப்பா! ரொம்பக் கெட்டிக்காரனாய்ப் போய் விட்டாயே? கணக்கு வாத்தியார் என்ன சொன்னார்?

பெரியவன் :— அவர்தான் இன்றைக்குப் பள்ளிக்கூடத்துக்கு வரவே இல்லையே, அப்பா!



ஆறு மாத காலத்தில், அறுபது ரூபாய் வரைக்கும் அவர்கள் சேர்த்து விட்டார்கள். அஞ்சலைக்கு அப்போதுதான் நிம்மதி ஏற்பட்டது. தோட்டை மீண்டும் அடைந்து விடலாம் என்று மகிழ்ச்சி அடைந்தாள்.

முனுசாமி பணத்தை எடுத்துக் கொண்டு தேவர் வீட்டுக்குப் போனான். "ஐயா, பணம் கொண்டு வந்திருக்கிறேன். வட்டியும் முதலும் எவ்வளவு ஆச்சு. அம்மா வைத்த அந்த நகையைக் கொடுக்கிறீங்களா?" என்று தேவரிடம் பணிவோடு கேட்டான். அவன் கண்களில் ஆசையும் ஆவலும் ஒளிவிட்டன.

"என்னப்பா இது, நீ கேட்பது அதிசயமாயிருக்கு. உன் தாய் என்னிடத்தில் நகையும் அடகு வைக்கவில்லை. நான் பணமும் கொடுக்கவில்லை. யாரிடத்தில் கொண்டுபோய் வைத்தாளோ? நீ பைத்தியக்காரன். அவள் மூச்சு இருக்கும்போதே சரியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை" என்று தேவர் ஒன்றுமறியாதவர் போல் பேசினார்.

"ஐயா, அம்மா சரியாய்த்தான் சொல்லி விட்டுப் போனாங்க. உங்களிடமிருக்கும் நகையை மீட்டுத் தன் மருமகளுக்குப் போடும்படிச் சொல்லி விட்டுத்தான் போனாங்க" என்று சொன்னான் தொடர்ந்து.

"என்னப்பா, சொல்லுவதையே காதில் வாங்கிக் கொள்ளாமல் பேசுகிறாயே. போய் எங்கே வைத்தாளோ, அங்கு போய் வாங்கிக்கொள்." தேவரிடமிருந்து கிடைத்த கண்டிப்பு நிறைந்த பதில் இது.

முனுசாமி ஏமாற்றத்தோடு திரும்பினான். "மாமியார் விரும்பியபடி தோட்டைப் போட்டுக் கொள்ளப் போகிறோம்" என்று காத்திருந்த அஞ்சலைக்கும் ஏமாற்றம்தான். முனுசாமி மட்டும்தான் ஏமாற்றத்தை வெளிப் படுத்திக் கொள்ளவில்லை. வருத்தப்படவும் இல்லை. அதற்குப் பதில் ஏதோ பெருத்த யோசனையில் மூழ்கி உட்கார்ந்திருந்தான்.

* * *

ஒரு நள்ளிரவில், எல்லோரும் அயர்ந்திருக்கும் வேளையில், எப்படியோ தேவர் வீட்டில் நுழைந்து விட்டான். அந்தத் தோட்டை அவர் வீட்டிலிருந்து கொண்டு வந்துவிட வேண்டுமென்று ஒரே குறிக் கோள்தான் முனுசாமிக்கு. ராமசாமித் தேவர் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார். தெருவில் நாய்கள் ளையிட்டுக் கொண்டிருந்தன. பெட்டியைத் திறந்தான். அவன் தேடி வந்தது கிடைத்து விட்டது. அதை எடுத்துக் கொண்டான். அதற்குப்பதில் தான் கொண்டு வந்திருந்த அறுபது ரூபாய் பணத்தைப் பெட்டியில் வைத்தான். "நான் திருடவில்லை. தேவராகக் கொடுக்கா விட்டாலும், வட்டியும் முதலுமாகப் பணத்தை வைத்துவிட்டு, அடகு நகையை எடுத்துக் கொள்கிறேன்" என்ற திருப்தி அவனுக்கு. நகையை எடுத்துக்கொண்டு, எடுத்த காரியத்தை முடித்து விட்டோம் என்ற பெருமிதத்தோடு, வந்திருக்கும் இடத்தையும் மறந்து, அவன் கொஞ்சம் அலட்சியமாகவே திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் நித்திரையி லாழ்ந்திருந்த தேவரை மிதித்து விட்டான். "திருடன்! திருடன்!" என்று கத்திக் கொண்டே தேவர் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

முனுசாமி அவரிடமிருந்து தப்பித்துக் கொள்ள ஒரு முயற்சியும் செய்யவில்லை.

"ஐயா, நான்தான் முனுசாமி. நீங்களாகப் பார்த்துக் கொடுக்காத நகையை, நானாகவே அறுபது ரூபாய் பணத்தைப் பெட்டியில் வைத்து விட்டு எடுத்துக் கொண்டேன். என்னை விட்டு விடுங்கள். உங்களுக்கும் நஷ்டமில்லை, எனக்கும் நஷ்டமில்லை" என்று அவன் நியாயமாகச் சொல்லிப் பார்த்தான்.

முனுசாமியின் சமாதானத்தைத் தேவர் ஏற்றுக் கொள்பவரா யில்லை. "திருடன்! திருடன்!" என்று அவர் கூச்சல் போட்டார். எங்கெங்கே யிருந்தோ பலர் விழித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

எல்லாருடைய முன்னிலையிலும் முனுசாமி திருடனாக நின்று கொண்டிருந்தான். அவனுக்கு இப்பொழுது பேச வாய் வரவில்லை. அப்படிப் பேசினாலும், யார் அவன் பேச்சைக் கேட்கப் போகிறார்கள்?

பொழுது விடிந்ததும், முனுசாமி போலீசாரிடம் ஒப்படைக்கப் பட்டான். செய்தி அறிந்து ஓடி வந்த அஞ்சலை திகைத்துப் போனாள். "ஐயா, என் கணவன் திருடவில்லை. அவரை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினாள்; அழுதாள். அவளுக்கு இரங்குபவர்கள் அங்கு யாருமில்லை. தேவரிடம் மனச் சாட்சி செத்துக் கிடந்தது போல், நியாயமும் அங்கே செத்துக் கிடந்தது.

முனுசாமிக்கு மூன்று மாதங்கள் சிறை வாசம்; சட்டம் நியாயம் வழங்கிற்று.

இந்தத் தீர்ப்பைக் கேட்ட அஞ்சலை "ஐயோ அத்தான்! நீங்கள் திருடனா! தோடும் போய், அறுபது ரூபாய் பணமும் போய், நீங்கள் மூன்று மாதம் சிறைக்குப் போவதா?" என்று கதறினாள்.

அஞ்சலையின் கதறலைக் கேட்ட முனுசாமி திடுக்கிட்டு எழுந்தான். "அஞ்சலை என்ன இது?" என்று பட படப்போடு கேட்டான். அஞ்சலை மிரள மிரள விழித்தாள். முனுசாமியை ஒருதரம் ஆசையோடு தொட்டுப் பார்த்தாள். "அத்தான்! என்ன பயங்கரக் கனவு. நமக்கு அந்தச் சிவப்புத் தோடே வேண்டாம். நீங்கள் என்கூடவே இருந்தால் போதும்" என்றாள். பிறகு தான் கண்ட பயங்கரக் கனவை அவனிடம் சொன்னாள்.

"அஞ்சலை! என்னை அப்படி நினைத்து விடாதே! எனக்குக் கடவுள்மீது நம்பிக்கை உண்டு. காலைக்கே மணியக்காரரிடம் தாவா செய்யப் போகிறேன். அது நம் தோடாயிருந்தால் கட்டாயம் நமக்குக் கிடைத்துத்தான் தீரும். அதற்காக ஒருநாளும் திருடப் போக மாட்டேன்" என்று சொன்னான்.

"எனக்கு என்னவோ மனசு கேட்கவே இல்லை. விடியற் காலையிலே கண்ட கனவு பலிக்கும் என்று சொல்லுவாங்க" என்று தயங்கித் தயங்கிக் கூறினாள் அஞ்சலை.

"கனவாவது, பலிக்கவாவது. சரி, சரி; கோழி கூவி விட்டது. நீ போய் வேலையைக் கவனி. நான் முதல் காரியமாக மணியக்காரரிடம் போய்த் தோட்டை மீட்பதற்கு வேண்டிய காரியத்தைப் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கிளம்பினான் முனுசாமி.

"முனுசாமி! நீ மணியக்காரரிடம் போகவே வேண்டாம். இதோ இருக்கு உன் தோடு. வட்டி கூட வேண்டாம். முதலைக் கொடுத்தால் போதும்" என்று சொல்லிக் கொண்டே தேவர் அவன் வீட்டு வாசலில் வந்து உட்கார்ந்தார்.

முனுசாமிக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. தான் காண்பதெல்லாம் கனவுதானோ என்று எண்ணினான். கண்ணைப் பல முறை மூடி மூடித் திறந்து பார்த்தான். ஒருதரம் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான். தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான். தான் காண்பது கனவல்ல என்பதை உணர்ந்து கொண்டான்.

"என்னங்க தேவரே! நேற்று எங்க அம்மான் தோடே அடகு வைக்கவில்லை என்று சொன்னீங்க. இன்று காலம் கார்த்தாலே தோடும் கையுமாக வந்திருக்கீங்களே" என்று வியப்போடு கேட்டான்.

தேவர் தம் தவறை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார். தம் உள் மனசு தம்மை வாட்டி வதைத்ததை எடுத்துக் கூறினார்.

* * *

தேவர் தம் மனைவியின் காசு மாலையை வேறு ஒருவரிடம் அடகு வைத்திருந்தார். நேற்று முனுசாமி தோட்டை மீட்க வந்த போது தான் தம் மனைவியின் காசு மாலையைப் பற்றிய நினைவு அவருக்கு வந்தது. உடனே அதை மீட்டுவிடவேண்டும் என்று தீர்மானித்தார். முதல் நாள் மாலையில் வண்டி மாட்டை விற்ற பணத்தை வட்டியும் முதலுமாக எடுத்துக் கொண்டு மனைவியின் காசு மாலை அடகு வைத்த லேவாதேவிக்காரரிடம் போனார்.

என்ன ஆச்சரியம்! லேவாதேவிக்காரர் திடீரென்று மாரடைப்பால் காலமாகி ஒரு மாதம் கழிந்திருந்தது. அவர் மகன்தான் இருந்தான். தேவர் தம்முடைய காசு மாலையைப் பற்றி அவனிடம் சொன்னார். வட்டியும் முதலுமாகப் பணம் கொண்டு வந்திருப்பதாக அவனிடம் சொன்னார்.

லேவாதேவிக்காரரின் மகன் உங்கள் பெயரில் காசு மாலை இருப்பதாக அப்பா கணக்கில் இல்லை என்று சொல்லி விட்டான்.

தேவருக்கு ஒரு கணம் பூமியே சுழலுவது போலவும் ஆகாயம் இடிந்து தலையில் விழுந்து விட்டது போலவும் தோன்றியது. பிறகு தான் அவருக்கு நினைவு வந்தது. தம் பெயரில்



"உன் மருமகள் வருஷப்பிறப்பும் அதுவுமாக 'டிரஸ்' பண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாளே!"

"நம் லக்ஷ்மியின் புதுப் பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்கப் போகிறாளாம். வண்டிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்."

"ஏன்? சாவி தொலைந்து போய்விட்டதா? பசங்களாலேயே கதவைத் திறக்க முடியவில்லையா?"

இருக்க வேண்டாம் என்று தம்முடைய மனைவி பெயரில் வைத்திருப்பதாகச் சொன்னார். அவள் பெயர் லக்ஷ்மி என்றும் அந்தப் பெயரில் காசு மாலை அடகில் இருப்பதாகவும் சொன்னார். அவன் ஒரு தரம் கணக்கு நோட்டைப் பார்த்து விட்டு "ஆமாம் இருக்கிறது! இருந்தாலும் உங்களை எனக்குத் தெரியாது. கணக்குப் பிள்ளையும் ஊரில் இல்லை. நாளைக்கு வாருங்கள் அவரைக் கேட்டு விட்டுத் தருகிறேன்" என்று சொல்லி விட்டான்.

தேவர் திரும்பிவிட்டார். வரும்பொழுதெல்லாம் அவருக்கு முனுசாமியை மோசம் செய்ய நினைத்தது அவர் மனத்தை வாட்ட ஆரம்பித்து விட்டது. பொழுது விடிந்தவுடன் முதல் காரியமாக, தோட்டைக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு மறு காரியம் பார்ப்பது, என்று தீர்மானித்து விட்டார்; தம்முடைய தவறுதலுக்காக வட்டியைத் தள்ளிவிடுவது என்று முடிவு கட்டினார்.

இந்தச் சம்பவத்தைக் கேட்ட முனுசாமியும் அஞ்சலையும் மகிழ்ந்து போனார்கள். அஞ்சலை தன் மாமியாரின் சிவப்புத் தோட்டைக் காதில் மாட்டிக் கொண்டு மனம் குளிர்ந்து போனாள். தன் எதிரில் நின்று கொண்டிருந்த தன் கணவனின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினாள்.

தன் காலில் விழுந்து வணங்கிய அஞ்சலையைத் தூக்கிவிட்டான் முனுசாமி. சிவப்புத் தோட்டை மாட்டிக்கொண்டு மலர்ந்த முகத்தோடு நிற்கும் அஞ்சலையைப் பார்த்து "வா! இந்த வட்டிப் பணத்துக்கு உனக்குக் கைத்தறிச் சேலை வாங்கித் தருகிறேன். வரப்போகும் பொங்கலுக்கும் புடவை எடுத்தது போலிருக்கும்" என்று சொல்லி அஞ்சலையை அழைத்துக் கொண்டு அவன் கிராமத்துக்கு அருகில் உள்ள நகரத்துக்குக் கிளம்பினான்.

உற்சாகத்தோடு செல்லும் அந்தத் தம்பதிகளைப் பார்த்த தேவருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தம்மையும் மீறி "அடாடா! தன் தவறை உணர்ந்து அதைத் திருத்திக் கொள்ளும்போது உண்டாகும் இன்பந்தான் இன்பம். அதுதான் வாழ்க்கை" என்று சொல்லிக் கொண்டார்.

படித்துப் பாருங்கள்!

கம்பர் கவிதைக் கோவை II, III

(இரண்டாம் பாகம் – மூன்றாம் பாகம்)

கம்பர் கவியில் ஈடுபடாதவரே இல்லை என்று கூறலாம். தமிழர்களுக்குக் கம்பராமாயணம் ஒரு கவி யமுதம். அந்தக் கவியமுதை அள்ளி அள்ளிச் சுவைத்த யாழ்ப்பாணம் ஆசிரியர் திரு. அ. சே. சுந்தரராஜன் அவர்கள், அனைவருக்கும் அவ்வமுதைப் புகட்ட எண்ணி இந்த நூலைப் பதிப்பித்திருக்கிறார். கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் முதலியவற்றிலுள்ள கவிதைகளில் சிலவற்றைத் திரட்டி, கதைப் போக்குடன் குறிப்புரையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்; கம்பரின் கவிதைச் செஞ்சொற்களை ஆங்காங்கு உரை நடையில் கையாண்டு சுவையுறச் செய்திருக்கிறார்.

கிடைக்குமிடம்: திரு அ. சே. சுந்தரராஜன், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம், இலங்கை. விலை: ரூபாய் 2—8—0.

ஜனனி

அடுத்து அடுத்து வரும் சம்பவங்கள் இல்லை; நம் நெஞ்சுத் துடிப்போடு சேர்ந்து துடிக்கும் வேதனை அம்சம் எதுவும் இல்லை; பெற்ற வயிற்றைக் குளிர வைக்கும் தாயன்பு இல்லை; அன்பு காட்டி ஆதரித்து வளர்த்த தந்தையின் மனத்தைப் பூரிக்க வைக்கும் மகனின் பாசம் இல்லை; காதலன் சென்ற வழிமேல் விழி வைத்து ஊண் உறக்கமின்றிக் காத்திருக்கும் காதற் பெண்ணின் இதயத்தின் எதிரொலி இல்லை; ஆனால், இவை இல்லாமலே கதைகள் ஒவ்வொன்றுக்குள்ளும் ஏதோ ஒன்று இருந்து கொண்டு வாசகர்களைத் தன் வயமாக்குகிறது. அது இந்நூல் ஆசிரியரின் அதிசயமான சாதனைதான்.

எழுதியவர்: ஸ்ரீ லா. ச. ராமாமிருதம்; பிரசுரம்: ஜனனி பிரசுரம், 92-ஏ, ஆதியப்ப நாயக்கன் தெரு, சென்னை-1. விலை: ரூபாய் 3—0—0

காட்டு வழிதனிலே

"'இயற்கை வாழ்விற்குத் திரும்பிப் போ' என்று பலர் போதிக்கிறார்கள். அதற்கு முதற்படியாக இயற்கையோடு தனிமையில் ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது உறவாடு என்று நான் கூறுகிறேன். அப்படி உறவாடும்போது வாழ்க்கைத் தொல்லைகள் அனைத்தையும் மறந்து விட்டுக் கவிதையை மட்டும் மறவாதிருக்க வேண்டும். கவிதைதான் இயற்கைத் தேவியோடு நம்மைச் சேர்த்து வைக்கும் இன்பத் தோழியாகும்" என்கிறார் ஸ்ரீ பெ. தூரன், காட்டு வழிதனிலே என்னும் கட்டுரைத் தொகுதியிலே.

காட்டு வழிதனில் பெயர் தெரியாத நூற்றுக் கணக்கான வண்ண மலர்களைப் பார்த்து மகிழ்கிறோம். ஆனால் ஸ்ரீ தூரன் அழைத்துச் செல்லும் கட்டுரைத் தொகுதியாகிய 'காட்டு வழிதனிலே' இருக்கும் கட்டுரை மலர்கள், "இளமை" பாரதியின் நகைச்சுவை", "தலையெழுத்து", "மதம் அவசியமா!" என்ற பல தலைப்புக்கள் தாங்கிக் கருத்தைக் கவர்வனவாக மிளிர்கின்றன!

பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை; சென்னை-18. விலை: ரூ. 1-4-0.

முதல் நாள்

ஒருவர் பால் சாப்பிட்டார். "இன்றைக்குப் பால் மிகவும் நன்றாயிருக்கிறதே! ஏன்!" என்றார். "இன்றையிலிருந்து புதுப் பால்காரனை ஏற்பாடு செய்திருக்கிறேன். இன்று முதல் நாளல்லவா! பால் நன்றாயிருக்கிறது!" என்றாள் மனைவி. இப்படி "முதல் நாள்" என்ற கட்டுரை கூறுகிறது. இதேமாதிரி சுவாரஸ்யமான எட்டுக் கட்டுரைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

மராத்தியில் எழுதியவர்: ஸ்ரீ வி. ஸ. காண்டேகர்; மொழிபெயர்த்தவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4. விலை: ரூ. 1.

இணையில்லாத சிறந்த சுத்தமான வாசனை

○●○

தரத்தின் மேன்மையில் மைசூர் சந்தனத் தைலம் ஒன்றே உலகப் பிரசித்தி பெற்றது என்பதை யாவரும் நன்கு அறிந்ததே.

மைசூர் சர்க்காரின் முத்திரையுடன் ஸீல் வைக்கப்பட்ட அசல் புட்டிகளையே கேட்டு உண்மையான சரக்கையே வாங்குங்கள்.

அதிகாரம் பெற்ற விற்பனை ஏஜண்டுகளுக்கோ அல்லது நேரில் எங்கள் பாக்டரிக்கோ உங்கள் ஆர்டரை அனுப்புங்கள்.

○●○

கவர்ன்மெண்ட் சந்தண ஆயில் பாக்டரி, மைசூர்

தி பாவுஸோரி பெனிபிட் சிட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414 · மதராஸ்-5

தந்தி: 'EVERMENS' .... போன்: 85634



இவ்வருட
முதல்
மாதாந்திர சீட்டுகள்

மாதா மாதம் நூற்றுக்கணக்கான மக்கள் சேர்ந்து, சிரமமில்லாமல் சிறுகச் சிறுக சேமித்து சந்தோஷப்படும் எங்கள்

ஜனவரி மாத சீட்டு வரிசை
(4-வது வெள்ளிக்கிழமை ஏல வரிசை)


சந்தா செலுத்தும் கடைசி தேதி 19-1-53		முதல் ஏலத் தேதி 23-1-53
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டின் மதிப்பு
B	ரூ. 100/-	ரூ. 2,500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-
D	ரூ. 25/-	ரூ. 625/-
E	ரூ. 20/-	ரூ. 500/-
F	ரூ. 15/-	ரூ. 375/-
G	ரூ. 10/-	ரூ. 250/-
25 மாதங்கள்		25 மெம்பர்கள்

ரூ. 25க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகளின் செக் பெற்றுக் கொள்ளப்படும். அதற்குக் குறைந்த தொகையை மணியார்டர் அல்லது இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வேண்டுவோருக்கு இலவசமாக நிபந்தனைகளும் விண்ணப்ப பாரங்களும் அனுப்பப்படும்.

சிறுகச் சேமிப்பதற்கு உங்களுக்கு பயிற்சி அளிக்கிறோம்

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

நமது நேயர்களுக்கு மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!


3 வாசனைக் கலாரத்னங்கள்
கம் கம் ஜவாஜ்
அகர்பத்திகளில் அது உயர்ந்தது
கம் பால்
கம் அகர்
பூஜைகளுக்குரிய புனிதமான அகர்பத்தி
டி. எல். சுகந்தாலயா, வியாபாரிகள்,
பெங்களூர் 2


ENERGY WAFERS
NOURISHING
Salto
BISCUITS
ஜே. பி. மங்காராமின்
பிரசித்திபெற்ற
பிஸ்கோத்துகள்
மிருதுவானது
ருசியுள்ளது
மொறமொறப்பானது
ஜே. பி. மங்காராம் & கம்பெனி, குவாலியர்
ஏஜண்டுகள்: மெஸர்ஸ். ஜி. ஜெகநாதநந்த் நந்த்லால் & கோ.
1/94. ராமசாமி தெரு, மண்ணடி, மதராஸ்


கொடிய
ஜலதோஷமா?
விரைவில் 2 'ஆஸ்ப்ரோ'
வில்லைகள் சாப்பிடவும்
ASPRO

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

48. பெண்களும் பாதஹஸ்தாசனமும்

பெண்களுக்கு இடுப்புவலி சர்வ சாதாரணம். அவர்களுக்குத் தான் ஆண்களைவிட இடுப்பு அதிகம் வலிக்கும். அதற்குக் காரணமும் உண்டு. மாதா மாதம் வீட்டு விலக்காதல், மற்றும் பிரசவித்தல், இம்மாதிரியான காரியங்களெல்லாம் அவர்களுக்கு இருப்பதால், இம்மாதிரி அடிக்கடி இடுப்பு வலி வருகிறது. ஆனால், ஆரோக்கியமுள்ள எந்தப் பெண்களுக்கும் இம்மாதிரி வலிக்கக் காரணமே இல்லை. அப்படி ஏதாவது வலிக்கிறதென்றால், அவர்களுடைய உடல் உறுப்புக்களில் கோளாறு இருக்கிறது என்று அர்த்தம்.

நெருப்பில்லாமல் புகை கிளம்பாது என்பார்கள். அதைப் போலக் கோளாறில்லாமல் வலியுண்டாகாது என்று தீர்மானமாய்க் கூறலாம். இன்றையப் பெண்கள் உலகத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பெண்கள் இம்மாதிரி இடுப்புவலி, முதுகு வலி, வயிற்று வலி, தலைவலி என்று பலவித வலிகளுக்கு ஆளாகின்றனர் என்று சொன்னால் மிகையாகாது. இத்தனைக்கும் காரணம் நாகரிக மென்னும் பெயரால் சரியான உணவுத் திட்டமும், வாழ்க்கைத் திட்டமும் இல்லாமையே யாகும்.

பல குழந்தைகளைப் பெற்று அதனால் உடல் தளர்வேற்பட்டு, வயதாகி, இடுப்பு வலி, முதலிய வலிகள் இருக்கின்றன என்று சொன்னால் ஏதோ வயதாயிற்று ஒருகால் இருக்கலாம் எனலாம். ஆனால் அவர்களும் அப்படித்தான் வலிகளுடன் வாழவேண்டு மென்பதில்லை. எப்பொழுதும் ஆரோக்கியமாக இருக்கலாம். வயதானவர்கள் என்பதனால், சற்று விட்டுக் கொடுக்கலாம். இளம் வயதுப் பெண்கள் ஓரிரு குழந்தைகளைப் பெற்றதும் வயதானவர்களைவிட அதிகமாய்க் கோளாறுகளைச் சொல்லிக்கொண்டு பலமற்றவர்களாய் இருக்கின்றனர். மற்றும், இல்லறத்தில் கூட இருக்காத பெண்கள் இடுப்பு வலி, வயிற்று வலி, முதுகு வலி, தலைவலி என்று சொல்லும் போது இதென்ன ஆச்சரியம்! இம்மாதிரி வலிகளெல்லாம் பெண்களுக்கே உண்டான ''சாசனமா'' என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

அப்படி என்ன வீட்டு விலக்காவதும் குழந்தைகள் பெறுவதும் மிகப் பிரமாதமான காரியமா! அது இயற்கைதானே! மற்ற ஜீவராசிகளுக்கெல்லாம் இது நேரவில்லையா! அவைகளெல்லாம் சதா இம்மாதிரி வருந்துவதாய்க் காணவில்லையே! அந்தந்த சமயத்தில் ஏதோ கஷ்டப்படுகிறது. அதன் காரியம் முடிந்ததும் சில நாட்களில் மற்றவைகளைப் போலவே அவைகளும் திரிகின்றனவே! அப்படியிருக்க, மனித குலத்தார் மட்டும் சதா எந்த நேரமும் இம்மாதிரி வலிகளால் நலிவதேன்! என்று சற்று சிந்தனை செய்து பார்த்தால் தான் தெரியும்.

மக்கள் அவ்வாறு நலிவதற்குப் பல காரணங்கள் உண்டு. மற்ற ஜீவராசிகள் இயற்கையின்படி வாழுகின்றன. நாம் அப்படி வாழவில்லை. ''நாம் அப்படி வாழ, என்ன மிருகங்களா! நாம் பகுத்தறிவு படைத்த மனிதர்களல்லவா! நாமும் இயற்கையை ஒட்டி வாழ வேண்டுமென்பது சட்டமா! மற்ற ஜீவன்களுக்கு அறிவு இல்லை. அவைகள் இயற்கையை ஒட்டி வாழ வேண்டியது அதன் விதி. நாம் நம்முடைய அறிவை உபயோகப் படுத்தி எப்படியும் வாழலாம்'' என்று வீம்பு பேசுவதனால் வந்த தொல்லையே இதாகும். பல பிணிகளுக்கும் பல நோய்களுக்கும் ஆளாகிறோம்.

சாதாரணமாய் நமது வீடுகளில் இருக்கும் பசு, நாய், பூனை இவைகளின் வாழ்வைக் கவனித்தாலே தெரியும். சூல் கொள்ளுவதற்காக உறவாடும். பின் கிட்டவும் நெருங்காது. குட்டி போட்டு அதற்குப் பால் கொடுத்து வளர்த்து இனி அது தனித்து வாழலாம் என்ற நிலை வந்த பின்தான் மறுபடியும் உறவை நாடும். பெண் நாய், ஆண் நாயைக் கண்டு உறுமுவதும், பெண் பூனை ஆண் பூனையைக் கண்டால் சீறுவதும் அதன் உடல் நலனையும் தன் குட்டிகளின் உடல் நலனையும் பாதுகாக்க வேண்டியே அம்மாதிரி செய்கிறது. இயற்கையிலேயே அதற்கு அம்மாதிரி அறிவு அமைந்திருக்கிறது.


அதுபோலப் பெண்கள் ஆண்களுடன் சண்டை போடவேண்டுமென்று சொல்லவில்லை. இந்த இடத்தில் அவர்களின் பகுத்தறிவை உபயோகப் படுத்தி வாழவேண்டு மென்றுதான் வற்புறுத்துகிறேன். ஆனால், ஏனைய ஜீவராசிகளுக்கும் நமக்கும் ஒரு வித்தியாசமுண்டு. ஆணின் உதவி இல்லாமல் பெண் இனம் தன்னையும் தன் குழந்தைகளையும் காப்பாற்றிக்கொள்ள மற்ற ஜீவராசிகளுக்கு வகை தெரியும். மனித குலத்து மாதர்கள் அப்படிச் செய்யச் சாத்தியமில்லை. தொன்று தொட்டு வந்த சமூகப் பழக்க வழக்கங்கள் அதற்கு இடங் கொடாது. அது நியாயமுமல்ல. ஆனால் ஒருவரை ஒருவர் அனுசரித்து ஒருவர் நலனை ஒருவர் பேணித்தான் பகுத்தறிவை உபயோகப் படுத்தி வாழ்க்கை நடத்த வேண்டும்.

இப் பகுத்தறிவை உபயோகிப்பது என்பதுதான் இல்லறத்திலும் பிரம்மச்சரியம் அவசியம் கடைப் பிடிக்க வேண்டுமென்பது. ''இதென்ன கலியாணம் செய்தும் பிரம்மச்சர்யமா?'' என்று கேட்கலாம். ஆம் அவசியமான போது பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்கத்தான் வேண்டும். கலியாணம் செய்து கொண்டால் இஷ்டப்படி என்றைக்கும் இருப்பதென்று அர்த்தமல்ல. அப்படி யிருப்பதால்தான் பெண்களுக்கு அநேகமாக இம்



''ஏன் ஸார், நம்ம கிட்டு தன் நாயை வாங்கிக் கொள்ளச் சொல்லித் தொந்தரவு செய்கிறான். அவன் வீட்டிலேயே நீங்கள் குடியிருக்கிறீர்களே, அவனுடைய நாய் எஜமானனிடம் விசுவாசத்துடன் இருக்குமா?''

''நன்றாய்க் கேட்டீர்கள். ரொம்ப விசுவாசமா யிருக்கும். அந்த நாயை இது வரை மூன்று பேர்களிடம் விற்றும் அது அவனிடமே திரும்பி வந்துவிட்டது!''



மனைவி:— இன்றைக்கு லீவு நாளாயிற்றே! சாவகாசமாக இரும்புப் பெட்டி, பீரோ முதலியவைகளை நகர்த்தி அறைகளைச் சுத்தம் செய்யலாம் என்று நேற்றைக்கே நான் சொல்லியும் கூட இன்றைக்குப் பார்த்து விருந்தாளியைச் சாப்பிட அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே!

கணவன் (மெதுவாக):—அடி அசடே, அது தெரிந்துதான் அவரை அழைத்துக் கொண்டு வந்தேன்! பீரோ, இரும்புப் பெட்டி முதலியவைகளை யெல்லாம் கூலி ஆள் இல்லாமலே அவரைக் கொண்டு நகர்த்திக் கொண்டு விடலாமே!

மாதிரி இடுப்பு வலி, முதுகு வலி, வயிற்று வலி, மாதவிலக்குக் கோளாறுகள், கஷ்டப் பிரசவம், சோனிக் குழந்தை, குழந்தைக்குப் பால் இல்லாமை எல்லாம் ஏற்படுகின்றன.

இருவரும் ஆரோக்கியமாய் இருந்து, இயற்கையை ஒட்டி வாழ்ந்தால் இல்லறம் எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும்! இம்முறைகளைப் போதிப்பதற்காகத்தான் நீதி நூல்களும், அநேக குருகுலங்களும் ஏற்பட்டன. அவைகள் எல்லாம் இன்றைக்கு ஏட்டுச் சுரைக்காயாக இருக்கின்றன. இல்லறம் என்னும் குதிரைகளின் லகான் ஆண் பெண் இருவர் கைகளில் மட்டும் இருக்கின்றன. குதிரைகள் தறிகெட்டு ஓடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தம்பதிகளுடைய கடமை. அந்தக் குதிரைகளின் துணைகொண்டே நல்ல பாதையில் செலுத்தி நாம் சேரவேண்டிய இலட்சிய இடத்துக்குப் போய்ச் சேரலாம். குதிரைகளின் இஷ்டப்படி லகானை இழுத்துப் பிடிக்காமல் விட்டு விட்டால், முள் என்றும் கல் என்றும் பாராமல் காட்டு வழிகளில் கொண்டு சென்று கடைசியில் ஏதாவது பள்ளத்தில் தள்ளினாலும் தள்ளிவிடும். வாழ்க்கையில் அநேகர் இம்மாதிரிதான் பிரம்மச்சரிய மென்னும் லகானை இழுத்துப் பிடிக்காமல் திசை கெட்டு நோய்கள் நிறைந்த முள்களிலும், பிணிகள் நிறைந்த கற்களிலும் திரிந்து கடைசியில் சாக்காடு வெனும் பள்ளத்தில் விழுந்து விடுகின்றனர்.

இந்த லட்சணத்தில் கர்ப்பத் தடைச் சாதனைகளைப் பற்றி வேறு பிரசாரம் செய்யவேண்டுமென்று சில தலைவர்கள் முயல்கின்றனர். இப்படிச் செய்தால் மனித குலம் இன்னமும் மட்டரகமாகி, மகா பாதகத்தில் திரும்பும் என்பது திண்ணம். இதை மகாத்மா காந்தியடிகள்கூட வெறுத்தார்கள். அவர்கள் இருக்கும் வரை தைரியமாய் எதிர்த்துப் பேசுவார் யாரும் இல்லாமல் இருந்தது. அவர் மறைந்தபின் அவர் வழிகளைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்களே கர்ப்பத்தடை வேண்டுமென்கின்றனர்.

சமீபத்தில் டாக்டர்களின் கூட்டத்தில் ராஜாஜி அவர்கள் தைரியமாய் இதைக் கண்டித்துப் பேசி இருக்கிறார்கள். "ஏதோ லேடீஸ் கிளப்புக்கும், மற்றும் சினிமா, நாடகங்கள், கச்சேரிகள் முதலியவைகளுக்கும் போகும் நாகரிக ஸ்திரீகள் குழந்தைகள் இருந்தால் இடைஞ்சலாய் இருக்குமென்று கருதி இதை ஆதரிக்கின்றனர். ஆனால் இது நம்முடைய நாட்டுக்கு ஏற்றதல்ல" என்று சொன்னார். இம் முறை பட்டினங்களிலுள்ள படித்தவர்களுக்குத்தான் வசதியாகயிருக்கின்றன. கிராமங்களில் இருக்கும் சாதாரண ஜனங்களுக்கு உபயோகப்படுமா! அவர்களுக்கு யார் கற்பிப்பது! அப்படிச் சொன்னாலும், தெய்வ நம்பிக்கையுள்ள நமது மக்கள் ஏற்பார்களா! "அதெல்லாம் கடவுள் சித்தம் சாமி" என்று சொல்வார்களே!

உண்மையில் இம்மாதிரி தடைகளால் உடல் இன்னமும் சீர்கேடடையும். இப்பொழுது இடுப்பு வலி, முதுகு வலி, வயிற்றுவலி, தலைவலி என்று மட்டும் சொல்லும் சகோதரிகளுக்கு, ஜீவசக்தி குறைந்து, இன்னமும் பெரிய பெரிய வியாதிகளாய் வரும். அதைப் போக்கடிக்கப் புதிய புதிய மருந்துகளாய் டாக்டர்கள் சிபார்சு செய்வார்கள். கடைசியில் நம் நாட்டுப் பணம் கப்பல் ஏறவேண்டியதுதான். ஆண்களும் பெண்களும் ஒரு கட்டுப்பாடு, அச்சம், நாணம் இன்றித் திரிவார்கள். தேகம் இன்னமும் பலஹீனப்பட்டுப் போய்விடும். மனித குலம் மேலும் மோசமாகி விடும்.

இவ்வளவு சிரமப்பட்டு ஆங்காங்கு 'கிளினிக்'குகளில் கர்ப்பத் தடையைப் போதிப்பதை விட பிரம்மச்சரியத்தின் மேன்மையைப் பற்றியும் இல்லற ஒழுக்கத்தைப் பற்றியும் நோய்களின்றித் தேகம் திடமாய் இருக்க ஆசனம் செய்யும்படிக்கும், அவர்களுக்குச் சொல்லித்தர ஏற்பாடு செய்தால் உண்மையில் மக்களுக்குச் சேவை செய்தவர்களாவார்கள்.

இதில் ஈடுபடாத பெண்கள் உடலைத் திடமாய் வைத்திருக்க ஒழுங்கான உணவையும், தேகப் பயிற்சியையும் கைக்கொள்ள வேண்டும். வீட்டு வேலை செய்வதும் ஒருவித தேகப்பயிற்சியேயானாலும், அதுமட்டும் போதாது. இடுப்பு வலி, முதுகு வலி முதலிய வலிகள் வராமல் இருக்க வேண்டுமானால் அதன் சம்பந்தப்பட்ட கோளங்கள் ஆரோக்கியமாய் இருக்க வேண்டும். அதற்குப் பாத ஹஸ்தாசனம் மிகவும் உதவி செய்யும். "இது என்ன வெறுமனே குனிந்து பாதத்தைத் தொடுவதுதானே!" எனலாம். ஆம். அப்படிக் குனிந்தால்தான் நன்மையுண்டு. நன்றாய்க் குனிந்து நிமிர்ந்து வேலை செய்யும் பட்டிக்காட்டுப் பெண்களுக்கு இம்மாதிரி வலிகள் எல்லாம் வராது. அப்படி எப்பொழுதாவது அபூர்வமாய் வந்தாலும் ஒரு கஷாயம் போட்டுச் சாப்பிட்டால் போய்விடும். பட்டணத்துப் பெண்களுக்கு இம்மாதிரி குனிந்து நிமிர்ந்து உடலை வளைத்துச் செய்யும் வேலைகள் அதிகம் இல்லை. ஆனதினால், அவர்களுக்கு இடுப்பு முதுகு உறுதிப்படாமல் இருக்கிறது. அவர்களெல்லாம் பாத ஹஸ்தாசனம் செய்வார்களானால் இடுப்பு வலுவடையும்; முதுகு வலுவடையும். கர்ப்பப் பை உறுதியாகும். மாத விலக்குக் கோளாறுகள் வராது. எல்லா வலிகளும் போகும். கரு சிதைவு ஏற்படாது. சுகப் பிரசவமாகும். பால் சுரக்கும். பிரசவ வேதனையைத் தாங்கச் சக்தி உண்டாகும். சர்வாங்காசனமும், மத்ஸ்யாசனமும், சிரசாசனமும் செய்தார்களானால் மிக்க ஆரோக்கியமாய், சந்தோஷமாய் இருப்பார்கள். இல்லறம் நல்லறமாகும். (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

Regd. No. M. 4392

Registered as a newspaper in Ceylon



S. 200-50 TM